மாநகர சபை,

பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (28.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 305

## கிளிநொச்சியில் பட்டினி அபாயம்

# அரச உணவுக் களஞ்சியங்கள் காலி!

# 3 வாரமாக நிவாரண உணவு இல்லை!!

## வவுனியாவிலிருந்து எடுத்து வருவதற்கு முயற்சி

கொழும்பு, செப்ரெம்பர்28

போர் தீவிரமடைந்திருக்கும் வன்னியின் பிரதான மாவட்டமான - கேந்திரப் பிரதேசமான - கிளிநொச்சியில் உள்ள அரசாங்க உணவுக் களஞ்சியங்கள் எல்லாமே, வெறிதாகிவிட்டன - காலியாகிவிட்டன.

அதனால் நில புலங்களையும் வீடு வாசல்களையும் விட்டு வெளியேறி, பல தடவைகள், பல இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ள சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு கடந்த மூன்று வாரங்களாக நிவாரண உணவுப் பொருள் எதுவும் வழங்கப் படவில்லை!!

வவுனியாவில் உலக உணவுத் திட்டத் தினால் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் எடுத்துவரப்படாவிட்டால் பலர் பட்டினியால் மாளும் மிக அபாயகரமான நிலை ஒன்று உருவாகி உள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு, உயிரைக் கையில் பிடித்துகொண்டு, மாறி மாறிப் பல இடங்களுக்குச் சென்ற மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் ஏனைய உடனடித் தேவைகளையும் வழங்கி வந்த மனித நேய சர்வதேச மற்றும் அரச சார்பற்ற தொண்டு அமைப்புக்கள் வன்னியை விட்டு வெளியேறியதன் உடனடித் தாக்கம் இதுவென்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

ஐ.நா. சார்பு தொண்டு நிறுவனங்கள்

(20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலில் படையினர் இருவர் பலி

கொழும்பு, செப்.28

அரியாலை மற்றும் முகமாலைப் பகுதிகளை நோக்கி விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மோட்டார் தாக்குதல் மேற்கொண்டனர் என்று ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலில் இரு படையினர் கொல்லப்பட்டனர் என்றும் மூன்று படையினர் காயமடைந்தனர் என்றும் தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. முகமாலையில் ஆள்களுக்கு எதிரான கண்ணிவெடி வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் கூறப்பட்டது.(அ-01)

## வன்னிமக்களுக்கு உதவ கனேடிய தமிழ் இளைஞர் உண்ணாவிரதப் போர்

ரொறண்டோ, செப்.28

இலங்கையில் வன்னிப் பிரதேசத்தில் அல்லலுறும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்து கனடாவில் வாழும் தமிழ் இளைஞர்கள் 30 மணி நேர உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை கனேடிய நேரப்படி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பித்தனர்.

தாயகத்தில் அல்லலுறும் மக்களின் துன்பங்கள் வெளித் தெரியும் வண்ணம்

(20ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிக்கு 40 லொறிகளில் உணவுப் பொருள்கள் ஐ.நா.கொடியுடன் வாகன அணியாகப் புறப்படுகின்றது

## வியாழனன்று கிளிநொச்சி சென்றடையும்

கொழும்பு,செப்.28

வன்னியில், இடம்பெயர்ந்த மக்களின் நிவா ரணத்துக்கென 40 லொறிகளில், ஐ.நா. கொடியுடன் எதிர்வரும் வியாழக்கிழமை உணவுப் பொருள்கள் அங்கு சென்றடைய உள்ளன.

ஐ.நாவின் கொழும்பு அலுவலகப் பேச்சாளர் கோர்டன் வைஸ் இத்தகவலை வெளியிட்டார்.

ஐ.நாவின் முகவர் அமைப்பான உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்த வாகன அணி செல்லவுள்ளது.

வாகன அணி கொழும்பிலிருந்து நாளை புறப்பட்டு வவுனியாவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கோதுமை மா, சீனி, பருப்பு,

(20ஆம் பக்கம் பார்க்க)



குண்டுவீச்சில் காயமடைந்த தாயையும் பிள்ளையையும் காயமடைந்த ஒருவரை மீட்பதையும் படங்களில் காணலாம்

## கிளிநொச்சி நகரை அண்டி விமானத்தாக்குதல் ஒருவர் பலி; 3 சிறுவர் உட்பட 7 பேர் படுகாயம்

### பிள்ளையார் கோயிலும் 7 வீடுகளும் நாசம்

கிளிநொச்சி, செப்.28

கிளிநொச்சி நகரை அண்டிய இரத்தினபுரம் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று நண்பகல் 12.10 மணியளவில் விமானப்படை விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். சிறுவர்கள் மூவர் உட்பட ஏழுபேர் படுகாயமடைந்தனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலிருந்து அவசர நோயாளரை வவுனியாவுக்குக் கூட்டிச்செல்ல முடியாத நிலை!

வவுனியா, செப்.28

மாங்குளத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையே ஏ-9 பிரதான வீதியில் நிலவுகின்ற போர்ப் பதற்ற சூழ்நிலை காரணமாக கிளிநொச்சியில் இருந்து வவுனியாவுக்கு அவசர நோயாளர்களை அனுப்பிவைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

(20ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைத் தாக்குதல் அங்கி நீர்கொழும்பில் மீட்பு

கொழும்பு, செப்.28

நீர்கொழும்பு, குடாப்பாடு பகுதியில் தற்கொலைத் தாக்குதல் அங்கி உட்பட வெடிபொருள்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தகவல் ஒன்றின் பேரில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில்152 கிலோ ஸி-4 உயர் வெடி பொருள்கள், தற்கொலைக்

(20ஆம் பக்கம் பார்க்க)

# மனிதாபிமான தொண்டுப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டோருக்கு உதவ வசதியளிக்க வேண்டும்

## பிரிட்டிஷ் அரசு கோரிக்கை

லண்டன்,செப்.28

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கும், மனிதாபிமான உதவி நிறுவனங்களின் ஆளணியினர் சுதந்திரமாகச் சென்று தமது பணிகளைச் செய்யவும் வசதியாக மோதலில் ஈடுபட்டுள்ள இரு சாராரும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

இவ்வாறு பிரிட்டிஷ் அரசாங்கம் கேட்டுள்ளது.

இலங்கையின் வடபகுதியில் போர் தீவிரமடைந்துள்ளது குறித்து கவலை வெளியிட்டுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மலோச் பிறவுண் பிரபுவும் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் சாஹிட் மாலிக் ஆகிய

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயர்பட்டப்பீடப் பீடாதிபதியாக சத்தியசீலன் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 28

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதியாக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக பேரவை நேற்றுக் கூடியது. அப்போது பேராசிரியர் சத்தியசீலனை பீடாதிபதியாக நியமிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (1-2)

## மகாஜனன் குழந்தைக் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா அழைப்பு

இடம் :- யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
காலம் :- 30.09.2008 செவ்வாய்க்கிழமை மு.ப. 11மணி
தலைவர் :- திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்
(தலைவர், துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சிறப்புவிருந்தினர்:
திரு.வீரசிங்கம் பாலசுப்பிரமணியம்
(மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்,
நிர்வாக சபை உறுப்பினர் லண்டன் கிளை.)

மதிப்பீட்டுரை:
திரு. ஈ.குமரன்
(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)

பதிப்புக்குழு,
தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி,
உலகப் பழைய மாணவர் சங்கம்.

## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து தம்பித்துரை



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வதிவிடமாகவும் கொண்ட சவரிமுத்து தம்பித்துரை நேற்று (27.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அடைக்கலத்தின் அன்புக் கணவரும் தவமணி, அருள்மலர் (சறோ), றீற்ரா(சின்ரி), அருள்ராஜா (சுவிஸ்), செல்வராஜா, தர்மராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.09.2008)ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி சென்.பீற்றர்ஸ் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய். (78825)
தகவல்: குடும்பத்தினர்.

### பரமலிங்கம் ஜெயக்குமார் (B.Com.(Cey.) M.A.(IND.)

(மாவட்ட சமூக சேவை அதிகாரி, வவுனியா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பரமலிங்கம் ஜெயக்குமார் (DSSO, வவுனியா) 26.09.2008 வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் பரமலிங்கம் (நயினாதீவு)-காலஞ்சென்ற இராசரத்தினம் தம்பதியரின் அன்புப் புதல்வரும் கொக்குவிலைச் சேர்ந்த அமரர் துரைராசா மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் Dr.ரமணியின்(வவுனியா மாவட்ட வைத்தியசாலை) அன்புக் கணவரும் நிவேதிகா(மாணவி, இறம்பைக்குளம் மகாவித்தியாலயம், வவுனியா), நிதர்சனன், நிதூரன்(மாணவர்கள், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.பரமலிங்கம்(நயினாதீவு-தந்தை)
ப.வசந்தகுமார் (கிராமசேவை உத்தியோகத்தர் -கோண்டாவில் வடகிழக்கு ஜே/119 - சகோதரன்)
சு.சிவலிங்கம் (மைத்துனர்)

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (78829)

### செல்லையா மனோன்மணி



ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மனோன்மணி (26.09.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா (உரிமையாளர், வதனா வெல்டிங் வேக்ஸ்)வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜதுரை, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் ஆறுமுகம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், சபாரட்ணம்(பிரான்ஸ்), இந்திரா, ஜெயராஜசிங்கம் (உரிமையாளர், ஹரன் வெல்டிங் வேக்ஸ்), சந்திரதாஸ்(பிரான்ஸ்), கருணைராஜ் (பிரான்ஸ்), இராசேந்திரம் (உரிமையாளர், இராசன் வெல்டிங் வேக்ஸ்), புஸ்பராணி, சந்திரவதனா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயமலர் (பிரான்ஸ்), நடராசா, புஸ்பராணி, ரஜனி (பிரான்ஸ்), செல்வராணி (பிரான்ஸ்), செல்வமலர், சந்திரராசா, இராசகிளி(பிரான்ஸ்) ஆகி யோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

173/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர் (உரிமையாளர், ஹரன் வெல்டிங்)

## சித்திரப்போட்டியின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.28

உலக வதிவிட தினத்தையொட்டி 'யு.என்.ஹபிற்றாற்' நிறுவனம் நடத்திய சித்திரப் போட்டிக்கான பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் கலந்துகொள்வார்.

கடந்த ஜூன் மாதம் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட இப்போட்டியில் யாழ். மாவட்டத்தில் பரிசில் பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

க.பவதாரகா (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளைம.வி.), க.கபாஸ்கர்(தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.), ச.சுஜீவன் (நாவாந்துறை றோ.க. வித்தி.), சி.யெஜிதா (வல்வை சிவகுரு வித்தி.), அ.சுஷாணா (தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி). (202)


### கணனிகள் திருத்துதல்

சகலவிதமான கணனிகளும் ஒரே நாளில் திருத்திக் கொடுக்கப்படும். உங்கள் வீடுகளுக்கோ அல்லது அலுவலகத்திற்கோ வந்து திருத்திக் கொடுக்கப்படும். திருத்திய பின்னர் உத்தரவாதம் வழங்கப்படும்.

STR Computer System
380, Navalar Road, Nallur, Jaffna.
T.P. 0214590775, 0774192275

### கணனி வகுப்புகள்

MSOffice, Desk Top Publishing, Internet Technology, Accounting Package, Hardware Technology, Auto CAD போன்ற டிப்ளோமா கற்கைநெறிகளும் Certificate in Internet & E.mail, Certificate of Web Designing.

தரம் 8முதல் 8வரையான மாணவர்களுக்கு KIDS Program
சிறுவர்களுக்கான பயிற்சி நெறி
Dip.in ICT(Gr.- 10&11), GIT(Gr.- 12)
தொழில் புரிபவர்களுக்கான விஷேட வகுப்புக்கள் சனி, ஞாயிறு முழு நேரமும் கிழமை நாள்களில் 5-6 மணிவரையும் நடைபெறுகின்றன. குறைந்த கட்டணத்தில் தரமான சேவைகள்.

STR COMPUTER SYSTEM
384, Navalar Rd., Nallur, Jaffna.
TP: 021 4590775


### தகவல் தவறானது

27.09.2008 உதயன் 04ஆம் பக்கத்தில் பிரசுரமான க.குலசேகரம் என்பவரின் கண்ணீர் அஞ்சலியில் வலி.மேற்கு பிரதேச செயலகம் என்பதற்குப் பதிலாக பிரதேசசபை என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டது. அதனைத் திருத்தி வாசிக்கவும்.

(சி/554888) - விளம்பரதாரர்.


### கார் தேவை

EN:8794, EN:9487 எனும் இலக்கங்கள் உடைய கார்களை வைத்திருப்பவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். முன்னைய உரிமையாளர் இக் கார்களை வாங்க விரும்புகிறார்.

தொடர்பு: 0779602738, 0602217152

### இறைச்சிக் கோழி விற்பனை

நிறை கூடிய புறொயிலர் இறைச்சிக்கோழி, முட்டை என்பன விற்பனைக்குண்டு.

செம்மணி பாம்,
77/8, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.


### விளையாட்டு விழா

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்க சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா சங்கத் தலைவர் ந.ஜெனாளன் தலைமையில் இன்று பிற்பகல் 2 மணிக்கு சிறுவர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (202-86)

### படிவம்


## தங்கம் ரூ.24000 ஆனால் தங்கமெடலோ ரூ.300......?



உலக ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களை கௌரவிக்க, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்க தங்க மெடல் ஒன்றை வழங்குங்கள்.
மேலதிக விபரங்களிற்கு
எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்
212, கோவில் வீதி, நல்லூர்.
021 222 9607 , 0777-110610

## உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

## இதோ உங்களுக்காக...!

**RAM**
Kingston DDRII 512MB - 1,500/=(1Year Warr)
Kingston DDRII 1GB - 2,100/=(1Year Warr)
Kingston DDRII 1GB(800) - 3,250/=(1Year Warr)
Kingston DDRII 2GB - 4,750/=(1Year Warr)
Kingston DDR1 512MB(400) - 2,900/=(1Year Warr)
Kingston DDR1 512MB(333) - 3,900/=(1Year Warr)

**MEMORY CARD**
Kingston 1GB SD - 950/=
Kingston 1GB Meni SD - 950/=
Kingston 1GB Micro SD - 950/=
Sony 1GB M2 - 1,300/=
Sony 1GB Pro Duo - 1,350/=
Kingston 2GB SD - 1,400/=
Kingston 2GB Micro SD - 1,400/=
Kingston 1GB Micro SD - 1,500/=
Kingston 4GB SD - 2,250/=

**MOTHER BOARD**
Asus P5SD2-VM - 5,100/=(3Year Warr)
ECS ElightGroup 945 - 5,400/=(3Year Warr)
Asus P5GCMX-1333 - 6,100/=(3Year Warr)
Intel DG31PR965 - 8,100/=(3Year Warr)
Intel DG33FB - 14,250/=(3Year Warr)
Intel DG35EC - 14,500/=(3Year Warr)
Longton 478 (intel Chip) - 6,600/=(1Year Warr)

**DVD WRITER**
Samsung DVD R/W 22x Sata - 3,250/=(1Yer Warr)
LG DVD R/W 20x Sata - 3,400/=(1Yer Warr)
LG DVD R/W 20x IDE - 3,500/=(1Yer Warr)
Samsung DVD R/W 20x IDE - 3,500/=(1Yer Warr)
Sony DVD R/W 20x Sata - 3,800/=(1Yer Warr)
Sony DVD R/W 20x IDE - 4,000/=(1Yer Warr)
CD R/W - 2,600/=(1Yer Warr)
Combo - 3,000/=(1Yer Warr)

**MONITOR**
Prolink 15" CRT - 10,500/=(1Year Warr)
Samsung 17" CRT Flat - 15,750/=(3Year Warr)
View Sonic 17" CRT - 15,900/=(3Year Warr)
Samsung 15" LCD - 17,750/=(3Year Warr)
View Sonic 15" LCD - 17,900/=(3Year Warr)
View Sonic 17" LCD - 21,500/=(3Year Warr)
Samsung 19" LCD - 26,750/=(3Year Warr)
ViewSonic 19" LCD (WithSpeaker) - 27,500/=(3Year Warr)
Samsung 22" LCD - 36,500/=(3Year Warr)

**PROCESSOR**
Intel 1.8Ghz Celeron - 5,200/=(3Year Warr)
Intel 3.0Ghz LGA - 8,000/=(3Year Warr)
Intel 2.0Ghz Dual Core - 8,250/=(3Year Warr)
Intel 2.53Ghz Core2Duo - 14,900/=(3Year Warr)

**HARD DISK**
Samsung 80GB Sata - 4,500/=(3Year Warr)
Samsung 160GB Sata - 5,100/=(3Year Warr)
Samsung 250GB Sata - 6,200/=(3Year Warr)

**PRINTER**
HP 1460 Deskjet (color) - 4,900/=(1Year Warr)
HP 1005 Laserjet - 14,250/=(1Year Warr)
HP 4355 ALL in One - 17,900/=(1Year Warr)
(Printer, Copier, Fax, Scanner)
Samsung ML1640 Laserjet - 13,500/=(1Year Warr)
Samsung 5 in 1 Laserjet - 32,500/=(1Year Warr)
(Printer, Copier, Fax, Scanner, PhotoCopy)
Samsung 5 in 1 Laserjet - 42,500/=(1Year Warr)

**UPS**
Panora 650W - 5,900/=(2Year Warr)
Mercury 650W - 6,250/=(1Year Warr)
Prolink 650W - 6,200/=(1Year Warr)
DCP 650W with Software - 6,500/=(2Year Warr)

**WOOFER**
Logitech 2.1ch - 3,600/=
Creative 2.1ch - 4,100/=
Creative 5.1ch - 8,500/=
Microlap 5.1ch - 7,500/=

**TONER**
HP 49A - 5,000/=
HP 15A - 5,200/=
Samsung ML2010 - 7,500/=

**PEN DRIVE**
Kingston 1GB - 800/=
Kingston 2GB - 1,100/=(1Yer Warr)
Kingston 4GB - 1,850/=(1Yer Warr)
Kingston 8GB - 3,750/=(1Yer Warr)

THIS OFFER FOR ONE WEEK

MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்
அப்பையா ஸ்ரீகரன்

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே!
கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போவதெங்கே?
பாசமெல்லாம் பற்றறுத்து பரிதவிக்க விட்டு விட்டு
ஊரே அழவைத்துவிட்டு ஓடி மறைந்ததெங்கே?
உள்ளம் துடிக்குதைய்யா உன் பிரிவைத் தாங்காமல்
வேதனையே விலகவில்லை விழி தேடும்
- இடமெல்லாம் உன் விம்பம் தெரிகிறது.

உம் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மைதிலி நகை மாடம்,
89 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 7902

யாழ்.மைதிலி ஜுவலர்ஸ்
79 Z, செட்டியார் தெரு,
கொழும்பு - 11, 0112396239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்கு ஐ.நாவின் உணவு வாகன அணி; புலம்பெயர்ந்த மக்களின் போராட்டத்தின் விளைவே!

பட்டினியால் ஒட்டி உலர்ந்த வன்னி மக்களின் வயிற்றில் சிறுதுளி பாலையாவது வார்ப்பது போன்ற நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு ஐ.நா. கொடியுடன் கூடிய உணவு வாகன அணியொன்று அடுத்த சில தினங்களில் புறப்படவுள்ளது. இதுநாள் வரையும் சாவுச் செய்திகளையும், தம்மைக் கரையேற்ற வந்தவர்கள் என்று நம்பிக் கொண்டிருந்த சர்வதேச தொண்டு நிறுவனங்களின் வெளியேற்ற நிகழ்வும், எந்தப்பொருளும் இல்லா நிலையே தொடர்கின்ற அவலமும் வன்னி மக்களின் எதிர் கொள்வலாக இருந்தது. தற்போது நீண்ட நாள்களுக்குப் பின்னர் உணவுகளுடன் லொறிகள் வரவிருக்கின்ற செய்தி அவர்களின் நொந்துபோன உள்ளங்களிற்கு ஓரளவுக்கேனும் ஒத்தடம் கொடுக்குமென்றே எண்ணலாம்.

வன்னியில் கழுத்தைப் பிடித்து நெரிக்காத குறையாக அழுத்தங்களையும், மிரட்டல்களையும் - பிரயோகித்து இலங்கையரசு வன்னியிலிருந்து தொண்டு நிறுவனங்களை வெளியேற்றிய கையோடு, வன்னிக்கான உணவு விநியோகமும் தடைப்பட்டுப் போனது. பாதுகாப்புக் கெடுபிடிகள் அனுமதி வழங்குவதில் இழுத்தடிப்பு, உணவுப் பொருள்களைச் சுமந்து செல்லும் லொறிகள் மீதான எறிகணைத் தாக்குதல், ஆழ ஊடுருவும் படையின் கிளைமோர் தாக்குதல் என்பனவற்றை மேற்கொள்ளல் போன்ற படைத்தரப்பின் நேரடி, மறைமுகச் செயற்பாடுகளினால் வன்னி மக்களுக்கான உணவு விநியோகம் ஸ்தம்பித நிலையினை அடைந்திருந்தது. தற்போது சர்வதேசமும், ஐ.நா அமைப் புகளும் கொடுத்த அழுத்தங்கள் காரணமாகவே வன்னி மக்கள் மீது இதுவரையும் குண்டு மழையைப் பொழிந்து வந்த ஆட்சியாளர்கள் இப்போது கொஞ்சம் கருணை மழையையும் பொழிய இசைந்திருக்கின்றார்கள் எனலாம். மனிதாபிமானம் ஓரளவுக்கு எட்டிப்பார்க்கிறது. இவ்வாறு சர்வதேசமும், சர்வதேச மனிதநேய அமைப்பு களும் அரசுக்கு இடைவிடாது மக்கள் நலனுக் காக குரல் கொடுத்து வருவதில் புலம்பெயர் தமிழர்களின் பங்கும் இருக்கவே செய்கின்றது.

போரின் வெம்மையிலிருந்து தப்பித் துக் கொள்வதற்காக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள தமிழர்களிடையே ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவான கருத்து நிலையும், இலங்கையின் வட கிழக்கில் வசிக்கின்ற தமிழ் மக்களுக்கு தம்மாலியன்றதைச் செய்ய வேண்டுமென்ற அவாவும் மிகுந்திருப்பது வெளிப்படை. அவ்வாறான ஆதரவு நெருப்பினை கொழுந்து விட்டெரியச் செய்வது போன்று வன்னியில் உள்ள சர்வதேசத் தொண்டு நிறுவனங்களினை இலங்கை அரசு வெளியேற்றிய சம்பவம் அமைந்துவிட்டது.

வன்னியில் இன்னலுறும் மக்களின் துயரைத் தொண்டு நிறுவனங்கள் ஓரளவுக்காவது போக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமென்ற நம்பிக்கையே புலம்பெயர் தமிழர்களிடையே இருந்துவந்தது. ஆனால் அதனைத் தவிடு பொடியாக்குவது போன்று தொண்டு நிறுவனங்கள் வெளியேறியதால், வன்னி மக்களின் துயரைத் துடைப்பதற்கு இனிமேல் புலம்பெயர் தமிழர்

பறைகளைத் தாக்கியும், எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை. பொதுவாக ஒரு நாட்டின் அரசு சொல்வதையே வேதவாக்காகவும், உண்மைத் தனமானதென்றும் சர்வதேசம் நம்பு கின்றது. அந்த அரசினால் அடக்கி யொடுக்கப்படுகின்ற சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளின் தன்மைகளை உலக நாடுகள் தெரிந்திருந்தாலும், அவற்றைப் பெரிதாக எடுத்துக்கொள்ளாத போக்கே இன்னமும் தொடர்ந்து வரு கின்றது. அப்படித் தொடர்ந்தும் சிறுபான்மை மக்களின் விடயத்தில் பாராமுகமாக இருக்க முடியாது என்பதனாலேயே தற்போதைய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுபவையாக உள்ளன.

கனடா, நியூயோர்க், ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், அவுஸ்திரேலியா என்று உலகின் எல்லாத் திசைகளிலும் ஈழத்தமிழருக்காகவும்,

இவ்வாறு வன்னி மக்களின் அவலத் தைப் போக்குவதற்கு தம்மாலியன்ற வகையில் போராடி வருகின்ற புலம்பெயர் தமிழர்களின் குரலுக்கு செவிசாய்த்தோ, சர்வதேசச் சட்டங்களை மீறித் தொண்டு நிறுவனங்களை வெளியேற்றி கோபத்திலோ என்னவோ ஐரோப்பிய ஒன்றியத் திடமிருந்தும் ஓரளவு எச்சரிக்கையோடு கூடிய அறிவுறுத்தல்கள் அரசுக்கு விடப்பட்டுள்ளது.

இலங்கையரசும், விடுதலைப் புலி களும் பொதுமக்களினதும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களினதும் உரிமைகளை சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் அடிப்படையில் முழுமையாக மதிக்க வேண்டும். மக்களுக்கு நிவாரண உதவிகள் சென்றடைவது முக்கியமானது. இதேவேளை இந்த விநியோகங்கள் பாதுகாப் பாக எடுத்துச் செல்லப்படுவதை உறுதி செய்வதற்கு சர்வதேசச் சுயாதீனக் கண்

களோடு வன்னியை விட்டு ஐ.நா அமைப்புகள் ஓடியிருந்தன. இப்போது உணவுப் பொருள்களோடு வருகின்ற ஐ.நா அமைப்பினர் சில நிபந்தனைகளுடனேயே தமது உணவு விநியோகத்தையும் மேற்கொள்ளவுள்ளனர்.

அதாவது எவருடைய தலையீடுமின்றி, உணவுப் பொருள்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐ.நா அமைப்பே வழங் கும். அத்துடன் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருள்கள் களஞ்சியப்படுத் உதப்படாது உடனடியாகவே முழுவதும் வழங்கி முடிக்கப்படும் என்பனவே அந்த நிபந்தனைகள். இவ்விரு நிபந்தனைகளும் வார்த்தை ரீதியாகவும், அறிக்கை ரீதியாகவும் பக்கச்சார்பற்ற முறையில் மக்களுக்காக ஐ.நா தொண்டாற்றுகின்றது என்பதனை நிறுவுவதற்கு மட்டுமே பயன்பட முடியும். மற்றும்படி யதார்த்த

## அரசு சொல்வதையே வேதவாக்காகக் கொள்ளும் சர்வதேசத்தின் போக்கில் சிறிது மாற்றம் தென்படுகிறது...?

அவர்களின் விமோசனத்திற்காகவும் வெவ்வேறு வடிவங்களில் நிகழ்த்தப்படுகின்ற கவனயீர்ப்பு போராட்டங்களால் தன் உறக்கத்தைக் கொஞ்சமேனும் கலைத்து, அழுத்தங்களையும் இலங்கையரசு மீது பல்வேறு நாடுகளும் பிரயோகிக்கத் தொடங்கி விட்டன.

காணிப்பாளர்கள் செயற்பட வேண்டும் என்று கொஞ்சம் காட்டமான தன்மை யோடு ஐரோப்பிய ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் வன்னி மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கை அரசு, புலிகள் என



நியூயோர்க்கில் எதிர்ப் போராட்டம்

இந்தக் கவனயீர்ப்பு நிகழ்வுகளுக்கு சிகரம் வைத்தது போன்று, அண்மையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியுயோர்க் நகரிலுள்ள ஐ.நா தலைமை யலுவலகத்தில் உரை

இருதரப் பினருக்கும் விடுக்கப்படும் செய்தியாக இருந்த போதும், இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப் பட்டுள்ள பல விடயங்களில் இலங்கையரசின் நடவடிக்கை களையே விமர்சித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படு

பூர்வமான செயற்பாடுகளுக்கு இந்த நிபந்தனைகள் பொருத்தமற்றவையாகவே காணப்படுகின்றன.

ஏனெனில் களஞ்சியப்படுத்தும் வசதிகள் இல்லாவிட்டால் குறிப்பிட்ட நாள்களுக்குள் உணவுப் பொருள்களை விநி யோகித்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் அவை பழுதடைந்து விடும். குறித்த ஒரு பகுதிக்கு மக்களை ஒன்று கூடச் சொல்லிப் பொருள்களை வழங்குவதும் சாத்தியமற்றது. போரின் கோரத்தால் திசைக் கொன்றாய் சிதறிப் போயுள்ள மக்கள் கூட்டத்தை போர் உக் கிரமாக நடைபெறும் வேளையில் ஓரிடத்தில் கூட வைப்பதோ, அவ்வாறு மக்கள் ஒன்று கூடினாலும் சீரான முறையில் உணவுப் பொருள்களை விநியோகிப்பதோ சாத்தியமற்றது.

அத்தோடு ஐ.நா அமைப்பைச் சேர்ந்தவர்கள் சில நாள்கள் மட்டுமே வன்னியில் தங்கி நின்று உணவு விநியோகத்தை மேற்கொள்ளப் போகின்றார்கள். இந்தச் சில தினங்களுக்குள் எவ்வளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்? அவர்கள் எங்கெங்கு தங்கியுள்ளனர்? யார், யாருக்கு என்னென்ன தேவை? என்றதரவுகளை எல்லாம் அறிந்து கொள்வதற்கும் விநியோகத்தை விரைவாக மேற்கொள் வதற்கும் பிரதேச செயலகங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவற்றின் துணையின்றி தாமே சுயாதீன மாக வழங்குவது எவ்வளவு தூரம் நடைமுறைக்குப் பொருந்தும்? என்ற வினாவும் எழுகின்றது.

இவையெல்லாம் சாத்தியமானாலும், ஐ.நா அமைப்பு, தாம் கொண்டு சென்ற உணவுப்

## எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருள்கள் மக்களுக்கு உரிய முறையில் சேர வகை வேண்டும்

கள்தான் செயலில் இறங்கவேண்டும் என்ற காலத்தின் கட்டளையைச் சிரமேற்கொண்டு, தாம் விழுதெறிந்து, பரந்து வாழுகின்ற பகுதிகளி லெல்லாம் - முன்னெப்போதுமில்லாதவாறு - பெருமெடுப்பில், உணர்ச்சி பொங்கிட புலம் பெயர் உறவுகளால் 'வன்னி மக்களுக்கான அவலத்தை நீக்க உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கோரிக்கையை விடுத்தும், இலங்கை அரசின் கொடுமையைக் கண்டித்தும் கவனயீர்ப்பு நிகழ்வுகள் நடைபெற்றபடியே உள்ளன.

### அரசு சொல்வதையே வேத வாக்காகக் கொள்ளும் சர்வதேசத்தின் போக்கு

இதற்கு முன்னரும் இலங்கையின் ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டு, அவர்களை அது துவம்சம் செய்கின்ற வேளைகளில் எல்லாம் தமிழ் மக்களால் இலங்கையிலும், புலம்பெயர் நாடுகளிலும் பல ஆர்ப்பாட்டப் பேரணிகளும், எழுச்சி நிகழ்வுகளும் நடைபெற்றே வந்தன. எனினும் அவையெல்லாம் ஈழத்தமிழர் விடயத்தில் தூங்கிக் கொண்டிருப்பதாகப் பாசாங்கு பண்ணுகின்ற சர்வதேசத்தின் செவிப்

நிகழ்த்தியபோது ஐ.நா தலைமையகத்துக்கு வெளியே திரண்டிருந்த தமிழர்கள் வன்னி மக்களின் அவலநிலையையும், இலங்கையரசின் ஒரவஞ்சனையான ஆட்சி முறையினையும் வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தினர். தமிழ் மக்களின் ஆயுத ரீதியான போராட்டத்தை மாத்திரமன்றி இவ்வகையான சாத்வீகப் போராட்டங்களையும் மழுங்கடிக்கச் செய்ய வேண்டும் என்பதே பேரினவாதத்தில் ஊறித்திளைத்தவர்களின் பெரு விருப்பாகும். அதற்காக நியூயோர்க்கில் வன்னி மக்களின் அவலத்தை வெளிப்படுத்தப் புலம்பெயர் தமிழர்களால் நடத்தப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தை பிசுபிசுக்கச் செய்யும் நோக்கோடு அரசுக்கு ஆதரவான குரலை ஒலிப்பதற்காக ஒரு சில பெரும்பான்மை இனத்தவர்கள் அங்கே தமது 'அரசசார்புப் போராட்டத்தை' முன்னெடுத்த போதிலும், அலைய லையாய் குவிந்த தமிழ் மக்களின் சாத் வீகப் போராட்டக் குரலுக்கு முன்னால் ஏவிவிட்ட பொம்மையாய், மனனஞ் செய் யப்பட்ட வரிகளை ஒப்புவித்த பெரும்பான்மை இனத்தவர்[illegible] எடுபடவே இல்லை.

கின்றது.

### ஐரோப்பிய ஒன்றியத்தின் சூடான அறிக்கை

சூடான வார்த்தைகளோடு ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை அரசினைக் கொஞ்சம் அதிர வைத்துள்ளது. ஏற்கனவே அமெரிக்கா அரசும் இலங்கையரசின் செயற்பாடுகள் மீதான அதிருப்தியை வெளிக்காட்டுவதைப் போன்றே கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது. இந்நிலையில் தனக்கெதிரான கருத்துநிலை ஆழமாக வேர்விடுவதை அரசுத் தரப்பு புரிந்து கொண் டுள்ளது. எனவே அதனை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் ஒன்றாக, உலகின் முன்னால் தான் நல்ல பிள்ளைக்கு நடிப்பதற்காக ஐ.நாவின் கொடியோடு வாகனத்தொடரணிமூலம் ஓமந்தையூடாக வன்னி மக்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்ப இலங்கையரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் போரினாலும், நோயினாலும், பசியினாலும் கலங்கி அழுதுநின்ற மக்களின் கண்ணீரை விடவும், மிரட்டலான தொனியில் இலங்கையரசு விடுத்த அறிவிப்பே முக்கியம் என்ற தோரணையில் மூடை, முடிச்சு

பொருள்கள் முழுவதையும் மக்களுக்குக் கொடுக்கும் போது அவற்றை வாங்கிப் பேணிவைக்கக் கூடிய வசதி இடம்பெயர்ந்த மக்களுக்கு இல்லை. ஏனெனில் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளால் வன்னி மக்களுக்கு பசியையும், பயத்தையும் தவிர வேறு எந்த உடைமைகளும் சொந்தமாக

ஓவண்யன்

இல்லை. எனவே ஐ.நா தொண்டு நிறுவனங்கள் 'கொண்டுபோன உணவுப் பொருள்களைக் கொடுத்து முடித்தால் சரி' என்ற தோரணையில் தேவைக்கும் அதிகமான உணவுப்பொருள்களை வழங்கும் போது, அவற்றைப் பெற்று தொடர்ந்து பேணக் கூடிய வசதி மரநிழலையும், வெறு வெளிகளையுமே உறைவிடமாகக் கொண்ட வன்னி மக்களுக்கு இருக்கின்றதா? என் பதை ஒரு கணமாவது ஐ.நா அமைப்புகள் சிந்திப்பதே சரியான முறையினைக் கண்டறிய வழி சமைப்பதாக இருக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறைப் பிரதேசத்தில்
# கடந்த காலங்களில் வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெற நடவடிக்கை

வடமராட்சி,செப்.28

பருத்தித்துறை, வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட சுழற்சி முறைக் கடன்களை மீள அறவீடு செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கடற்றொழில் பரிசோதகரிடம் இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை கடற்றொழில் சங்கங்களினது அறிக்கைகள், கணக்கு அறிக்கைகள், யாவும் கடற்றொழில் பரிசோதகராலும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராலும் பரிசோதிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டுமெனவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார்.

(202-236)

## மாணவர்களுக்கு மூக்குக்கண்ணாடி

யாழ்ப்பாணம்,செப்.28

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்கும் பார்வைக் குறைபாடுடைய மாணவர்களை இனங்கண்டு அம்மாணவர் களுக்கு மூக்குக்கண்ணாடிகள் வழங்க யாழ். விழிப்புணர்வோர் சங்கத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

சத்திர சிகிச்சை செய்யவேண்டியவர்களுக்கும் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓட்டோ உடன் விற்பனைக்கு

இந்தியத் தயாரிப்பான 'சுஜாஜியோ' ரக டீசல் ஓட்டோ உடன் விற்பனைக்குண்டு. QD XXXX தொடர் இலக்கமுடைய ஆறு பயணிகளும் பொருள்களும் எடுத்துச் செல்லக்கூடிய வசதிகள் உண்டு. ஒரு லீற்றர் டீசலுக்கு 46 கி.மீற்றர் பாவிக்கக்கூடியது.

தொடர்பு: 0777550596 (சி/554578)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய மாணவி தர்மபுத்திரன் - குமுதினி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**றஜித்தா**

2008ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதன்மை நிலையில் 143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு மேற்படி வித்தியசாலை அதிபர், ஆசிரியர்களையும் தென்மட்டுவில் வளர்மதி கல்வி நிலைய ஆசிரியர் சமூகத்தையும் பாராட்டுவதோடு றஜித்தாவையும் பல்கலையும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா, அப்பா, அம்மா, அண்ணா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார்

மட்டுவில் தெற்கு. (சி/554572) தகவல்:க.கனகரத்தினம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இவ்வாண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 137 புள்ளிகளைப் பெற்ற யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை மாணவி எமது அன்புக்குரிய

**செல்வி இங்கிதை மெய்யழகன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேன்மேலும் கல்வியில் சிறப்பான அடைவுகளைப்பெற அரசடி விநாயகனின் ஆசியை வேண்டுகிறோம்.

மு.இராசநாயகம் (பெரியமாமா) குடும்பத்தினர்.

மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (78809)

## 29ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி **பூபதி சின்னத்துரை**

மலர்வு 15.03.1946 உதிர்வு 31.08.2008

கடந்த 31.08.2008 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி திருமதி பூபதி சின்னத்துரை அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் மேற்கு. இணுவில். கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (78815)

## விளையாட்டு விழா

வலி.வடக்கு,செப்.28

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சங்க சனசமூக நிலைய சிறுவர் பாடசாலையின் விளையாட்டு விழா சங்கத் தலைவர் ந.ஜெனாளன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிறுவர் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(202-86)

* * *

யாழ்ப்பாணம், செப்.28

உலக சிறுவர் தினத்தையொட்டி நெடுந்தீவு அபிவிருத்தி மையம் நடத்தும் பிரதேச முன்பள்ளிகளுக்கிடையிலான மெய்வல்லுநர் நிகழ்வு நாளை திங்கட்கிழமை பி.பி 1.30 மணிக்கு மையத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அருட்திரு ஆர்.யோண் செல்வம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவிற்கு, தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி பி.எஸ். தியாகராஜா பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திருலிங்கநாதன், நெடுந்தீவு பிரதேச வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி செல்வி தாமரைச் செல்வி, நெடுந்தீவு பங்குத்தந்தை வணபிதா வெஸ்லி அன்ரனி, பிரம்மஸ்ரீ பா.புவனேந்திரசர்மா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (60)

* *

யாழ்ப்பாணம், செப்.28

சிறுவர் பாதுகாப்பு அமைப்பு, சாந்திகம் அனுசரணையுடன் புத்தூர் மேற்கு (ஜே/273) சிறுவர் கழகத்தினர் நடத்தும் விளையாட்டு விழா கலைமதி விளையாட்டரங்கில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலி.கிழக்கு பிரதேசசபை பொறுப்பதிகாரி திருமதி த.கோமளவல்லி கலந்து கொள்வார். (202)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலைக்கு அருகில் அமைதியான சூழலில் 5படுக்கை அறை உள்ள வீட்டுடன் 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0719236350, 077 1117038 (சி/554855)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 021 4591438, 0776 916929

## தவறிவிட்டது

இராசையா திருப்பதி என்பவருடைய தே.அ.அ. (733523816V) 15.09.2008 சுன்னாகத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் கண்ணதாசன் பான்சிக் கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.077 9237565 (78885)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வழிமுறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புஷ்பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவநர். சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடித் தொலைபேசி - 2380488, 2360694, 4873929. (78886)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் USA, கனடா, ஐரோப்பா, லண்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் PR உள்ள மணமகன்மார் உள்ளனர். மணமகள் அமையும் வரை எவ்வித சேவைக்கட்டணமும் அறவிடப்படுவதில்லை. 24 மணி நேரம் தொலைபேசி வசதி உண்டு. விவாகரத்துப் பெற்ற பெண்களும் தொடர்பு கொள்ளலாம்.

லண்டன் தொடர்பு: 0044 7961139759, 0044 7535384166, 0044 7502340714

Fax No. : 0044 2086810707 (78786)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 28வயது நட்சத்திரம் பூசம் 2ஆம் பாதம் 29 கிரகபாவம் 12ல் செவ்வாய் கனடா பிரசார உரிமையுடைய மணமகனுக்கு தகுதியான மணப்பெண் தேவை.

தொடர்பு: 060 2219004 (78814)

## கட்டடம் விற்பனைக்கு

யாழ்.நகரில் மையப் பகுதியில் வியாபாரக் கட்டடத் தொகுதி ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 6933 (சி/554861)

## ஒத்துமாறல்

கண்டி தேசிய பாடசாலையில் கடமையாற்றும் நூலகவிஞ்ஞான பாட ஆசிரியை குருநகர் யாழ்.மாவட்ட பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 021 2263808 (சி/554553)

## நெற்செய்கைக்கு காப்புறுதி செய்யுமாறு பெரும்பாக உத்தியோகத்தர் ஆலோசனை

வடமராட்சி,செப்.28

விவசாயிகள் தமது நெற்செய் கைக்கு காப்புறுதி செய்வது நன்மை தரும். பயிரழிவுகள் ஏற்படும்வேளை களில் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள் வதுக்கு அது உதவிபுரியும்.

இவ்வாறு புலோலி கமநல சேவை கள் நிலைய பெரும்பாக உத்தியோ கத்தர் எஸ்.உருத்திரேஸ்வரன் ஆலோ சனை வழங்கியுள்ளார்.

ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபா வீதம் நெற் காப்புறுதியை செய்கை பண்ணப்படும் பரப்பளவுக்கு ஏற்ப செய்தால் பயிரழிவு ஏற்படும் சந்தர்ப்பங்களில் நஷ்ட ஈட் டைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(202-236)

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
### தரம் 6 அனுமதி 2009

2008ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் எமது கல்லூரியில் படிவங்களைப் பெற்று அனுமதிக்காக 20.10.2008இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றனர்.

(சி/554867) அதிபர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய மாணவனும் கரவெட்டி மேற்கு சுப்பிரமணியம் - சரோஜினி தம்பதியின் செல்வப் புதல்வனுமாகிய

**செல்வன் சுப்பிரமணியம் திலக்ஷன்**

2008ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்கும் பாடசாலையில் முதன்மைநிலை அடைந்தமைக்கும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் கல்வியில் மேலும் சிறப்புற தச்சை ஐங்கரனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: பெரியப்பா குடும்பத்தினர், மாமாமா: சற்குநநாதன் குடும்பத்தினர், இரத்தினசிங்கம் குடும்பத்தினர், கந்தசாமி குடும்பத்தினர்.

கரவெட்டி மேற்கு, கரவெட்டி. (சி/554573)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பொடியன் பிலிப்பு



அல்லாரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் பிலிப்பு நேற்று (27.09.2008) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அமலோற்பவதின் அன்புக் கணவரும் சின்னப்பொடியன் - ஆனாசி தம்பதியரின் பாசமிகு மகனும் கபித்தான் - செபமாலை தம்பதியரின் அன்பு மருமகனும் மெற்றில்டா கிருபைராணி (கொடிகாமம்) காலஞ் சென்ற தேவகிருபைராசா, பாத்திமநாயகி, ஜேருட்கிருபா (லண்டன்), இதயமலர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராயப்பு, அருளப்பு, காலஞ்சென்றவர்களான மரிய தாஸ், யேசுதாஸ், ஞானப்பிரகாசம் (கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரன் யேசுதாசன், நல்லதம்பி (லண் டன்), கமலதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் அன்ரனி சியா, ஆன் டெறன்சியா, ஜெனாந், நிசாந், ஈசாந், றொஷாந்தன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 11 மணியளவில் புனித செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வடக்கு, கொடிகாமம். (78818) தகவல்: குடும்பத்தினர்.

### அந்தோனிப்பிள்ளை திரேசம்மா (குணம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை திரேசம்மா நேற்று (27.09.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் மேரி றெஜினாவின் பாசமிகு தாயும் த.அன்ரனியின் (மிருசுவில்) அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அல்பிரட் தங்கம் ஏபிரகாம் மற்றும் ஞானம்மா, பேபி ஆகியோரின் சகோதரியும் மேரி அனோஜாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.09.2008) திங்கட்கிழமை பி.ப.3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சில்லாலை கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டபின் சில்லாலை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மேரி றெஜினா அன்ரன் (மகள்).

செபஸ்தியான் வீதி, சில்லாலை. (78817)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூயோர்க்கில் கிடைத்த இனிப்பும் கசப்பும்

ஐக்கிய நாடுகள் சபையின் 63ஆவது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர்கள் சிலரும் நியூயோர்க் சென்றிருக்கின்றனரல்லவா? அந்தக் குழு நியூயோர்க் சென்றடைந்தமை முதல் அங்கு பல்வேறு உலகத் தலைவர்களையும் சந்தித்துப்பேசியது. ஐ.நா. கூட்டத் தொடரில் உரையாற்றுவது மட்டுமல்ல ஜனா





திபதியின் நோக்கம். அங்கு வந் திருக்கும் அண்டை நாடுகள் உட்பட சர்வ தேசத்தின் முக் கிய தலைவர்களைத் தனித் தனியே சந்தித்து அவர் களுக்கு 'ஐஸ்' வைத்து வன்னி யுத்தத்திற்கு ஆதரவும் உதவியும் கோருவதிலேயே ஜனாதிபதியும் அவரது பரிவாரங்களும் குறியாக இருக்கின்றனர் என்று அங்கு நடக்கின்ற சில சம்பவங்கள் புலப்படுத்துகின்றன.

ஜனாதிபதியின் இத்தகைய சந்திப்புகளில் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுவது நோர்வேத் தரப்பினருடனான சந்திப்பும், பாகிஸ்தானின் புதிய அதிபருடனான சந்திப்பும்.

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைப் பிரச்சினையில் நல்ல பட்டறிவுப்பாடம் உள்ளவருமான எரிக் சொல்ஹெய்ம், இலங்கை சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதராக இருந்த ஜோன் ஹன்ஸன் போவர் ஆகியோரை கடந்தவாரம் நியூயோர்க்கில் சந்தித்துப் பேசினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நீண்டகாலத்துக்குப் பிறகு -நோர்வே தரப்பின் அனுசரணையுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசுத்தரப்பு தன்னிச்சையாக வெளியேறிய பின்னர் - அதுவும் வன்னிப்பகுதி மீது பாரிய யுத்தம் ஒன்றில் அரசுப்படைகள் மும்முரமாக ஈடுபட்டிருக் கின்ற தருணத்தில் - இந்தச் சந்திப்பு இடம்பெற்றிருக்கின்றது.

சமாதானமே வேண்டாம் என்ற பிறகு சமா தானத் தரகர்களுடன் இனி என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது என்ற எண்ணத்தில் நோர்வேத் தரப்புடன் தொடர்புகளை மெல்லத் தவிர்த்துக்கொண்டு ஒதுங்கியிருந்த இலங்கை அரசத் தலைவருக்கு நியூயோர்க்கில் அவர்களை (நோர்வேப் பிரதிநிதிகளை) சந்திக்க நேர்ந்தமை தர்மசங்கடத்தை ஏற்படுத்தி விட்டதாம். அதுவும் அதிகாரத் தனத்தின் உச்சிக்குச் சென்று, வன்னியில் இருந்து ஐ.நா.உட்பட்ட தொண்டு நிறுவனங்களையும் வெளியேற்றி விட்டதால் ஏற்பட்டிருக்கின்ற புதிய திருப்பத்துக்கு மத்தியில் நோர்வேத் தரப்பை சந்திக்க வேண்டிய இக்கட்டு மஹிந்தருக்கு ஏற்பட்டுவிட்டது. இந்தச் சங்கடமானநிலைமையில் நோர்வேப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது விடயங்கள் குறித்து கருத்துகள் பரிமாறப்பட்டன என்ற விவரம் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை. ''மீண்டும் ஒருதடவை சமாதானத்துக்கு முயற்சித்துப் பாருங்களேன்! யுத்தத்தில் புலிகளை முழுமையாக வெல்ல மாட்டீர்கள் என்று நாங்கள் முன்பே உங்களுக்கு கூறியிருந்தோம் அல்லவா! இப்போதும் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. நீங்கள் சம்மதித்தால் பழையபடி உடனடியாகவே வேலைகளைத் தொடங்க நாங்கள் தயார்.'' என்று சொல்ஹெய்மும், ஹன்ஸன் போவரும் ஜனாதிபதியைக் குடைந்தெடுத்திருக்கிறார்கள் என்று இப்போது தகவல்கள் கசிந்திருக்கின்றன.

தற்போதைய தமது நிலைப் பாடுகளை எப்படியெல்லாம் சொல்லிப் புரியவைப்பது என்று தம்மை தயாராக்கிக் கொண்டு போன தலைவருக்கு ''புலிகளை யுத்தத்தால் வெல்லமுடியாது'' என்று நோர் வேத் தரப்பு பாவித்த வசனம் கொஞ்சம் சூடேற்றி விட்ட தாக தெரிகின்றது.

''வெல்லமுடியாமலா கிளிநொச்சியின் வாசல்வரை சென்றிருக்கின்றோம்? கிளிநொச்சி நகரைப் பிடிப்பதற்கு இன்னும் வெறும் நான்கு கிலோமீற்றர் தூரம்தான் இருக்கிறது. அடுத்த தடவை நான் உங்களைச் சந்திக்கும்போது எனது படையினர் கிளிநொச்சி யில் இருப்பார்கள். அவர்களு டன் (புலிகளுடன்) இனி சமாதானப் பேச்சு என்ற கதைக்கே இடமில்லை'' என்று திட்டவட்டமாக நோர்வேத் தரப்பிடம் கூறிய ஜனாதிபதி, வழக்கம்போல இம்முறையும், புலிகள் சிறுவர்களை பலவந்தமாக படைக்குத் திரட்டுகின்றார்கள், தெற்கில் பயணிகள் பஸ்களில் குண்டுகளை வைத்து அப்பாவிகளைக் கொல்கிறார்கள், பொதுமக்களை தமது யுத்த நடவடிக்கைகளில் பகடைக்காய்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுப்பட்டியலையும் சொல்ஹெய்ம் தரப்பிடம் எடுத்து விட்டிருக்கின்றார்.

ஆனால், வருடக்கணக்கில் இலங்கையில் இருந்து வன்னிக்கும் கொழும்புக்குமாக ஓடி ஓடிக் களைத்துப்போன சொல்ஹெய்முக்கும், ஹன்ஸன் போவருக்கும் யதார்த்தம் புரியாமல் இருக்குமா என்ன...! அதனாலோ என்னவோ, ஜனாதிபதியின் விளக்கங்கள் குறித்து அவர்கள் போதிய அக்கறை கொள்ளவில்லை என்றே தெரிகிறது.

அரசசார்பற்ற வெளிநாட்டு மனிதாபிமான அமைப்புகளை வன்னியிலிருந்து வெளியேற்றிய விவகாரத்தில் இருதரப்புக்கும் இடையில் சற்று கூடுதல் வாக்குவாதம் இடம்பெற்றிருக்கிறது என்றும் பேச்சடிபடுகிறது. ''யுத்தத்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதையும் அந்த மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கிக்கொண்டிருந்த பன்னாட்டு தொண்டு அமைப்புகளை வெளியேற்றியமையையும் நோர்வே ஏற்றுக்கொள்ளாது என்ற சாரப்பட ஜனாதிபதிக்கு சொல்ஹெய்ம் சில 'இறுக்கமான' செய்திகளையும் போட்டிருக்கின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள். ''மனிதாபிமானப் பணியாளர்களால் புலிகள் அதிக நன்மையடைந்தார்கள். ஏன், உங்களுடைய நாட்டைச் சேர்ந்த 'நோர்வேஜின் பீப்பிள் எய்ட்' என்ற நிறுவனத்தின் வாகனங்களைக்கூட புலிகள் பலவந்தமாக எடுத்திருக்கிறார்களே அது உங்களுக்குத் தெரியாதா?'' என்று பதிலுக்கு நமது மஹிந்தரும் கொஞ்சம் காரமாகவே கதைத்திருக்கிறார். மொத்தத்தில் அன்றைய தினம் நியூயோர்க்கில் இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையில் ஒரு 'குட்டிப்பனிப் போர்' மூண்டு அடங்கியிருக்கின்றது என்றே தகவல்கள் கசிகின்றன.

**அதிசயன்**

வெறும் 45 நிமிடங்களே நடந்து முடிந்த இந்தச் சந்திப்பின் முடிவில் அங்கு இரு தரப்பும் என்ன பேசிக்கொண்டன என்ற விடயங்கள் வெளியில் விடாமல் இருதரப்புமே அடக்கி வாசித்தமைக்கு அங்கு நடந்த காரசாரமான விவாதங்கள், 'வெருட்டல்கள்' என்பவை தான் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

* * *

இந்த பத்தியின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல நியூயோர்க் சென்ற ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது சகாக்களும் மிகவும் ஆர்வத்துடன் சந்தித்துக் கொண்ட மற்றொருவர் பாகிஸ்தானின் புதிய ஜனாதிபதி அஷிப் அல் சர்தாரி.

பர்வேஸ் முஷாரப் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் பாகிஸ்தானிடமிருந்து இலங்கைக்கு 'திருப்திகரமான' உதவிகள் கிடைத்து வந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த உதவிகள் தொடர் ந்தும் கிடைப்பதை உறுதிப்படுத்திக்கொள் வதே இலங்கைத் தரப்பின் இலக்காக இருந்தது.

ஏனென்றால், முஷாரப்போடு எதிரும் புதிருமாக இருந்தவரான சர்தாரி, முஷாரப் முன்னெடுத்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்மாறாகவே செயற்படப்போகிறார் என்ற கருத்துநிலை பரவலாக எழுந்திருந்தது. அதனை உறுதிப்படுத்தும் வகையில், முஷாரப்பினால் பதவிநீக்கம் செய்யப்பட்ட பிரதம நீதிபதியுடனான சர்தாரியின் நட்புறவு உட்பட சில விடயங்கள் பாகிஸ்தானில் அரங்கேறிக்கொண்டிருந்தன.

எனவேதான் முஷாரப்பினால் 10 நாள்களுக்கு ஒரு தடவை என்ற விகிதத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டு வந்த ஆயுதக் கப்பல், புதிய அரசாலும் அதிபர் சர்தாரியாலும் நிறுத்தப்பட்டு விடுமோ என்ற அங்கலாய்ப்பு கொழும்புத் தலைவர்களை சற்று ஆட்டி வைத்திருந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அதிபர் சர்தாரியை சந்தித்த மஹிந்தருக்கும் அவரது படையினருக்கும் நல்ல சந்தோஷம்! ஏனென்றால், முஷாரப் காலத்தில் கிடைத்ததைப் போலவே, - வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் அதிகமாக - இராணுவ உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு சர்தாரி சம்மதித்து விட்டாராம். ''நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். பயப்படும்படியாக நான் ஒன்றும் கெடுதல் செய்ய மாட்டேன்'' என்ற சாரப்பட இலங்கை அதிபரிடம் எடுத் துக்கூறி அவரை ஆசுவாசப்படுத்தியிருக்கிறார் பாகிஸ்தான் அதிபர் சர்தாரி என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல் அச்சுறுத்தல் பாகிஸ்தானுக்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று ஒரு புதிய குண்டை சர்தாரியின் தலையில் தூக்கிப்போட்ட நம்முடைய ஜனாதிபதி, அதற்கும் ஏதாவது 'மருந்து' இருந்தால் தாருங்கள் என்று வேண்டினார் என்றும் தெரிகிறது. இந்த விடயம் தொடர்பாக வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் எப்படியோ துப்பு அறிந்து விடயத்தைத் போட்டுடைத்திருக்கின்றன. இலங்கை கூறிய விமானக் காய்ச்சலுக்கு 'குளிசை' ஏதும் வழங்குவது பற்றி பாகிஸ்தான் வாய் திறக்கவில்லை என்றும் அந்தச் செய்தி ஏஜென்சிகள் சூசகமாகத் தகவல் தந்திருக்கின்றன.

எது எப்படியோ இம்முறை நம்மவர்களுக்கு நியூயோர்க் பயணம் ஒருபக்கம் - நோர்வேத் தரப்புடன் கொஞ்சம் கசப்பையும் மறுபுறம் - பாகிஸ்தானுடன் நல்ல இனிப்பையும் கொடுத்திருக்கின்றதாம்! ★

# அர்ப்பணிப்பு உணர்வும் கலைமீதான ஈடுபாடும் கொண்டு சிற்பத் துறையில் இளம்வயதிலேயே மிளிரும் சிற்பி

சரவணபவன் அருளகன் என்ற 19 வயது இளைஞன் சங்குவேலி சிவஞானப்பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் வசித்து வருகின்றார். மானிப்பாய் இந்துக்கல்லூரியில் க.பொ.த. [சா/த] கற்ற இவர் போரூட்டினால் நடத்தப்பட்ட அலுமினியம் பொருத்தும் பயிற்சிநெறியையும், சண்டிலிப்பாய் பிரதேச



செயலகத்தால் நடத்தப்பட்ட மரவேலைப் பயிற்சி நெறியையும் பூர்த்தி செய்தவர்.

கனேடிய உலகப் பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் மரவேலையைக் கற்பிப்பதற்கான நெறிகளைப் பயின்ற இவர், தற்போது சர்வோதயம் நடத்தும் தச்சுவேலைப் பயிற்சிநெறிக்கான போதனாசிரியராகக் கடமையாற்றுகிறார். கோயில்களுக்கான வாகனங்களை இந்த இளம் வயதிலேயே செதுக்க வல்லவரான அருளகனை உதயனுக்காக அவரது இல்லத்தில் நேர் கண்டோம்.

**கேள்வி:** சிற்பத்துறையில் ஈடுபட வேண்டுமென்ற ஆர்வம் எப்படி ஏற்பட்டது?

**பதில்:** பாடசாலையில் நான் கல்வி கற்கும் காலத்திலேயே சித்திரம் வரைவதில் எனக்கு ஆர்வம் அதிகமாக இருந்தது. அது வளர்ந்து இன்று என்னைச் சிற்பத் துறையிலும் ஈடுபட வைத்துவிட்டது. என்னுடைய அப்பா சிற்பங்கள் செய்யும் ஒருவரின் வீட்டுக்கு கூரை 'சீற்' போடுவதற்காகச் சென்றார். அவருக்கு உதவியாக நானும் சென்றேன். அங்கு சிற்பம் செய்பவரால் குதிரை வாகனமொன்று செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அதனைப் பார்த்த எனக்கும் இது போன்ற வாகனங்களைச் சிற்பமாகச் செதுக்க வேண்டுமென்ற எண்ணம் துளிர்விட்டது. அந்த எண்ணத்திற்கு வடிவம் கொடுத்ததன் விளைவாக கோயிலுக்கு வாகனம் செய்யும் முயற்சிகளில் இறங்கத் தூண்டியுள்ளது.

**கே:** கோயில்களுக்கு இதுவரை என்னென்ன வாகனங்களைச் செய்துள்ளீர்கள்?

**ப:** முதன்முதலில் என்னுடைய அப்பாவின் கொல்லப்பட்டறையில் தயாரிக்கப்பட்ட உளி போன்ற சிறிய ரகக் கருவிகளைக் கொண்டு ஒரு யானைக் குட்டியையும், பிள்ளையாரையும் செதுக்கினேன். இவற்றைச் செய்துமுடித்தபோது என்னாலும் சிற்பங்களைச் செதுக்கமுடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. கூடவே என் குடும்பத்தாரினதும், ஏனையவர்களினதும் பாராட்டுக்களும் கிடைத்தன. என்றாலும் என் னுடைய முழுத் திறமையையும் வெளிக்கொண்டு வந்தது சங்குவேலி சிவ ஞானப் பிள்ளையார் ஆலயத்திற்கு நான் செதுக்கிக் கொடுத்த எலி [மூர்ஷிக] வாகனந்தான்.

**கே:** உங்களைச் சிறந்த சிற்பியாக அடையாளப்படுத்திய எலி வாகனத்தின் உருவாக்கம் பற்றிக் கூறமுடியுமா?

**ப:** சங்குவேலி சிவஞானப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியிலிருந்து 'மஞ்சமுண்ணா' மரம் ஒன்றைத் தறித்தார்கள். அதன்போது நான் ஆலயக் குருக்களிடம் சென்று 'வெட்டப்பட்ட அந்த மரத்தைத் தந்தால் பிள்ளையாருக்கு வாகனம் செய்து தருகிறேன்' என்று கூறினேன். ஆலயக் குருக்களும் மகிழ்வோடு அந்த மரத்தை எனக்களித்தார். அத்தோடு சிற்ப வேலையை நான் தொடங்கியதும், தினசரி என் வீட்டுக்கு வந்து சிற்ப வேலையைப் பார்வையிட்டு அவர் ஊக்கமும் அளித்தார்.

## கண்பார்க்கக் கை செய்யும் என்பதனை நிரூபித்து கோயில் வாகனங்களைச் செய்தவர்

**கே:** இந்த எலி வாகனத்தை நீங்கள் தனியாளாகவே நின்று செய்து முடித்தீர்களா?

**ப:** இல்லை. பலரின் உதவியும், ஒத்துழைப்பும் எனக்குக் கிடைத்தன. குறிப்பாக என்னுடைய சிற்பத்துறை வளர்ச்சியில் அக்கறை கொண்டவரான உடுவிலைச் சேர்ந்த 'சிறி' என்பவர் என்னுடைய முன்னைய சிற்பங்களில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை இம்முறை திருத்திக்கொள்ள உதவினார். அத்தோடு தான் செய்த மூர்ஷிக வாகனமொன்றின் படத்தையும் தந்து என்னை நெறிப்படுத்தினார். இதைவிட என்னுடைய அம்மா, அப்பா, அக்கா என என் குடும்பத்தார் அனைவரும் அதிகாலை இரண்டு மணிவரை என்னுடன் நித்திரை விழித்து இருந்து ஒத்தாசைகளும் புரிந்தார்கள். எல்லோருடைய கூட்டிழைப்பின் பயனாக மிகச் சிறந்த முறையில் மூர்ஷிக வாகனத்தை உருவாக்கி விநாயகர் சதுர்த்தியன்று ஆலயத்துக்கு வாகனத்தை அர்ப்பணித்தேன். இதனைப் பார்த்துப் பாராட்டிய ஆலய நிர்வாகத்தினரும், மக்களும் ஒரு சிங்க வாகனத்தைச் செய்யும் பொறுப்பையும் என்னிடம் தந்துள்ளார்கள்.

**கே:** வேறு ஆலயங்களில் இருந்து வாகனங்கள் செய்து தரும்படி அழைப்புகள் வரவில்லையா?

**ப:** என்னுடைய மூர்ஷிக வாகனத்தைப் பார்வையிட்ட பலரும் தத்தமது ஆலயங்களிற்கு வாகனங்களைச் செய்து தரும்படி என்னை அணுகிவருகின்றார்கள். எனினும் தற்போது நான் செய்துகொண்டிருக்கும் சிங்க வாகனத்தின் வேலைகளை முடித்த பிறகே அவற்றைச் செய்வது பற்றித் தீர்மானிக்கவேண்டும்.

**நவயுகன்**

**கே:** ஆரம்பத்தில் சிறியரகக் கருவிகளைக் கொண்டு சிற்பங்களைச் செய்ததாகக் கூறினீர்கள். தற்போதும் அப்படிர்தானா?

**ப:** இல்லை. முன்னர் மரத்தை அரிவதற்கும், சீவுவதற்கும் பிறரின் உதவி தேவைப்பட்டது. தற்போது இலங்கை வங்கியின் கடனுதவியுடன் மரம் சீவும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்துள்ளேன். சிற்பக்கலை புனிதமானது. பணம், பொருள் என்பவற்றை முதன்மைப் படுத்தாது அர்ப்பணிப்பு உணர்வுடன் ஈடுபடும்போதே சிற்பத்தில் உயிர்த்தன்மை ஏற்படுகின்றது என்பது என் எண்ணமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட
ப.நோ.கூ.ச.தலைவரும், எமது
திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழக
உறுப்பினருமாகிய
லயன் P.கிரிதரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

### நடராஜா பத்மநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்.

## நெஞ்சம் நெகிழ ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 12.06.1951

உதிர்வு 10.10.2007

அமரர்

### வரதராஜா இராஜகுமார்

ஆண்டொன்று பேனாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவுத் துயர்
ஏங்கித் தவிக்கின்றோம் - உங்கள் நினைவுகளில்
அன்பு கொண்ட உத்தமராய் வாழ்ந்திருந்து

அன்புடன் எம்மை எல்லாம் அரவணைத்தே
ஆசையுடன் இதயத்தில் இடம்பிடித்து வாழ்ந்தவேளை

காலனவன் சதி செய்ய
கணப்பொழுதில் கலைந்தீரே - எம்மைவிட்டு
உறவுகள் எத்தனை இருந்தென்ன உலகிலே
தேடுதலால் ஒருபோதும் தேறிடாது எம் மனது
தேடினாலும் காண்போமா உங்கள் அன்பு முகம்

திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி. (78767)
மனைவி,
பிள்ளைகள்.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கொழும்பில் பிரபல கம்பனியில் மேற்பார்வையாளராகப் பணிபுரியும், தீயபழக்கமற்ற, 41 வயதுடைய DIVORCED மணமகனுக்கு மணமகள் தேவை. சைவ போசனத்தவருக்கு முன்னுரிமை. தொ.இல.011 - 2587130.

## தேவை

Colombo இல் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு யாழ்.பிரதேசத்திற்கான Company Rep தேவை. யாழ்.பிரதேச Sales Field இல் அனுபவமிக்க 40 வயதிற்குட்பட்டவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொ.இல.
0776380850,
0773897141. (சி/55486)

## யாழ்.கல்வி வலயத்தில் விவசாய அறிவுப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளில் ஜீ.சி.ஈ. சாதாரண தரத்தில் விவசாயத்தை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கிடையேயான வலய மட்ட விவசாயப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்ட போட்டியில் தெரிவான முதல் மூன்று மாணவர்களின் விவரங்களை அடுத்தமாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பதாக வலயப் பணிமனைக்கு அனுப்பு வைக்குமாறு அதிபர்களை வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

யாழ்.கோட்ட மாணவர்களுக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நல்லூர் கோட்ட மாணவர்களுக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் கோப்பாய் கோட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் வலய மட்டப் போட்டி நடைபெறும். (202–302)

## ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு திருக்குறள் மனனப்போட்டி

யாழ்ப்பாணம், செப்.28

நல்லூர் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த ஆரம்பக்கல்வி பிரிவு மாணவர்களிடையே திருக்குறள் மனனப்போட்டி நடத்தப்படவுள்ளது.


அடுத்தமாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் இப்போட்டி நடைபெறவுள்ளதாக கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் தெரிவித்தார்.

பாடசாலை மட்டப்போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்றுள்ள மாணவர்களின் விவரத்தை தர ரீதியாக வகைப்படுத்தி கோட்ட மட்டப் போட்டியில் கலந்துகொள்பவர்களின் விவரத்தை உடனடியாக அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (202– 302)


A LIFE - TIME CHANCE

STUDY MEDICINE


கிழக்கு ஐரோப்பாவில்(BELARUS)




Belarus க்குப் புறப்பட்டுச் சென்றுள்ள 8 ஆவது மாணவர் அணி



| | | | |
|---|---|---|---|
| ஆன் பிரவீனா கீதாஞ்சலி ரமேஸ்குமார் கொட்டாஞ்சேனை, கொழும்பு | குலசபாநாதன் துஷ்யந்தன் மட்டக்களப்பு | மதன் சபாநாயகம் யாழ்ப்பாணம் | பொன்ராசா மயூரன் திருகோணமலை |



| | | | |
|---|---|---|---|
| ராஜேந்திரன் அருண் வவுனியா | ரவீந்திரன் சஜீதன் கொக்குவில் | சாந்தலிங்கம் ராஜதீபன் மட்டக்களப்பு | சோபனா ரவி தெஹிவளை, கொழும்பு |

பொறியியலின் (IT) ஏனைய பாடநெறிகளும் உள்ளன.
எந்தக் கற்கை நெறிக்கும் ஆகக் குறைந்த தகைமை க.பொ.த சாதாரண பரீட்சையே
விண்ணப்பங்கள் 15 ஆம் திகதி ஒக்டோபர் 2008 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
இன்றே விண்ணப்பித்து, 20 நாட்களுக்குள் புறப்படுங்கள்.

வங்கி அறிக்கை, விசா தொடர்பான விசாரணை
அனுசரணையாளர் (Sponsors)-தேவையில்லை.

விசா 100 % உத்தரவாதம்.
A/L மாணவர்கள் அதிபர் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பயணம் செய்த 200க்கும் மேற்பட்ட மாணவர்களின் விபரப் பட்டியலை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
Recognized by Sri Lankan Medical Council(SLMC)
& over 70 countries across the globe

மருத்துவக் கலாநிதி - MD
(ஆங்கிலம் மூலம் 6 வருடம்)
அனுமதிபெற தொடர்புகளுக்கு
0773017883
(ஆங்கிலம் மற்றும் தமிழ்)

Colombo Ads : 077 244 24 25 - Udaya

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION
Head Office
37, School Lane, Colombo - 03. Tel : 2502012
Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
www.patheacademy.org



வசீகர தோற்றத்திற்கு
சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250


## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 22*09*1954



விண்ணில் 26*09*2000

### திருமதி கலைமணி இராசதுரை

அம்மா அம்மா எங்கள் தெய்வமே
அவனிதனில் ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உங்கள் அன்பிற்கு ஈடாகுமா?
அன்போடு எமை வளர்த்த அம்மாவே- ஒரு நொடியில்
அனாதையாக எமைத் தவிக்க விட்டுச் சென்றீர்களே.
ஒருமுறையேனும் எமைக்காண ஓடோடிவர மாட்டீர்களா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை வேண்டுகிறோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

குடமியன்,
வரணி.
உங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05.11.1927



மறைவு 29.08.2008

அமரர்

### இரத்தினசிங்கம் நாகேஸ்வரி

29.08.2008 அன்று சிவபதமடைந்த, எமது அன்புத் தாயார் திருமதி இரத்தினசிங்கம் நாகேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

23,கோட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (78725)
- குடும்பத்தினர்.


மலையாள மாந்திரீகம்



"நல்லதையே நினைப்போம்! நல்லதையே செய்வோம்!"

1) தொழிலில் வெற்றியின்மை 2) வியாபாரத்தில் விருத்தியின்மை 3) கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு 4) தாம்பத்திய வாழ்க்கையிலுள்ள பிரச்சினைகளுக்கு 5) திருமணம் தடைப்பட்டுக் கொண்டிருத்தல் 6) குழந்தைப் பாக்கியமின்மை 7) வெளிநாடு செல்லத்தடை 8) மனக்குழப்பம் 9) பணமிருந்தும் மன நிம்மதியின்மை 10) கடின உழைப்பிருந்தும் கையில் பணம் தங்காமை 11) படிப்பு, பட்டம் இருந்தும் புகழ்பெற முடியாமை 12) முயற்சி இருந்தும் முன்னேற்றத்தில் தடை 13) சூனியக்கோளாறு, தீய செய்வினைகள் 14) அதிஷ்ட வாழ்வு, சொத்து சேர இன்னும் உங்கள் சகல நிறை, குறைகளுக்கும் என்னை சந்திக்கலாம் 15) காண்ட அடிப்படையில் அக்குவேறு ஆணிவேறாக 331 பக்கம் கொண்ட அவரவர் ஜனன ஜாதகத்தை வாழ்க்கை சித்திரமாக அறிந்து தெரிந்து செயற்பட ஜாதக கணிப்புக்கு மட்டும் கட்டணம் ரூபா 2700/=

குறிப்பு: வாங்கும் பணத்திற்கு உத்தரவாத பண ரசீது கொடுப்பதென்றால் அது எமது நிறுவனம் மட்டுமே!

என்னிடம் தீய மாந்திரீக வேலைகளுக்கு இடமில்லை.

தேசபந்து பேராசிரியர் P.K.SAMY (J.D.G.A.N) J.P. I-ó
Sri durgadevi manthirika utchada peedam.
No.162, Kotahena Sreet, Mayfield Road, Colombo - 13,
011 2470615, 011 2342463, 011 2342464, Fax 0094 - 11 - 2344831
நுவரெலியாவில் என் நிறுவனம் துர்க்காதேவி ஆலயம்.
இல.33, கண்டி வீதி, நுவரெலி ~ó 052 2222508.
SMS Service: 0777588405
(சி/554580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னரும் வழிப்போக்கனும்

மன்னர் ஒருவர் ஊர்சுற்றிக் கொண்டு வந்தபோது சோர்வு காரணமாக வழியிலே தென்பட்ட மாஞ்சோலையில் இளைப்பாறினார். அவருடைய பரிவாரங்களும் அங்கேயே தங்கின. அப்பொழுது எங்கிருந்தோ வந்த கல் ஒன்று மன்னரின்



தலையைத் தாக்கிற்று. காயத்திலிருந்து குருதி வடிந்ததைக் கண்ட அமைச்சர் முதலானோர் உடனே மன்னரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று அரண்மனை வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்வித்தனர்.

காவலர்கள் கல் எறிந்தவனைத் தேடலாயினர். அப்பொழுது சோலையிலுள்ள ஒரு மாமரத்தின் கீழ் மாம்பழந்தின்று கொண்டிருந்த வழிப்போக்கன் ஒருவன் அவர்களின் கண்களில் பட்டான். அவனே கல்லை வீசியிருக்க வேண்டும் என்று முடிவு செய்து காவலர்கள் அவனை அமைச்சரின் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அமைச்சர் அவ்வழிப்போக்கனுக்குத் தண்டனை வழங்கினார்.

வழிப்போக்கனோ ஒன்றும் புரியாது திகைத்து நின்றான். மரண தண்டனை நிறைவேற்றப்படும் குற்றவாளி அரசனைச் சந்தித்து தன் குறையைச் சொல்லிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அதன்படி வழிப்போக்கன் அரசனுக்கு முன் அழைத்துவரப்பட்டான். ''இந்த மனிதனை ஏன் அழைத்து வந்தீர்கள்?'' என்று அமைச்சரிடம் வினாவினார் அரசன். ''அரசே தங்கள் தலையில் கல் வீசியவன் இவனே'' என்று அறிவித்தார் அமைச்சர். வழிப்போக்கன் அரசரைப் பார்த்து ''பெருமானே, நான் பசியால் வாடிக் கொண்டு. இருந்தேன் அந்த மாமரத்தில் பழங்கள் தொங்குவதைக் கண்டதும் தொலைவில் இருந்து கல் வீசினேன். அது தவறித் தங்கள் தலையைத் தாக்கிவிட்டது. அதற்கு மிகவும் வருந்துகின்றேன். அறியாது செய்த பிழையைப் பொறுத்து என்னை மன்னிக்க வேண்டும்'' என்று மன்றாடினான்.

''மரத்தின் மீது நீ கல் வீசிய போது உனக்கு என்ன கிடைத்தது?'' என்று வினவினார் வேந்தர். ''மன்னரே இரண்டு பழங்கள் கிடைத்தன'' என்று பணிவாகக் கூறினான் வழிப்போக்கன். சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார் மன்னர். பின்னர் அவர் அமைச்சரைப் பார்த்து ''இந்த மனிதனைத் தண்டனையில் இருந்து விடுதலை செய்யுங்கள். அத்துடன் இவனுக்கு நிறைச் செல்வத்தையும் கொடுத்து அனுப்பி வையுங்கள்'' என்று பணித்தார்.

அரசனின் கட்டளையைக் கண்ட அமைச்சர் திகைப்பில் மூழ்கிவிட்டார். ''தன் தலையில் கல்லை வீசியவனுக்கு இத்தகைய மரியாதையா? மன்னருக்கு ஏதேனும் மூளைக்கோளாறோ?'' என்று கூட எண்ணினார் அமைச்சர். அமைச்சரின் மன நிலையை உணர்ந்து கொண்ட மன்னர் அவரிடம் ''அமைச்சரே, அறிவே இல்லாத மரம் தன்மீது கல் வீசியவனுக்கு இரு பழங்களைக் கொடுத்துள்ளது. அதே கல் என்மீது விழுந்தது என்பதற்காக நான் இவனுக்குத் தண்டனையா கொடுப்பது? ஆகவேதான் நான் இப்படி முடிவு செய்தேன். எனது முடிவை நிறைவேற்றும்'' என்று கூறினார். ***

**நிருத்துனா இராஜசேகரன்** *தரம் 8ஏ, யா/கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை.*




தளபதி பின் தொடர, வெகுவேகமாக அடர் காட்டினுள் புகுந்தான் நந்திவர்மன். காட்டினுள் செல்லச் செல்ல சூரிய ஒளி வருவது தடைப்பட்டு, எங்கும் இருள் கவிழத் தொடங்கியது. இருளின் தன்மை கருமையாகிக் கொண்டு போனது. என்ன செய்வதென்று ஒன்றும் புரியாமல் பின்னால் திரும்பிப் பார்த்த நந்திவர்மன் திடுக்கிட்டுப் போனான். தளபதியைக் காணவில்லை!

சுற்று முற்றும் பார்த்தான். இருளில் எதுவுமே தெரியவில்லை. அந்த நேரம் பார்த்து மீண்டும் அந்த வினோத ஒலி காடெங்கும் கிளம்பியது. இருளால் ஏற்பட்ட பயத்தாலும், வினோத ஒலியால் உண்டான திடுக்கிடலாலும் நந்திவர்மனின் குதிரை திமிறிக் கொண்டு தன் போக்குக்கு நாலுகால் பாய்ச்சலில் விரையத் தொடங்கியது. நந்திவர்மன் தன் பலங்கொண்ட மட்டும் குதிரையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சித்தான். ஆனாலும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. மிக நீண்ட நேரமாய் குதிரை ஓடிக் கொண்டேயிருந்தது.



நந்திவர்மனுக்கு களைப்பு மேலிட்டது. இப்போது இருளகன்றபகுதியில்குதிரை ஓடிக் கொண்டிருந்தது. இதுவரை நந்திவர்மன் காட்டில் பார்த்தேயிராத இடத்தில் அவனது குதிரை சென்று கொண்டிருந்தது. தாகம் மேலிட, நீர் கிடைக்குமா என நோட்டமிட்டான். தூரத்தே ஒரு நதி ஓடிக் கொண்டிருப்பது தெரிந்தது. குதிரையும் மன்னனின் தாகத்தை அறிந்தோ என்னவோ நதியை நோக்கி விரைந்தது. நதியை அடைந்ததும் குதிரையிலிருந்து கீழே குதித்த நந்திவர்மன் இரு கைகளாலும் நீரை அள்ளிப் பருக முயன்ற போது ''நந்திவர்மா! நிறுத்து'' என்றொரு குரல் கேட்டது.

(தொடரும்)

# ஆங்கிலம் கற்போம்



உலகத்தில் உள்ள பிரதானமான மொழிகளில் ஆங்கில மொழியும் ஒன்றாகும். எமது தாய் மொழி தமிழ் என்பது போல ஆங்கிலேரது தாய் மொழியாக ஆங்கிலம் காணப்பட்டது. ஆங்கில மொழி ஓர் அந்நிய மொழியாக இருந்தாலும் அதன் பயனோ மிகப்பெரியது.

இன்று பாடங்களிலும் ஆங்கிலப் பாடம் கட்டாய பாடமாக இருந்து வருகின்றது. ஜீ.சி.ஈ சாதாரணதரப் பரீட்சையிலும் ஆங்கில பாடம் கட்டாயபாடமாக காணப்படுகின்றது. தமிழ் எழுத்துக்களில் 247 எழுத்துக்கள் உள்ளன. ஆனால் ஆங்கில எழுத்துக்களில் 26 எழுத்துக்கள் தான் உள்ளன. இதனால் ஆங்கிலம் கற்பதற்கு இலகுவானது. நாங்கள் பிற நாடுகளுக்குச் செல்லும்போது இலகுவில் அம்மக்களிடம் உரையாட ஆங்கில மொழி முக்கிய பங்காற்றுகின்றது.

இப்பொழுது பாவனையில் காணப்படும் இலத்திரனியல் சாதனங்களான தொலைபேசி, கணனி போன்றன கூட ஆங்கில மொழியில் தான் வெளியிடப்படுகின்றன. ஆங்கில மொழி எல்லோருக்கும் பொதுவான மொழியாக இருப்பதால் உலக நாடுகளில் பலவற்றிலும் இவ் உபகரணங்கள் கையாளப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் கூட பெரும்பான்மை ஆங்கில மொழியாகவே காணப்படுகிறது.

ஆங்கிலப் பத்திரிகைகள் இப்பொழுது கொழும்பிலிருந்து வந்து கொண்டு இருக்கின்றன. அவற்றை வாசித்து அறிவதன்மூலம் ஆங்கிலக் கல்வியை வளர்த்துக் கொள்ளலாம். இது போன்ற இன்னும் பல ஆங்கில ஊடகங்களைப் பயன்படுத்தி எமது ஆங்கிலக் கல்வியை வளர்த்துக் கொள்வோம். ***

*– சந்திரசேகர் தனுஜன், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.*




# எனது அம்மா



அம்மா ஓர் அன்புத் தெய்வம்
நான் கண்கண்ட தெய்வம் அம்மா தான்.
அதனால்தான் 'தாயிற்சிறந்த
கோயிலும் இல்லை' என்று பாடியுள்ளனர்.
அம்மாவின் அன்புக்கு அளவில்லை.
அவள் என்மீது கொண்ட அன்பு தான் எவ்வளவு?
எனது காலில் முள் குத்தினால்
தனது நெஞ்சில் குத்தியது போல் துடிப்பாள்.
நான் ஏதும் தவறு செய்தால்
அதைப் பெரிது படுத்தாமல் மன்னித்து விடுவாள்.
அம்மாவின் அன்பும், ஆதரவும் என்னை
திறமைசாலியாகவும் நல்ல பிள்ளையாகவும் வாழத்தூண்டுகிறது.

**அ-நூர்சன்** *தரம் 4 ஏ,*
*உடுப்பிட்டி அ.மி கல்லூரி.*

# உலகப் புகழ் பெற்ற நூல்கள்



| | |
|---|---|
| மகாபாரதம் | -வேதவியாசர் |
| அர்த்தசாத்திரம் | -கௌடில்யர் (சாணக்கியன்) |
| கீதாஞ்சலி | - இரவீந்திரநாத் தாகூர் |
| இராமாயணம் | - வான்மீகி, வசிட்டர் தமிழில் கம்பர் |
| சத்தியசோதனை | - மகாத்மா காந்தி |
| இலியட் ஒடிசி | - ஹோமர் |
| குடியரசு | - பிளாற்றோ |
| போரும் சமாதானமும் | - லியோ டால்ஸ் டாய் |
| தேசங்களின் செல்வம் | - அடம்ஸ்மித் |
| எனது போராட்டம் | - அடோல்ஃப் ஹிட்லர் |
| செம்மீன் | - தகழி சிவசங்கரப்பிள்ளை |
| ருபையாத் | - மார்டின் விக்கிரமசிங்க |
| கலிவரின் பயணங்கள் | - யோகநாதன் சுவிஃப்ட் |
| அர்த்தமுள்ள இந்துமதம் | - கண்ணதாசன் |



**ஜெ.ஜெயவர்மன், தரம் 8ஏ,**
**யா/ மகாஜனக்கல்லூரி.**

# என்ன காரணம்?



இன்னும் பூமி சுழலுது
என்றால் காரணம் என்ன?
இன்னும் மலர் காலையில்
விரியுது என்றால் காரணம் என்ன?

இன்னும் நாட்டில் தொழிலாளர்கள்
வேலை செய்ய காரணம் என்ன?
இன்னும் பாடசாலை மாணவர்கள்
பாடசாலை போகக் காரணம் என்ன?

இன்னுமா புரியல
நாட்டில் சமாதானம் வரும்
என்ற நம்பிக்கையில்.

**E. இந்துயா, கைதடி மேற்கு, கைதடி.**

# மாணவர் தூரிகை



**ச.கஸ்தூரிகா,**
தரம் – 5,
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**ஈ.பவித்திரா,**
தரம் – 7, யா/வட இந்து மகளிர் கல்லூரி.



**இ.துவாரகா,**
தரம் 6, யா/வேம்படி மகளிர் கல்லூரி.



# நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..............................
தரம் :-..............................
பாடசாலை :-..............................

*இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.*

.................. ..............................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக, பொருளாதார விழுமியங்களைப் பாதிக்கும் பதிவு செய்ய மறக்கப்படும் மரணங்கள்.....

மனித வாழ்வின் ஆரம்பம் பிறப்பு என்பது போல அவனின் வாழ்வின் முடிவு இறப்புடன் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் பிறப்புக்கு முன்னர் அவரவர்கள் பற்றி அறியாத நிலை காணப்பட்டிருக்க பிறப்பின் பின்னர் அவரவர்களின் வாழ்வியல் பண்புகளினூடாக இறப்பின் பின்னரும் அவர்களை நினைவிருத்திப் பத்திரிகைகளில் நினைவஞ்சலிகள் வெளியிட்டும், சமய, சமூக, ரீதியிலான சடங்குகள் நடாத்தியும், குடும்பத் தெய்வமாக கணித்துக் கொள்ளும் நிலையையே நாம் அன்றாடம் காணும் நிகழ்வாகும். இந்நிலையில் இறந்தவர்களை நினைந்து வாழும் எம்சமூகத்தின் பொருளாதார சமூக பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதற்கு - மனிதனது வாழ்வுக்காலத்தை அதிகப்படுத்துவதற்கு - உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் இறப்புக்களின் தரவுகளை ஒப்பிட்டு நோக்குவதற்கு - இறப்புக்கான காரணிகளைக் கண்டறிந்து அவற்றிற்கான பரிகாரங்களை மேற்கொள்வதற்கு எம்மவரிடையே விழிப்புணர்வு இல்லாத நிலை ஏறத்தாழ கடந்த நான்கு தசாப்தகாலமாக இருந்து வருவதைக் காணமுடிகின்றது. அதாவது நிகழும் பெரும்பாலான இறப்புக்கான அவர்களின் வாரிசுகளினால் பதிவு செய்து கொள்ளாத நிலையினை எமது பிரதேசத்தில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியிலும் காணப்படுகின்றமையானது துரதிஸ்டமான நிலைஎன கூறல் வேண்டும்.

### மனித வாழ்வில் முக்கியத்துவம் பெறும் இறப்பு

மனிதவாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய பிறப்பு, இறப்பு, இடப்பெயர்வு என்பனவற்றுள் இறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. இறப்பு என்பது உயிர்ப்பிறப்பு நிகழ்ந்த பின்னர் வாழ்வின் முடிவாக நிரந்தரமாக உடலிலிருந்து உயிர் பிரிதலினால் ஏற்படுவதாகும். அதாவது மனிதன் தனது வாழ்வில் மனதிலிருத்திய எண்ணங்கள், கற்பனைகள், சிந்தனைகள், செயற்பாடுகள் யாவற்றையும் இறப்பின் மூலம் இழந்து விடுகிறான். உலகில் வாழும் சமூகங்கள் அவர்கள் எவ்வகைச் சமூகத்தவராயினும் பிறப்புக்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனரோ அதைவிட பல மடங்கு இறப்புகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். புராதன காலத்திலிருந்து மனித இறப்புக்களினை புனிதமான முறையில் போற்றி வந்துள்ளனர். இறந்தவர்களின் உடல்களைத் தெய்வமாக வழிபட்டனர். இறப்புக்கள் ஏற்படுமிடத்து தத்தம் சமூக, பண்பாட்டு நிலைக்கேற்ப சடங்குகளை நடாத்தி அவர்களது உடலினை தகனம் செய்தோ அல்லது அடக்கம் செய்தோ பிதிர்க்கடனினை நிறைவேற்றி வருகின்றனர். அவர்களை தமது வாழ்வில் நினைவிருத்திக் கொள்ளும் முகமாக, சமய ரீதியான சடங்குகளைச் செய்து வருகின்றனர். இவை தவிர இன்றைய நிலையில் நாளாந்த, வாராந்த பத்திரிகைகளில் அவர்களது புகைப்படங்களுடன் கூடியதான நினைவஞ்சலியினை வெளியிட்டும் தம்மோடு வாழ்ந்து பிரிந்தவரை நினைவுகூர்ந்து வருகின்றதைக் காண்கின்றோம்.

### இறப்புப் பற்றிய தரவு பேணுகையில் அக்கறையின்மை

இத்தகைய இறப்புக்களின் முக்கியத்துவத்தினைப் பற்றி மக்கள் உணர்ந்துள்ள போதிலும் அவர்கள் தொடர்பான தரவுகளைப் பேணுவதில் அக்கறை கொள்ளாத நிலை இந்நாட்டில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இலங்கையில் மட்டுமல்லாது உலகில் சகல நாடுகளிலும் பிறப்பு, இறப்பு மற்றும் வாழ்நிலைப்புள்ளி விபரங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று சட்டங்களினால் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் விருத்தியடையாத நாடுகளில் கணிசமான மக்களாலேயே இவை பின்பற்றப்பட்டுவருகின்றது. இலங்கையில் பிறப்பு, இறப்பு, விவாகநிலை போன்றவற்றைப் பதிவு செய்வதற்கென பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் செயற்பாடுகள் மாவட்ட ரீதியாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டில் 1869 ஆம் ஆண்டிலிருந்து பிறப்பு, இறப்பு போன்றவற்றினைப் பதிவு செய்தல் கட்டாயம் எனச் சட்டத்தினால் எடுத்துக் கூறப்பட்டுள்ள போதிலும் 20 ஆம் நூற்றாண்டின் முதலரைப்பகுதி வரையும் முழுமையான தரவினைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இருப்பினும் 1940களினைத் தொடர்ந்து மேற்குறித்த பதிவுமுறை மற்றும் தரவுகளைப் பேணும் நிலை சிறப்பாக இலங்கையில் இருந்துள்ளதை புள்ளிவிவரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. 1969 ஆம் ஆண்டு குடிப்புள்ளியியல் ஆய்வாளர் டாலஸ் பெர்னாண்டோவின் கணிப்பீட்டின் பிரகாரம் நாட்டில் நிகழ்ந்த மொத்தப் பிறப்புக்களில் 97.7 சதவீதமும் இறப்புக்களில் 93.4 சதவீதமும் பதிவு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார். இதனை நல்லதொரு ஆரோக்கியமான விடயமாகவே கொள்ள வேண்டும். ஆனால் கடந்த நான்கு தசாப்தகாலமமாக யாழ்ப்பாண மாவட்டம் உட்பட நாடு முழுவதும் இறப்புக்களைப் பதிவு செய்வதில் மக்கள் அக்கறை கொள்ளாத நிலை தொடர்வதால் பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலையை மேம்படுத்துவதற்கு குறிப்பாக மருத்துவ, சுகாதார வசதியினை விரிவாக்குவதற்கு - ஆயுள் எதிர்பார்ப்பினை அதிகப்படுத்துவதற்கு - இறப்புக்கான காரணியினைக் கண்டறிந்து அக்காரணிகளுக்கு பரிகாரம் கண்டு அவற்றினை பின்னகர்த்திச் செல்வதற்கு முழுமையான இறப்புத் தரவுகள் கிடைக்கப் பெறுமிடத்து பெருமளவிற்குச் சாத்தியப்பட வைக்க முடியும்.

அட்டவணை I

**இலங்கையில் இறப்பு விகிதம் – 1881–1946**

| ஆண்டு | பிறப்பு வீகிதம் | இறப்பு வீகிதம் |
|---|---|---|
| 1881 | 27.1 | 27.2 |
| 1891 | 31.9 | 28.7 |
| 1901 | 37.5 | 27.6 |
| 1911 | 38.0 | 34.8 |
| 1921 | 40.7 | 31.2 |
| 1931 | 37.4 | 22.1 |
| 1941 | 35.6 | 18.3 |
| 1946 | 37.4 | 19.8 |

1940களுக்கு முன்னர் நிகழ்ந்த பிறப்புக்களுக்கு இணையாக அல்லது சிறிய இடைவெளி கொண்டதாகவே இறப்புக்கள் காணப்பட்டிருந்தன. அட்டவணை I அக்காலங்களில் இலங்கையில் சுகாதார மருத்துவ வசதிகள் கிராமங்கள் வரை சென்றிருக்கவில்லை. 1940களினைத் தொடர்ந்து வரண்ட பிரதேசம் உட்பட நாட்டில் மலேரியா நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை, கட்டாய மற்றும் இலவசக் கல்வி முறையின் அறிமுகம், கிராமப்புறங்களில் வைத்தியசாலைகள் - குறிப்பாக பிரசவ விடுதிகள் ஸ்தாபிக்கப்பட்டமை, இலவச பால் வழங்கும் திட்டம் மற்றும் இலவச மற்றும் மானிய முறையில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் முறையின் அறிமுகம், பாடசாலைப் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டமை, கெயர் ஸ்தாபனத்தின் உதவிகள், மருத்துவ மற்றும் தாதிப்பயிற்சிக்கு அதிகளவில் மாணவர்கள் உள்ளீர்ப்பு, 1953ஆம் ஆண்டு இலங்கை குடும்பத்திட்டமிடல் சங்கத்தின் உதயமும் அதன் செயற்பாடுகள் படிப்படியாக அதிகரித்துச் சென்றமை, பொதுச் சுகாதார முறைகளின் விருத்தி, தொற்று நோய்களை விரைவில் அப்புறப்படுத்துவதில் சுகாதாரத் திணைக்களத்தின் வெற்றிபோன்ற பல காரணிகள் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையில் இறப்புக்களினை கட்டுப்படுத்துவதற்கு உதவின எனலாம். குறிப்பாக தென்னாசிய நாடுகளில் இலங்கை இது விடயத்தில் மிகச் சிறந்த சாதனையைப் புரிந்துள்ளது என்பதில் எவருக்கும் இரு வேறுபட்ட கருத்துக் கிடையாது. ஆனால் இறப்புக்களை பதிவு செய்வதில் 1960களின் பின்னர் படிப்படியாக மக்களிடையே குறைவடைந்து செல்வதனால் உண்மை நிலையினை கண்டு கொள்வதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றமை மட்டுமல்லாது இறப்புக்களுக்கான காரணிகளை வெளிக்கொணர்ந்து அதற்கான பரிகாரங்கள் மேற்கொள்வதிலும் சிரமங்கள் உண்டு. அது மட்டுமல்லாது சர்வதேச ரீதியான ஒப்பீடுகளுக்கு தற்போது பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் வழங்கப்படும் புள்ளிவிவரங்கள் விந்தையானதாகவும் காணப்படுகின்றது.

அட்டவணை II

விருத்தியடைந்த சில நாடுகளினதும் இலங்கையினதும் இறப்பு விகிதத்தின் போக்கு – 2007 (1000 பேருக்கு)

| நாடுகள் | இறப்பு விகிதம் |
|---|---|
| இத்தாலி | 10.6 |
| டென்மார்க் | 10.3 |
| ஐரோப்பிய யூனியன் | 10.2 (சராசரி) |
| ஐக்கிய இராச்சியம் | 10.0 |
| சுவீடன் | 10.3 |
| நோர்வே | 9.3 |
| யப்பான் | 9.3 |
| உலகம் | 8.3 (சராசரி) |
| இலங்கை | 5.9 |
| யாழ்ப்பாண மாவட்டம் | 5.2 |
| மன்னார் மாவட்டம் | 3.7 |
| வவுனியா மாவட்டம் | 5.5 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 4.8 |

மேற்குறித்த புள்ளிவிபரத்தின் பிரகாரம் விருத்தி பெற்ற நாடுகளில் இறப்பு விகிதமானது சராசரி 1000:10:11 ஆக காணப்பட இலங்கையில் 1000:6 ஆக காணப்படுகின்றது. விருத்தி பெற்ற நாடுகள் குழந்தை இறப்புக்கள் பிரசவத்தாய் இறப்புக்கள், பருமட்டான இறப்புக்களை மருத்துவ சுகாதார வளர்ச்சியின் விளைவாக மிகத் தாழ்ந்த மட்டத்திற்கு கொண்டுவர

## இறப்புகளைப் பதிவு செய்வதன் மூலமே இழப்புகளிலிருந்து சமூகத்தை மீட்கலாம்

முடிந்தது. ஆயுள் எதிர்பார்ப்பு படிப்படியாக அதிகரத்துக் கொண்டு செல்கின்றது. 100 வயதுக்கு மேல் வாழ்பவர்களின் எண்ணிக்கையானது 2010ஆம் ஆண்டில் 50 மில்லியனாக உயரும் என எதிர்வு கூறப்படுகின்றது.

### மறக்கப்படும் மரணப் பதிவுகள்

இந்நிலையில் இலங்கையில் 50.0 வீதத்திற்கு மேற்பட்டோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படும். இந்நாளில்- யுத்த கோரப்பிடியில் சிக்கித்தவிக்கும் மக்கள் வாழ்ந்துவரும் நிலையிலும் கூட இறப்பு வீதம் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் அதாவது 1000:6 என கணித்துக் கூறப்படுவது உண்மைத் தன்மைக்கு புறம்பானது என்பது வெள்ளிடைமலை. இதிலிருந்து நிகழும் இறப்புக்கள் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை என்ற முடிவு தெளிவாகியுள்ளது.

எனவே இத்தகைய இறப்புப் பதிவுகளை மேற்கொள்வதில் தவறுகின்றமைக்கான காரணிகள்ளை அறிதல் அவசியமாகிறது. 1960கள் வரை பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தின் செயற்பாடுகளும் கிராம அதிகாரிகளினது கடமைகளும் சிறப்பாக விருந்துள்ளது என்றே கூறல் வேண்டும். அக்கால கிராம அதிகாரிகள் (விதானைமார்) பொதுவாக தாம் கடமையாற்றும் பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் அவர்கள் கடமையாற்றும் கிராமங்களில் நிகழும் நிகழ்வுகள் பற்றி அறிந்தவர்கள். அக்காலத்தில் உணவுப்பங்கீட்டுக்கான கூப்பன்முறை இருந்து வந்துள்ளது. தனது நிர்வாக எல்லைக்குள் இறப்புக்கள் நிகழும் பட்சத்தில் அதனைப் பதிவு செய்வதில் அக்கறை கொண்டிருந்தனர். குறிப்பாக ஒருவர் இறக்கும் பட்சத்தில் அவருக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களினைப் பெறுவதற்கான கூப்பனை இறந்த பின்னர் நான்கு கிழமைகளின் பின்னர் விதானையார் திரும்பப் பெற்றுக்கொள்ளும் நிலை காணப்பட்டது. அந்த நேரத்தில் அவ்விறப்புக்கான [illegible] பிரதேச [illegible] நிலை காணப்பட்டது. இதனால் குறித்த பிரதேசத்தில் நிகழும் இறப்புக்கள் பதிவுக்குட்படுத்தும் நிலையினை உறுதிசெய்யக் கூடியதாக இருந்தது. எனவே பிறப்புக்கு இணையாக இறப்புப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. புள்ளிவிவரங்களும் பெருமளவிற்கு நம்பகத்தன்மை கொண்டதாகக் காணப்பட்டது.

### மரணப்பதிவை மேற்கொள்ளாததற்கான காரணிகள்

ஆனால் தற்போதைய நிலையில் இறப்புப்பதிவுகளும் அதனூடாகப் பெறப்படும் தரவுகளும் நம்பகத்தன்மை கொண்டதாக இல்லாததற்கு பல காரணிகள் இணைந்து செயற்படுகின்றன என்றே கருதவேண்டியுள்ளது. இதற்கான காரணிகளில் முதன்மையானது இறப்புக்களைப் பதிவு செய்ய வேண்டும் என்பதில் மக்கள் அக்கறை படிப்படியாகக் குறைவடைந்துகொண்டு செல்வதாகும். இவைதவிர கிராம சேவகர் முறையின் அறிமுகம், குறித்த கிராமத்திற்கு பரீட்சயமில்லாதவர்களின் நியமனங்கள், இறப்புப் பதிவுக்கட்டணம் சிறியதாகக் காணப்படல், பதிவாளர் நியமனங்கள் அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் நிலை போன்ற பலகாரணிகள் இறப்பினைப் பதிவு செய்வதில் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இவைதவிர ஒருவரின் இறப்பு அவரது வாரிசுகளின் வாழ்வாதாரத்தோடு தொடர்புடையதாக இருக்கும் பட்சத்தில் அவை பதிவு செய்யப்படுகின்றன. குறிப்பாக ஓய்வூதியம், காப்புறுதி, இழப்பீடுகள் மற்றும் பரம்பரைத் தொடர்புகளை உறுதிப்படுத்துதல் என்ற நிலையில் பதிவு செய்யப்படுகின்றன. ஏனைய சந்தர்ப்பங்களில் பதிவுசெய்வதில் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன என்பதை இவை பற்றி மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. குறிப்பாக வைத்தியசாலைகளில் நிகழும் இறப்புக்களில் கணிசமானவை பதிவுக்குட்படுத்தப்படுவதில்லை எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### இறப்புப் பதிவை முழுமையாக மேற்கொள்வதற்கான வழிகள்

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பல இறப்புப் பதிவுகள் செவ்வனே மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையே சுட்டிக்காட்டியுள்ளன. எனவே இறப்புப் பதிவுகளை முழுமையாக பதிவு செய்வதற்கு எத்தகைய வழிவகைகளை மேற்கொள்ளலாம் என்பது தற்போது நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

1. இறப்புப் பதிவுகளின் முக்கியத்துவத்தினை அதாவது அப்பதிவின் மூலம் சமூகம், நாடு பெற்றுக்கொள்ளக்கூடிய நல்விளைவுகள் பற்றிய விழிப்புணர்வினை ஒவ்வொருவருக்கும் எடுத்துச்செல்லவேண்டியது அவசியமாகும். தரவுகளின் தேவை மற்றும் அதனை அடிப்படையாகக்கொண்டு அரசு பொருளாதார சமூக பண்பாட்டு ரீதியில் தீர்மானம் எடுப்பதற்கு வசதி உருவாகும். உதாரணமாக குறித்த நோயின் காரணமாக இறப்புக்கள் ஏற்படுமிடத்து அதற்கான தீர்வினை அரசும் சுகாதாரத் திணைக்களமும் மேற்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். அத்துடன் இறப்புக்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு உண்மைத்தரவுகள் அவசியமானதாகவுள்ளது.

2.விருத்தி பெற்ற, குறிப்பாக கிறீஸ்தவ மக்கள் வாழும் நாடுகளில் இறப்புப் பதிவுகள் சிறப்பாகவும் முழுமையாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது இறப்புச் சடங்குகளின் போதே பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலும் கிறீஸ்தவர்களின் இறப்புக்கள் பெருமளவிற்கு பதிவு செய்யப்படுகின்றன என்றே கூறல் வேண்டும். ஆனால் ஏனைய மதத்தவர்களிடம் இறப்புக்களின் பதிவுகள் பெருமளவிற்கு மேற்கொள்ளப்படாமையாலேயே இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி நிலை காணப்படுகின்றது.

3.இறப்புப்பதிவினை மேற்கொள்வதனை உறுதிப்படுத்தும் வகையிலான கண்டிப்பான அரசாணைகள் கிராம சேவகர்கள், பதிவாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அதுமட்டுமல்லாது இது தொடர்பாக கொடுப்பனவுகளை அதிகரிக்கப்படவேண்டும்.

4.பிறப்பு, இறப்புப் பதிவாளர்களை நியமனம் செய்யும்போது மருத்துவ அறிவுடையோரை நியமித்தல் அவசியமாகும்.

5.தகனம் அல்லது அடக்கம் செய்யப்படும் மயானங்கள் நிறுவனமயப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களினால் நிர்வகிக்கப்படும் மயானங்கள் தொடர்பாக பெரியளவிலான அக்கறை கொள்ளப்படுவதில்லை. மயானங்கள் தொடர்பாகவும் பதிவு செய்திருத்தலை உறுதிப்படுத்துவதற்கென தனியான பிரிவு உள்ளூராட்சி நிறுவனங்களில் உருவாக்கப்படுதல் வேண்டும். சாதாரணமாக மயானத்திற்கு எடுத்து வரப்படும் உடல்களின் இறப்புக்கான பதிவினை விரைவாக செய்வதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்தில் பதிவுகள் செம்மையாக அமைவதற்கு வாய்ப்பேற்படும் அதாவது குறித்த இறப்புக்கான பதிவு மேற்கொள்ளப்பட்டது என்பதை பிரதேச சபை நிர்வாகத்தினால் உறுதி செய்யப்பட்ட பின்னரே தகனம் செய்வதற்கோ அன்றில் அடக்கம் செய்வதற்கோ அனுமதியளிக்க வேண்டும்.

6.இவைதவி[illegible]றப்பு, இறப்பு விவாகப் பதிவாளர்களை பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் நியமனம் செய்யப்படுவதுடன் பதிவு செய்யப்படும் எண்ணிக்கைக்கு ஏற்பவே கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. எனவே மேற்குறித்த பதிவாளர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவதுடன் அவர்களை அவ்வப்பிரதேசத்தின் பிரதேசசபையுடன் இணைப்பதன் மூலம் விரைவாக பதிவினை மேற்கொள்ள வாய்ப்புண்டாகலாம்.

எனவே இவற்றோடு தொடர்புடைய அரச துறையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் நாட்டின் வாழ்நிலைப் புள்ளி விபரங்கள் நம்பகத்தன்மை கொண்டதாக அமையும் என நம்பலாம்.

* * * * * * * * * * * * * * * * *




பேராசிரியர் கா. குகபாலன்,
தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA

## வளமான எதிர்கால
## முன்னேற்றத்திற்கு CIMA வுடன் இணையுங்கள்



## வியாபார கணக்கியலில் CIMA சான்றிதழ்

(Certificate Course in Business Accounting)

6 மாதங்களைக் கொண்ட முழுநேரம் / பகுதிநேரம்

நீங்கள் பாடசாலைக் கல்வியை தொடரமுடியாமலோ அல்லது உங்கள் எதிர்காலத்திற்கான சரியான பாதையை தீர்மானிக்காமலோ அல்லது கணக்கியற் துறையில் ஓர் அடிப்படை அறிவு இல்லாமலோ இருக்கலாம். கவலைப்படவேண்டியது இல்லை.

இந்த தராதரப் பத்திரப்பயிற்சி நெறி உங்களுக்கானது. இது உங்கள் கணக்கியல் துறையை அடிப்படையில் இருந்து முறையாக வழிகாட்டுவதுடன் நாளுக்கு நாள் மாற்றமடையும் சர்வதேச வணிகத் துறையில் உங்களுக்கு சரியானதொரு பாதையை வகுத்துத் தருகின்றது. இது CIMA கற்கை நெறியை நீங்கள் மேற்கொள்ள ஒரு ஆரம்ப நிலை கற்கை நெறியாகும்.

மேலதிக தகவல்களுக்கு CIMA 011 250 3880 அழையுங்கள்.

வியாபார கணக்கியல் CIMA சான்றிதழ் கற்கைநெறி விரைவில் கீழ் காணும் முகவரியில் கற்பிக்கப்படும்.

AWARDED Superbrands SRI LANKA

Genesys

**British Business School**
140, Temple Road, Jaffna. Tel: 021 2225796, 0773 627055
www.cimaglobal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவிமர்சனம்





## பந்தயம்

விஜயின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரனின் இயக்கத்தில் நிதின்சத்யா, சிந்து துலானி, பிரகாஷ்ராஜ், ராதிகா ஆகியோரின் நடிப்பில் வெளியாகியுள்ள படம் 'பந்தயம்'.

இந்தப் படத்தில் நடிகர் விஜயின் தீவிர ரசிகரும் கல்லூரி மாணவருமான நிதின்சத்யா, சிந்துதுலானியைக் காதலிக்கின்றார். ஏற்கனவே சிந்து துலானியை ஒரு தலையாகக் காதலித்த இளைஞனொருவன் கொலை செய்யப்படுகின்றார்.அந்த இளைஞனின் நண்பனே நிதின்சத்யா. இதற்கு சிந்துதுலானியின் அண்ணனான பிரகாஷ்ராஜ்தான் காரணம் என்பதைக் கண்டறிகின்றார் நிதின்சத்யா. அதற்குப் பழி வாங்கவே தானும் சிந்துதுலானியை விரும்புகின்றார். அதேசமயம் பிரகாஷ்ராஜின் நம்பிக்கைக்குரிய கையாளாகவும் மாறுகின்றார். கூட இருந்தே குழி பறிக்கும் நிதின்சத்யாவின் உண்மையான சொரூபம் தெரியவர, தன் வழமையான வில்லத்தனங்களால் பரபரப்பு நெருப்பை பற்ற வைக்கிறார் பிரகாஷ்ராஜ். இந்த இருவருக்கும் இடையிலான மோதலில் வெல்வது யாரென்பதையே படம் சொல்கிறது. படத்தின் பெயரைப் போலவே பிரகாஷ்ராஜும், நிதின்சத்யாவும் 'பந்தயம்' கட்டிக்கொண்டு, போட்டி போட்டு நடித்திருக்கிறார்கள்.

வழமை போல பாட்டுக்கு மாத்திரம் என்றில்லாமல், படத்தின் கதைக்கும் சிந்துதுலானி பயன்படுத்தப்பட்டிருக்கிறார். ராதிகா வரும் காட்சிகளிலெல்லாம் அழுகை கொஞ்சம் அதிகமாகவே இருக்கின்றது.

விஜய் ஆன்டனியின் இசையில் சில பாடல்கள் மீண்டும் முணுமுணுக்க வைக்கின்றன. ஸ்ரீநிவாஸ் தேவாம்சத்தின் ஒளிப்பதிவும் சொல்லிக் கொள்ளும்படியாக இருக்கின்றது.

திரைக்கதையில் ஒரு சில சறுக்கல்கள் இருந்தாலும், விறுவிறுப்பாக இன்றைய இளைஞர்களுக்கு ஏற்றவாறு படமாக்கியுள்ளார் எஸ்.ஏ.சந்திரசேகரன்.

கௌரவத் தோற்றத்தில் நடிகர் விஜய் வருவதும் பந்தயத்துக்குப் பலம் சேர்க்கின்றது.

ஆக மொத்தத்தில் திரையில் அதிரடிப் பட்டாசாய் வெடிக்கிறது 'பந்தயம்'!*************************

## சுரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆறுமுகம்'



'பிடிச்சிருக்கு' என்ற படத்தைத் தயாரித்த சித.செண்பக்குமார், சக்தி - சந்தியா நடிக்கும் 'மகேஷ் சரண்யா மற்றும் பலர் ' என்ற படத்தைத் தயாரித்து வருகிறார். இதைத் தொடர்ந்து அவர் தயாரிக்கும் படம் 'ஆறுமுகம்'.

கமல் நடித்த 'சத்யா' வில் ஆரம்பித்து ரஜினி நடித்த 'வீரா', 'அண்ணாமலை', 'பாட்சா', 'பாபா', விஜயகாந்த் நடித்த 'கஜேந்திரா', சரத்குமார் நடித்த 'ஒருவன்' என மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி உட்பட ஐந்து மொழிகளில் 40 இற்கும் மேற்பட்ட படங்களை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணா இப் படத்தை இயக்குகிறார்.

'அண்ணாமலை', 'பாட்சா' போன்ற படங்களில் சுரேஷ் கிருஷ்ணாவுடன் இணைந்து கலக்கிய தேவா இப்படத்திற்கும் இசை அமைக்கிறார்.

"இப் படத்தில் நாயகனாக நடிக்கும் பரத் ரோட்டோரத்தில் இட்லிக் கடை நடத்தும் இளைஞராக வருகிறார். தாய்ப்பாசம் மிக்கவரான அவருக்கு இறந்துபோன தன் தாயின் கனவை நனவாக்க வேண்டிய அவசியம். பரத்துக்கு ஜோடியாக ப்ரியா மணியும், தங்கையாக சரண்யா மோகனும் நடிக்கிறார்கள். மிகவும் வித்தியாசமான பாத்திரத்தில் பரத்துடன் இணைந்து ப்ரியாமணி நடிக்கிறார்.



இத்தனைக்கும் சிகரம் வைத்த மாதிரி ஒரு பெண் பாத்திரம் படத்தில் வருகிறது. அது ஒரு கோடீஸ்வரி. பரத் என்கின்ற சாமானியன், அவருக்கு இணையான ஒரு கடைக்காரருடன் மோதினால் அது சாதாரண சம்பவம். ஆனா இவர் போட்டி போடுவது அந்தக் கோடீஸ்வரியுடன்.

அதற்கு யாரைப் போடலாம் என்று யோசித்தபோது ரம்யா கிருஷ்ணன் ஞாபகத்துக்கு வந்தார். ஒரு திருப்புமுனைக்காகக் காத்திருந்த ரம்யா கிருஷ்ணன் இந்தக் கதையைக் கேட்டதும் உடனே சம்மதித்துவிட்டார்" என்று ஆறுமுகம் படம் பற்றிக் கூறுகிறார் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா. அப்போ இன்னொரு நீலாம்பரியா?*****




## பிரசன்னாவின் 'நாய்க்குட்டி'



தமிழ் சினிமாவில் நம்பிக்கைதரக் கூடிய இளைய நட்சத்திரங்களில் முன்னணியில் திகழ்பவர் நடிகர் பிரசன்னா.

ஆரம்பத்தில் மென்மையான பாத்திரங்களே பிரசன்னாவுக்கு கிடைத்து வந்தன. அதில் அழுத்தமான முத்திரை பதித்த பிறகு, தனது முகத்தை அவர் முழுமையாகப் புதுப்பித்துக் கொண்ட படம் 'அஞ்சாதே'. வக்கிர புத்தி கொண்டவராக நீண்ட தலைமுடியுடன் வில்லனாக நடித்து ரசிகர்களிடம் பெரும் வரவேற்பைப் பிரசன்னா பெற்றார்.

இவரது புதிய படம் 'நாய்க்குட்டி'. 'பிதாமகன்' படத்தை தயாரித்த பின் வேறு தொழில்களில் கவனம் செலுத்திய வி.ஏ. துரையை மீண்டும் தயாரிப்புக்கு திருப்பியிருக்கும் படம் இது.

குப்பத்து இளைஞனாக 'நாய்க்குட்டி' படத்தில் பிரசன்னா நடிக்கிறார். இப்படத்தில் கரடு முரடான குணமும், நகைச்சுவைத் தன்மையும் கொண்ட வேடத்தில் தோன்றுகிறார் பிரசன்னா. நகைச்சுவை நடிகர் சந்தானமும் முக்கிய வேடத்தில் 'நாய்க்குட்டி' படத்தில் நடிக்கிறார்.

பிரசன்னாவுடன் நாயகியாக 'அடடா என்ன அழகு' படத்தில் நடித்து வரும் நிக்கோல் இணையவிருக்கிறார். இதனால் 'அடடா என்ன படம்!' என்று 'நாய்க்குட்டி' சொல்ல வைக்குமா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.*****



## எந்திரன் - பரபரப்பான புகைப்படங்கள்

பேரேசிலின் அடர்ந்த காட்டுப்பகுதிகளில் ரஜினி - ஐஸ்வர்யாராய் இணைந்து நடிக்கும் 'எந்திரன்' படப்பிடிப்பு மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

படம் பற்றிய தகவல்களையும், படப்பிடிப்பு ரகசியங்களையும் வெளியே கசியவிடாது, புதையல் காக்கும் பூதம் போல் ஷங்கர் பாதுகாப்பு வேலியை இறுக்கமாகப் போட்டிருக்கிறார்.

என்றாலும் அவரின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு, 'எந்திரன்' படப்பிடிப்பின்போது ஆடிப்பாடும் ரஜினி-ஐஸ்வர்யாராயின் புகைப்படங்கள் வெளியாகி விட்டன. அந்தப் பரபரப்பான புகைப்படங்களே உதயன் வாசகர்களுக்காக கலைச்சுடரில் சுடச்சுடத் தரப்பட்டுள்ளன.*****



## மோதிக் கொள்ளும் விஜயகாந்த் - வடிவேலு

தமிழகத்தில் சினிமாவட்டாரங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் இப்போதைய சூடான விடயம் விஜயகாந்த் -வடிவேலு மோதல்தான். சென்னையில் சாலி கிராமத்திலுள்ள வடிவேலுவின் வீட்டின் மீது விஜயகாந்த் ரசிகர்கள் கல்லெறிய, அதுபற்றி பொலிசிடம் புகார் கொடுத்த கையோடு வடிவேலு விட்ட காட்டமான அறிக்கையே சின்ன விடயத்தைப் பூதாகாரமாக்கியுள்ளது.





"விஜயகாந்த் ஒன்றும் கொம்பனல்ல. அவர் எந்தத் தொகுதியில் நின்றாலும், அந்தத் தொகுதியில் நான் போட்டியிட்டு அவரை வெல்வேன். விஜயகாந்தை விட எனக்கு மக்கள் செல்வாக்கு அதிகம்" என்ற வடிவேலுவின் வார்த்தைகள் விஜயகாந்தைச் சூடாக்கி விட்டன. "வடிவேலுவை இவ்வாறு செயற்படுமாறு தி.மு.க தலைவர் கருணாநிதியே தூண்டுகின்றார். என்னோடு போட்டியிட்டு வடிவேலு மட்டுமல்ல, கருணாநிதி கூட வெல்ல முடியாது" என்று பதிலுக்கு விஜயகாந்தும் சவால் விடுத்துள்ளார். இதனைத் தொடர்ந்து பல பகுதிகளில் விஜயகாந்தின் ஆதரவாளர்களுக்கும், வடிவேலு ரசிகர்களுக் குமிடையே மோதல் சம்பவங்களும் ஏற்படத் தொடங்கியுள்ளன. இதன் உச்சக் கட்டமாக வடிவேலுவின் கொடும்பாவியும் பல இடங்களில் எரிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் விஜயகாந்த் கட்சி அலுவலகங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. அரிதாரம் பூசியவர்கள் அரசியலும்செய்யநினைத்தால்இந்தக்கூத்துகளுக்குக்குறைவில்லை யென்பது உண்மைதான்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது ஒரு அபூர்வ வைரம். தென்னாபிரிக்காவில் உள்ள லிசோதோவில் அண்மையில் வெட்டியெடுக்கப்பட்ட இந்த வைரக்கல் 478 கரட் நிறையையுடையது. உலகிலுள்ள மிகப் பெரிய வைரக்கற்களில் 20 ஆவது இடத்தை இது பிடித்துள்ளது.

உலகின் முதலாவது மிகப் பெரிய வைரம் என்ற பெருமையை ஆபிரிக்காவில் 1905 ஆம் ஆண்டு வெட்டியெடுக்கப்பட்ட 3106 கரட் நிறையுடைய வைரக்கல் பெற்றுள்ளது. வெறும் சல்லிக் கல்லுக்கே அல்லாடும் நமக்கு இந்த வைரங்களெல்லாம் எட்டாக்கனிதானோ?



செல்வாபுரம், கரணவாய் தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த கி.விக்கினேஸ்வரன் என்பவருடைய வீட்டில் நிற்கும் இந்தத் தென்னையில் பாளைகள் வரவேண்டிய இடத்தில் பல தென்னங்கன்றுகள் தோன்றியுள்ளன. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பிருந்து தான் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். இந்தத் தென்னைமரம் முன்னொரு போதும் ஒரு தேங்காய்கூட காய்த்ததே இல்லையாம்.

(படம்:- கலைஞன்)




# வண்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்



கடல் வாழ் உயிரினங்களில் வெள்ளைச் சுறாக்கள் மிகப் பயங்கரமானவை. சில வேளைகளில் பெரிய படகுகளைக் கூடச் சின்னாபின்னப்படுத்திவிடக் கூடியளவு அசுர பலம் கொண்டவை. ஆஸ்திரேலியாவில் கோடை விடுமுறைக்காக ஜேம்ஸ் பீரியற்ஸ் என்பவர் கடலில் தூண்டில் போட்டபோது அதில் பெரியதொரு வெள்ளைச் சுறா சிக்கி விட்டது. பீரியற்ஸ் பயமின்றி அந்த வெள்ளைச் சுறாவைத் தட்டிக்கொடுத்து, தூண்டிலிலிருந்து விடுவித்து மீண்டும் கடலுள்குள்ளேயே அதனை விட்டுவிட்டார். பீரியற்சின் துணிச்சலான செயலை அவருடன் படகில் கூட இருந்த நண்பர் 'க்ளிச்' செய்த காட்சிதான் இது.



ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும் என்பார்கள். ஆனால் இங்கோ வண்டியின் மீதே இன்னொரு வண்டி ஏறி நிற்கின்றது. அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இரு 'பவுசர்' வாகனங்களைப் பயன்படுத்தி 'டிராகன்' போன்ற உருவமொன்று காட்சிப்படுத்தப்பட்டது. பார்ப்போரையெல்லாம் வியப்பில் ஆழ்த்திய இந்த உருவம், சிறந்த காட்சிப் பொருளுக்கான பரிசினையும் தட்டிச் சென்றது. கலையான இந்த வாகனங்களை விலைபோக விடாது பத்திரமாக அருட்காட்சியகத்தில் இப்போது காட்சிப் படுத்தி உள்ளனர்.



ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் ஆலயத்தின் வடக்காகக் காணப்படும் இந்த வேப்ப மரம் முன்னொரு காலத்திலே இரண்டு மரமாக இருந்தது. இயற்கையின் மாற்றமோ என்னவோ இரண்டு மரங்களும் தாமாகவே வளைந்து ஒன்றாகப் பிணைந்து காட்சி தருகின்றன. (படமும் தகவலும்:- கலைஞன்)





புன்னாலைக் கட்டுவன் வடக்கு, ஈவினைப் பகுதியில் கடந்த 50 ஆண்டுகளாகப் பல பேருக்குத் தொழில் கொடுத்து, அவர்களை வளம் படுத்திவிட்டு 'அஸ்பெட்டாஸ் சீற் உற்பத்தித் தொழிற்சாலை' இன்று யாருமற்ற அனாதையாய்! எஞ்சியிருப்பவை இந்த நான்கு தூல்வை தாங்கிகளும் ஒரு தண்ணீர் தாங்கியுமே! வட மாகாணத்தின் வளர்ச்சிக்குப் பங்கு வகித்த ஒரு பங்காளி, முடமாகிப் போயிருப்பதைப் பாருங்கள்.

(படமும் தகவலும்:- கலைஞன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் தமிழரை 'அடிக்கும்' அரசு வன்னியில் அணைக்க முயல்கிறது

தெருவெங்கும் திருவிழாக் கூட்டம் போல மக்கள் வெள்ளம். அடையாள அட்டைகளோடும், படிவங்களோடும் சென்ற மக்கள் அனைவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் வரிசையில் நின்று கொண்டிருக்கிறார்கள். தாம் சென்ற அலுவல் நிறைவேறிய திருப்தியில் சிலர் வெளியேறிக் கொண்டிருந்தனர். இடையிடையே தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் மக்களைப் பார்வையிட்டபடி சென்று கொண்டிருந்தனர். இதைப் படிக்கும்போது ஏதோ ஒரு தேர்தல் வாக்களிப்புப் பற்றிய வர்ணனையோ என்றே எண்ணத் தோன்றும். ஆனால், உண்மையில் இது கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்ற 'மா பெரும் தமிழர் பதிவு' பற்றிய விவரிப்பே ஆகும்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய வடமாகாண மாவட்டங்களை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு, தற்போது ஏறக்குறைய ஐந்து வருடங்களாகக் கொழும்பில் வசித்து வருகின்ற மக்கள் அனைவரும் தமக்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென இலங்கை அரசு அறிவித்திருந்தது. வழமையாக இவ்வாறான பதிவுகளை மேற்கொள்ள வாரக்கணக்கிலோ, அல்லது மாதக் கணக்கிலோ அவகாசத்தை அரசுத் தரப்பு வழங்குவதுண்டு. ஆனால், இம்முறை செப்ரெம்பர் 21 ஆம் திகதி காலையில் இருந்து மாலை வரை மட்டுமே பதிவுகளை மெற் கொள்ளலாம் என்ற வினோத அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது. எனவே, மக்களின் உரிமைகளைப் பெரிதும் பாதிக்கின்ற இந்தச் செயற்பாட்டை பெரும்பாலான அரசியல் கட்சிகள் எதிர்த்தன. அறிக்கைகளூடாகத் தமது கண்டனத்தை வெளியிட்டன.

ஏறக்குறைய 80 ஆயிரம் மக்களை வெறும் 8 மணி நேரத்திற்குள் பதிவு செய்வது சாத்தியமா எனக் கேட்டு அக்கட்சிகள் சில நடைமுறைச்சிக்கல்களைச் சுட்டிக் காட்டின. எனினும், இவற்றையெல்லாம் தம்முடைய வழக்கமான பாணியில் ஏனென்று கூடக் கணக்கில் எடுக்காமல் கருமமே கண்ணாயிருந்தனர் ஆளுந்தரப்பினர்.

இலங்கையின் பல பாகங்களிலும் தமிழர்கள் மிக நீண்ட காலமாகவே வசித்து வந்துள்ளனர். அதிலும் குறிப்பாகத் தலை நகர் கொழும்பில் தமது தொழில் முயற்சிகளுக்காக ஏராளமான தமிழர்கள் கொழும்பையே தமது நிரந்தர வாசஸ்தலமாக மாற்றிக் கொண்டார்கள். அத்தோடு பெரும் பான்மை இனத்தவருக்கு நிகராக வர்த்தகத் துறையில் கொழும்பிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் கொடிகட்டிப் பறந்தார்கள். இதனால் தமிழர்கள் மீதும், தமிழ் வர்த்தகர்கள் மீதும் பெரும்பான்மை இனத்தவர்கள் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சி, பின்வந்த காலங்களில் நிகழ்ந்த இனக்கலவரங்களின் போது மிகத் தெளிவாகவே பிரதிபலித்தது. எனினும், தன்னை எரித்த சாம்பலிலிருந்து, மீண்டும் எழுகின்ற 'பீனிக்ஸ்' பறவை போல், இழப்புகளை புறந்தள்ளி விட்டு தமிழர்கள் தலை நகரில் தலை நிமிரவே செய்தனர்.

உள்நாட்டு யுத்தத்தில் சிக்கிச் சீரழியாமல் இருப்பதற்காகவும், தம்முடைய பொருளாதர நிலைகளை உயர்வடையச் செய்வதற்காகவும். தமிழ் இளைஞர்கள் - குறிப்பாக வடபகுதி இளைஞர்கள் - வெளிநாடுகளுக்குச் செல்வது நாகரிகமாக மாறத் தொடங்கியது. சட்டபூர்வமான முறையிலும், சட்ட விரோதமாக முகவர்கள் மூலமும் அள்ளு கொள்ளையாகத் தமிழ் இளைஞர்கள் இன்றுவரை புலம்பெயர்ந்து கொண்டே வருகின்றார்கள்.

இவ்வாறு சட்டபூர்வமாகவும், சட்ட விரோதமாகவும் அந்நிய நாடுகளுக்குச் செல்வதற்கு கொழும்பே பிரதான தளமாக விளங்குகின்றது. எனவே, வர்த்தக ரீதியான நோக்கோடு கொழும்பில் தங்கியிருந்த தமிழர்களை விடவும், வெளிநாட்டு மோகத்தோடு தங்கியுள்ள தமிழர்களே அதிகம். புலம்பெயர்ந்து சென்று வசிக்கும் தமிழ் இளைஞர்கள், வடக்கு, கிழக்கு பகுதிகளில் போரின் தீவிரத்துக்குள் தமது குடும்பத்தார் சிக்கிவிடக்கூடாது என்பதற்காகவும், வசதிகளுக்காகவும் தமது குடும்பத்தை கொழும்பில் தங்கவைக்கும் வழக்கமும் தொடர்ந்தே வருகின்றது. இப்படி வந்து சேருகின்ற தமிழர்களால் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை, கொட்டாஞ்சேனை போன்ற கொழும்பின் பல பகுதிகள் 'குட்டி யாழ்ப்பாணங்களாக' உருவெடுக்கத் தொடங்கியுள்ளன.

இந்தக் 'குட்டி யாழ்ப்பாணங்களில்' கடந்த ஐந்து வருடங்களுக்குள் வந்து குடியேறிய வடபகுதி மக்கள் மாத்திரமே பொலிஸில் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இலங்கைத் தலைநகரின் பாதுக் காப்பையும், இறையாண்மையையும் உறுதி செய்யும் பொருட்டே இத்தகைய பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், கிழக்கு மாகாணம், மலையகம் போன்ற பகுதிகளிலிருந்து வந்து கொழும்பில் தங்கியுள்ள தமிழர்களை விடுத்து, வடபகுதியிலிருந்து வந்து தங்கியுள்ள தமிழர்களை மாத்திரம் 'இறையாண்மையையும், பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்காகப்' பதிவை மேற்கொள்ள வைத்தது தமிழர்களிடையே பலவித சந்தேக அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனை மேலும் அதிகரிக்கச் செய்வது போன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான கோத்தபாய ராஜபக்ஷ ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டி காணப்படுகின்றது.

''கொழும்பிற்கு வடக்கு, கிழக்கு தமிழர்கள் வரத்தேவை எதுவும் இல்லை. யாழ்ப்பாணத்திலிருந்து எவரும் இங்கு வரத்தேவை இல்லை. அவர்கள் யாழ்ப்பாணத்துக்கே திரும்பிச் செல்லலாம். முல்லைத்தீவு, கிளிநொச்சியிலிருந்து வருபவர்கள் வவுனியாவில் அமைக்கப்படுகின்ற முகாம்களுக்குச் செல்லலாம். இவர்களால்தான் தென்னிலங்கையில் விடுதலைப்புலிகளால் தாக்குதலை மேற்கொள்ள முடிகின்றது. அதேசமயம் தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் அல்லர் என்பதையும் நாம் உணர்ந்து கொண்டுள்ளோம். இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளை அகற்றிய பிறகு கிழக்கு மாகாண மக்களுடன் இணைந்து



பணியாற்றுகின்றோம்''. - இப்படி அந்தப் பேட்டியில் வடபகுதி மக்களை மாத்திரம் பதிவுக்கு உட்படுத்திய காரணகாரியங்களை கோத்தபாய ராஜபக்ஷ பட்டியலிட்டுள்ளார்.

தென்னிலங்கையில் வசித்து வருகின்ற தமிழர்கள் மீது அண்மைக் காலமாக திணிக்கப்பட்டு வரும் பல நெருக்கங்களையும் பாதுகாப்புச் செயலாளரின் கருத்துக்களையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்க்கும்போது எவ்விதத்திலாவது கொழும்பிலுள்ள வடபகுதித் தமிழர்கள் வெளியேற்றப்படுவதையே அரசு விரும்புவதாகத் தெரிகின்றது. அதற்காகவே விதவிதமான பொலிஸ் பதிவுகள், தகுந்த காரணங்கள் இன்றித் தங்கக்கூடாது என்ற அறிவுறுத்தல்கள், விடுதிகளில் தமிழர்கள் தங்குவதற்கு இறுக்கமான நடைமுறைகள், சுற்றி வளைப்புகள், கைதுகள் எனப் பலவிதமான வழிகளிலும் மனரீதியாகவும், உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிப்புக்களை உண்டுபண்ணி வடபகுதித் தமிழர்களை தாமாகவே கொழும்பை விட்டு அகற்றுவதற்கான காய்நகர்த்தல்களை அரசாங்கம் திட்டமிட்டே மேற்கொண்டு வருகின்றது. அதனையே கோத்தபாயவின் கருத்துக்களும் ஊர்ஜிதம் செய்கின்றன.

கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உடந்தையாகச் செயற்படுகின்றார்கள் என அரசு சந்தேகிக்கின்ற வடபகுதித் தமிழர்களை இராணுவக் கரம் கொண்டு பலவந்தமாக வெளியேற்றவும் முடியாது. ஏற்கனவே ஒரு முறை அவ்வாறு பலவந்தமாகத் தமிழர்களை பஸ்களில் ஏற்றி வவுனியாவுக்கு அனுப்பி வைத்த போது சர்வதேசத்திடம் பலமான 'குட்டு' வாங்கியதன் விளைவாக அத்திட்டத்தை அடியோடு ஆட்சியாளர்கள் கைவிட்டனர். எனினும், மறைமுக அழுத்தங்கள் மூலம் கொழும்பில் வசிக்கும் வடபகுதித் தமிழர்களை எப்படியும் வெளியேற்றி விட வேண்டுமென்ற கங்கணத்தோடே மஹிந்த சிந்தனையாளர்கள் செயற்பட்டு வருகின்றதையே கோத்தபாயவின் கருத்துக்கள் வெளிப்படுத்தி உள்ளன.

குறித்த பேட்டியிலே ''கொழும்பில் தமிழர்கள் மையம் கொண்டு குவிவது குடிசார் சமநிலையில் தளம்பலை ஏற்படுத்தும். எனவே, அதனைத் தவிர்க்கவும் அந்தந்தப் பகுதிகளிலேயே மக்கள் வசிப்பது நல்லது'' என்ற சாரப்படவும் கோத்தபாய கருத்து வெளியிட்டுள்ளார்.

வட பகுதித் தமிழர்கள் கொழும்பில் தங்கியிருப்பதால் அங்கு குடிசார் சமநிலையில் பாதிப்பு ஏற்படுவதாகக் கூறி - அந்தக் குடிசார் பரம்பலைச் சமநிலையில் பேணுவதற்காக வடபகுதி மக்களை அந்தந்தப் பகுதிகளுக்கு போகச் சொல்லுகின்ற அரசு, யாழ்ப்பாணத்தின், வலிகாமம் வடக்குப் பகுதியில், தமிழர்கள் வாழ்ந்த பிரதேசத்தில் சுமார் நான்கில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட நிலப்பரப்பை உயர்பாதுகாப்பு வலயமாகச் சுருட்டி வைத்துக் கொண்டு, அங்கு மக்களைக் குடியேற விடமால் தடை போடுகிறது.

அந்த நான்கில் ஒரு பகுதி மக்கள் குடிபெயர்ந்து குடாநாட்டின் மற்றைய பிரதேசங்களுக்குச் சென்று நெருக்கமாக வாழ்ந்து அவலப்படுகின்றார்களே, அது குடிசார் சமநிலைப்பாதிப்பாக கோத்தபாயவுக்குத் தெரியவில்லையா என்ற நியாயமான கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது. இருந்தாலும் இதற்கும் அரசுத்தரப்பும் கோத்தபாயவும் ஏதேனும் புதிய 'விஞ்ஞான விளக்கங்களை' வைத்திருக்கக்கூடும்.

படையினரால் முற்றாகக் கிழக்கு மாகாணம் கைப்பற்றப்பட்ட பின்னர் படையினர் அப்பகுதி மக்களோடு இணைந்து செயலாற்றுவதனால்தான் கிழக்குப்பகுதி மக்களுக்கு கொழும்பில் நடந்த பதிவிலிருந்து விலக்களிக்கப்பட்டதாக கோத்தபாய கூறியுள்ளார். அப்படியானால் படையினரால் மிக நீண்ட காலத்துக்கு முன்னரே கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்து மக்களோடு படையினர் இணக்கமாக நடந்து கொள்வதில்லை என்பதை பாதுகாப்புச் செயலாளர் ஒத்துக் கொள்கிறாரா? இல்லாவிடின் யாழ்.குடாநாடு முற்றுமுழுதாகப் படையினரின் கட்டுப்பாட்டினுள் இல்லை என்ற இயலாமையை ஒப்புக் கொள்கின்றாரா? எவ்வாறெனினும் ஏதோவொரு உள்நோக்கத்தோடே வடபகுதித் தமிழர்கள் தொடர்ச்சியான அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

கொழும்பிலுள்ள தமிழர்களை வெளியேற்றுவதில் அதீத ஆர்வங்காட்டி வருகின்ற இதே அரசுதான், வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களை தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வந்து சேரும்படி ஒற்றைக்காலில் நிற்கின்றது. வடபகுதித் தமிழர்கள் கொழும்பில் வந்து குவிவதால் குடிசார் சமநிலை குழம்புவதாகக் கூப்பாடு போடுகின்றவர்கள், வன்னி மக்கள் வவுனியாவில் வந்து குவிவதால் குடிசார் சமநிலை குழப்பமுறுமென்பதை ஏன் கணக்கில் எடுக்கவில்லை? இன்றைக்கு ஆசை வார்த்தைகள் காட்டி வன்னி மக்களை வவுனியாவுக்கு வரவழைப்பதற்குத் தூண்டில் போடுகின்ற ஆட்சியாளர்கள், வன்னி மக்களைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகள் வவுனியாவில் தாக்குதல்களை மேற்கொள்ளமாட்டார்களென நம்புகிறார்களா? அவ்வாறு தாக்குதல்கள் நிகழ்ந்தால், தமது அரசியல் தேவைகளும், இலாபங்களும் பூர்த்தியான பின்னர் கொழும்பு வாழ் தமிழர்களைப் போல இவர்களையும் வவுனியாவிலிருந்து துரத்த அரசு முயலாதா?

இவ்வாறான ஆயிரமாயிரம் கேள்விகளுக்கு இப்போதைக்கு விடைகளில்லை என்பதே யதார்த்தம். ★

**-பிரமன்-**

# எனது மகன் ஹிதேந்திரன் சாகவில்லை 6 பேருக்கு உயிர் கொடுத்து வாழ்கிறான்

## தந்தை (டாக்டர்) உருக்கமான பேட்டி



தந்தை டாக்டர் அசோகன், தாய் டாக்டர் புஷ்பாஞ்சலி ஆகியோருடன் ஹிதேந்திரன்.....

எனது மகன் சாகவில்லை, 6 பேருக்கு உயிர் கொடுத்து வாழ்கின்றான். அவனது இதயத்தை 9 வயதுச் சிறுமிக்குப் பொருத்தியதன் மூலம் என் மகனின் இதயம் தொடர்ந்து துடித்துக் கொண்டே இருக்கும். அது துடிக்கும்போது அப்பா, அம்மாவை நினைத்துக் கொண்டே துடிக்கும்.

- இவ்வாறு விபத்தில் சிக்கி இறந்த தனது மகன் ஹிதேந்திரனின் உடலுறுப்புகளைத் 6 பேருக்குத் தானம் செய்த டாக்டர் தந்தை கண் கலங்கியபடி [illegible] ளித்தார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இதயம், சிறுநீரகம், கல்லீரல் போன்றவைகள் பாதிக்கப்பட்டு, எத்தனையோ பேர் மாற்று உறுப்புகள் கிடைக்காமல் தவிக்கிறார்கள். நாங்கள் டாக்டர்கள் என்பதால் இதன் வலி எங்களுக்குத் நன்றாகத் தெரியும். இதனால்தான் மகனின் உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன்வந்தோம். அவனுடைய இதயம் மூலம் ஒருவருக்கும், அவனது கண்கள் மற்றும் சிறுநீரங்கள் மூலம் 4 பேருக்கும், கல்லீரல் மூலம் ஒருவருக்கும் வாழ்வளிக்க முடியும். என் மகன் இறந்துவிட்டாலும், அவன் மற்றவர்கள் மூலம் உயிர் வாழ்வதாக நினைத்து நானும், எனது மனைவியும் மகிழ்ச்சியடைவோம்.

யாராவது விபத்தில் சிக்கினால் உடனே உதவ முன்வரவேண்டும். பொலிஸ் பிரச்சினை வரும் என்று யாரும் ஒதுங்கிவிடக்கூடாது. விபத்தில் சிக்கியவர்கள் உயிர் பிழைக்க முடியாது என்ற நிலை வரும்போது, உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன்வர வேண்டும். ஒருவரின் உறுப்புகளிலிருந்து 6 பேர் உயிர் பெற முடியும். எனவே எனது மகன் சாகவில்லை 6 பேருக்கு உயிர் கொடுத்து வாழ்கின்றான். இனி எனது மகனின் இதயம் தொடர்ந்து துடித்துக் கொண்டே இருக்கும். அப்போது அது அப்பா, அம்மாவை நினைத்தபடி துடிக்கும். அதனால் அவன் வாழும் திருப்தி எங்களுக்கு ஏற்படும் - என்று கூறினார்.

ஹிதேந்திரனின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களிடம் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அதில், டாக்டர் அசோகன் மற்றும் அவரது மனைவி டாக்டர் புஷ்பாஞ்சலி ஆகியோர் கூறிய வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. அவை இதோ:-

இறந்தும் வாழும் எங்கள் ஹிதேந்திரன், எங்கள் இதயம் கவர்ந்த ஹிதேந்திரன், ஒரு சிறுமி வாழ தன் இதயம் தந்துவிட்டான். எங்கள் கண்மணி பார்வையற்ற இருவருக்கு கண்ணின் ஒளியாகிவிட்டான். மெய்நலிந்த ஒருவருக்கு தன் கல்லீரல் தந்து காப்பாற்றி விட்டான். ஒருவனாய் இருந்த எங்கள் மைந் தன் 'ஹிதேந்திரன்' இன்று முதல் அறுவராய் வாழ்கின்றான்.- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்துச் சிறுகதைத் துறையில் முன்னணிப் படைப்பாளிகளுள் ஒருவராக அடை
யாளப்படுத்தத் தக்கவர் அமரர் செ.யோகநாதன் ஆவார்.
1960 களில் ஆற்றல் மிக்க இளம் எழுத்தாளனாக உருவெடுத்து, காலப்
போக்கில் தமிழுலகமே நன்கறிந்த திறமைமிக்க படைப்பாளியாக
வாழ்ந்தவர். அவரை ஒரு தமிழ்ச் சிறுகதை எழுத்தாளராக முகிழ வைத்த
பெருமை பேராதனைப் பல்கலைக்கழகத்தையே சாரும். பல்கலைக்க
ழகத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் வெளியான பல்கலைக்கழக
வெளியீடுகள் பலவற்றில் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன.
பல்கலைக்கழகத்தில் கற்ற வேளையிலேயே 1964 இல் அவரது சிறு
கதைத் தொகுதி வெளியாகியமை குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.
தமது மாணவ பருவத்திலேயே 'வசந்தம்' என்ற பெயரில் சஞ்சிகை
யொன்றை நடத்திச் சாதனை புரிந்தவர்.
1962 இல் இவரது முதலாவது சிறுகதை 'மனக்கோலம்' கலைச்செல்வி சஞ்சிகை
யில் வெளியானது.
விதந்து பேசப்பட்ட பல சிறுகதைகளைப் படைத்த யோகநாதனின் சிறுகதைகள்
அன்றைய காலகட்டத்தில் வெளியான பெரும்பாலான ஈழத்து மற்றும் தமிழக பத்திரி
கைகள், சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன.
தமிழ் மக்களது பலதரப்பட்ட வாழ்க்கைப் பிரச்சினைகளின் அடிப்படை மையங்
களைத் தமது கதைகளின் கருவாக்கி, வார்த்தைகளால் உயிரூட்டி உலவ வைத்தவர்
எனப் புகழாரம் சூட்டப்பட்டவர்.
இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து உதவி அரசாங்க அதிபராக உயர் பதவி
வகித்தவர். தொடர்ச்சியாகத் தமிழகத்தில் பல ஆண்டுகள் தங்கி வாழ்ந் தவர்.
அக்காலத்தில் தமிழ்ச் சிறுகதைத்துறைக்கு நிறையவே பங்களிப்பு வழங்கினார்.
தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில் வெளியான இவரது சிறுகதைத் தொகுதி 'கண்ணீர்
விட்டே வளர்த்தோம்' பலரது பாராட்டுக்குப் பாத்திரமாயிற்று.
'ஒளி நமக்கு வேண்டும்' என்ற இவரது சிறுகதைத் தொகுதி இலங்கை சாஹித்திய மண்
டலப் பரிசினைப் பெற்றதுடன், வேற்றுமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப்
பெருமை பெற்றது.
ஈழத்துச் சிறுகதைத் துறைக்கு இவரது பாரிய, அரிய பங்களிப்பாக அமைவது அவர்
தொகுத்து வெளியிட்ட 'இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்' என்ற இரண்டு சிறுகதைத்
தொகுதிகளாகும். 'வெள்ளிப்பாதசரம்', 'ஒருகூடைக்கொழுந்து' ஆகிய தலைப்புக்களுட
னான அச்சிறுகதைத் தொகுதிகள் மூலம் ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்கள் பலரை
தமிழுலகுக்கு மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்திவைத்த பெருமை யோகநாதனையே
சாரும். தமது வாழ்க்கையின் கடைசிக் காலத்தை யாழ். மண்ணிலேயே கழித்தவர்.
அவரது 65ஆவது பிறந்த தினம் எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியாகும். அதனை
யொட்டி அவரை நினைவுகூர்ந்து அவரது ''மோகினி'' சிறுகதையைப் பிரசுரிக்கிறோம்.

# மோகினி

''பொய் சொன்ன வாய்க்குத்தான் சினிமாவில் போஜனம் கிடைக்கும் சாமி....'' என்ற வார்த்தைகளோடுதான் எனக்கு நாகராஜன் அறிமுகமானான். நாகராஜன் இருபது, இருபத்தைந்து ஆண்டு காலமாய் சினிமாத்துறையில் இருந்து வருகிறான். புரொடக்ஷன் மானேஜராக சினிமா வட்டாரத்தில் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கி பதினைந்து ஆண்டுகள். 'நாகு' என்பது செல்லப்பெயர். என்னை எனது அண்ணன் பரசுராமன்தான் நாகராஜனிடம் கொண்டு வந்து சேர்த்தார். நாகராஜனும் அண்ணனும் சிறுபிராயத் தோழர்கள்.

''நாகு சார், இவனுக்கு நீங்கதான் ஏதாவது செய்தாக வேணும்.......''

நாகராஜன் என்னை மேலுங்கீழுமாகப் பார்த்தான்.

''சினிமாவில் நடிக்க வைக்கட்டுமா? ஒரு அசப்பில் பார்த்தா எம்.கே. ராதா மாதிரி இருக்கிறான்......''

எனக்கு உடல் கூசிற்று. எம்.கே.ராதாவின் படங்களை நான் பார்த்திருக்கிறேன். அபூர்வ சகோதரர்கள், சம்சாரம், சந்திரலேகா, பாசவலை...... அழகான மனிதர், வசீகரமான கண்களும், எடுப்பான நாசியும், மனதை அள்ளும் புன்னகையும் கொண்ட நிஜமான அழகன் எம்.கே.ராதா. ஔவை யாரை அண்மையில் கூட டி.வியில் பார்த்து அந்த மனிதரை நான் வியந்திருக்கிறேன். அந்த மனிதரோடுதானா என்னை ஒப்பிடுவது..... சீ! அப்படியிருந்தால் காந்தாமணி என்னைப் பார்த்து ஒரு நாள், ''உன் மூஞ்சியும் முகரக் கட்டையும்'' என்று திட்டியிருப்பாளோ?

''என்ன தம்பி, நடிக்கிறியா?''

நான் அண்ணனைப் பார்த்தேன். அண்ணன் இப்போதே சினிமா நடிகனின் உடன்பிறவி என்ற பர்வசத் திலே மூழ்கிப்போய் நின்றதை அவரது முகம் தெரிவித்தது. நான் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு உறுதியோடு கூறினேன்.

''வாணாங்க''

அந்த ஒரு வார்த்தையே நாகராஜனையும் அண்ணனையும் நிலைகுலையச் செய்தன. என்னை வியப்போடும், கோபத்தோடும் அண்ணன் பார்த்தார். வார்த்தைகளற்று நின்ற அவரின் முகத்தில் நிறையவே வார்த்தைகள் இருந்ததை நான் அறிந்து கொண்டேன். அளவு மீறின கோபம் வந்தால் அண்ணன் பேசவே மாட்டார்.

''இல்லைங்க, எனக்கு நடிக்கவே வராதுங்க. ஏதாவது நிர்வாக வேலை - அதாங்க மானேஜர், புரொடக்ஷன் சைடுன்னு பார்த்து ஏதாவது வேலை பார்த்துக்கொடுத்திடுங்க.....''

நாகராஜன் என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

''என்ன தம்பி..... நீங்க விபரம் புரியாத ஆளா இருக்கிறீங்க! சினிமாவில் நடிக்கணும்னு அவனவன் எல்லாம் ஆலாப் பறக்கிறான்.....''

நான் அண்ணனைப் பார்த்தேன். முகம் இன்னும் மாறவில்லை. என்னையே வெறித்துப் பார்த்தபடி நின்றார். அவர் பார்வை என் எலும்பில் முள்ளாகக் குத்திற்று. நான் வலது கைப் பெருவிரலால் கன்னத்தை வருடினேன். நேராகப் பார்க்க முடியாமல் மனம் சோர்ந்தது. 'MAN WATCHING' என்ற புத்தகத்தில் ஒருவன் பொய் சொல்கிறபோது எவ்விதம் அவனது உடல் நிலை மாற்றம் அடையும் என்பதை விரிவாகச் சொல்லியிருந்தார் டென்ஸ் மோரீஸ். அப்படியே அந்த உடல் மாற்றங்கள் இப்போது என்னில் நிகழத் தொடங்கின.

''அண்ணாவுக்கு நான் சினிமாவில நடிக்கிறதுதான் இஷ்டமானால் எனக்கும் சினிமாவில் நடிக்க இஷ்டமே. ஆனால் அண்ணன்தான் உலகில ஒழுக்கத்தை விட பெரிய சமாச்சாரம் எதுவுமே இல்லை என்று எனக்கு கற்பித்தது.....''

''அப்படியா?'' என்றவாறு அண்ணனை ஏறிட்டான் நாகராஜன்.

''ஆமாங்க'' என்றார் அண்ணன். என்ன அதிசயம்! மறுகணமே அவர் என்னையும் நாகராஜனையும் பார்த்தார்.


''அவன் இஷ்டப்படி புரொடக்ஷன் சைட்லயே சேர்த்திடுங்க'' என்றார் அண்ணன், முகத்தின் இறுக்கம் மெல்லெனவே கரைந்து போக.

சில மணி நேரங்களில் நான் புரொடக்ஷன் மானேஜரின் அஸிஸ்டெண்டாகவோ அல்லது அஸிஸ்டெண்ட் புரொடக் ஷன் மானேஜராகவோ நாக ராஜனால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பட்டேன். நாகராஜனும் அவனது இன் னொரு அஸிஸ்டெண்டான குமரபுரம் சந் தான கிருஷ்ணனும் அந்தத் தொழிலின் நெளிவு சுளிவுகளை எனக்குப் புரியும்படி கூறினார்கள்.

இந்த நேரத்தில் நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை சொல்லியே ஆக வேண்டும். எனக்குப் படிக்கத் தெரிந்த நாளிலிருந்தே நான் சினிமா செய்திகளைப் படிப்பதில் மிகுந்த அக்கறையும், ஆர்வமும் உள்ளவனாக இருந்து வந்திருக்கிறேன். இதற்கு என் அப்பாவே காரணம். எனது அப்பா சினிமாப் பிரியர். சினிமாப் பிரியர் என்றால் அப்படி இப்படியான சினிமாப் பிரியர் அல்ல; தியாக ராஜ பாகவதரை நேரே பார்த்து அவரோடு நின்று போட்டோ எடுத்துக் கொண்டவர். அப்பாவுக்கு சுருள் கருளான தலைமுடி. தியாகராஜ பாகவதரைப் போலவே கிராப் வைத்துக் கொண்டவர். தியாகராஜ பாகவதர் தலைமுடிக்குப் பூசுகிற வாசனைத் தைலத்தையே அப்பாவும் பூசிக் கொண்டவர். அப்பாவுக்கு தனது கால நடிக, நடிகையரோடு பிரியமான பரிச்சயம். அதனால் எனக்கு முந்திய சினிமா உலகமும் எனக்கு பழக்கமும், பரிச்சயமும் கொண்டதாயிருந்தது. முன்னணி சினிமா நடிகர், நடிகைகளின் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை வரலாறு, காதல் களியாட்டங்கள், விருப்பு வெறுப்புகள் என்பன பற்றியெல்லாம் நான் தெரிந்து வைத்திருந்தேன். எனக்கென்று சினிமாத் துறையில் விருப்பங்கள் இருந்தன. பி.யூ. சின்னப்பாவை எனக்கு மிகவும் பிடிக்கும். பெண்களில் டி.ஆர்.ராஜகுமாரி, ராஜகுமாரியை விட் டால் ஜெகன் மோகினியைப் பிடிக்கும். எனக்கு ஜெகன் மோகினியைப் படிக்கும் என்றவுடன் உங்கள் முகத்தில் புன்னகை அரும்புவதை என்னால் உணரமுடிகின்றது. எனது ரசனையை மட்டமானதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால் ஜெகன் மோகினியின் அந்த வில்லாக வளையும் உடலை, பேசுகின்ற வசீகரக் கண்களை, மோகம் விளைவிக்கின்ற மாதுளம் பிஞ்சு உதடுகளை நீங்கள் மனத்திலிருந்து எளிதிலே புறந் தள்ள முடியுமா?

முடியாது. ஏனென்னில் ஜெகன்மோகினி லட்சோபலட்சம் ரசிகர்களின் கனவுக் கன்னி. அவள் இடம் பெறாத படங்கள், அட்டைப்படங்கள், விளம்பரங்கள் என்று ஏதாவது இருந்திருக்குமா? யாவற்றிலும் அவள் கவர்ச்சி பூக்க வீற்றிருந்தாள். இவையெல்லாம் எப்போது? ஒரு பத்தாண்டுகளுக்கு முன்னால், பத்தாண்டுகள் என்பது பாதி தலைமுறை காலம் என்று நீங்கள் முணுமுணுக்கலாம். ஆயினும் என்ன? இன்றைக்கு ஜெகன்மோகினி நடிக்காத போதிலும், பழைய படங்கள் திரையிடப்படுகின்ற போது அவளைப் பார்ப்பதற்காகவே ரசிகர் கூட்டம் எப்படி அலைமோதுகிறது! மீண்டும் வாரக்கணக்கிலும், நூறு நாள்களாகவும் அவள் நடித்த சினிமாக்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

நாகராஜன் அன்றைக்கு தலைகால் தெரியாத பரவசத்தில் பறந்தான். என்னையும், குமாரபுரம் சந்தான கிருஷ்ணனையும் மிலிட்டரி ஓட்டலுக்கு அழைத்துப் போய் பிரியாணியும், சிக்கன் 65 ம் வாங்கிக் கொடுத்தான். பீடா வாங்கிக் கொடுத்தான். பாதாம்கீர் குடிக்கும்படி வற்புறுத்தினான். எங்களுக்கு விஷயமே புரியவில்லை. கடைசியில்தான் நாகராஜன் முடிச்சை அவிழ்த்தான். அதாவது ஜீவன் கிரியே ஷன்சின் படமான 'நாட்டியதாரா' படத்தின் பூர்வாங்க வேலைகள் தொடங்கிவிட்டன.



அதன் முதல்கட்ட படப்பிடிப்பு ஒரு மாதத்தில் ஆரம்பமாகிவிடும். நாளைக்கு நடிகர் தேர்வு. கதை, திரைக்கதை வசனம் யாவுமே ஏற்கனவே தயாராக உள்ளன என்று நாகராஜன் கூறியிருந்தான்.

கதாநாயகியின் அம்மாவாக ஜெகன் மோகினியையே போட வேண்டும் என்பதில் தயாரிப்பாளர் மிகவும் உறுதியாய் இருந்தார். ஆனால் அம்மாவாக நடிப்பதற்கு ஜெகன்மோகினி சம்மதிப்பாளா என்ற சந்தேகம் இருந்தது. நாகராஜன் தயாரிப்பாளரை அர்த்த புஷ்டியோடு பார்த்தான். 'அதைப் பற்றிய கவலையையே வுட்டுடுங்க ஸார். நம்ம படத்திலே ஜெகன்மோகினி இருக்கிறா. கால்ஷீட் வாங்கித் தர்றதெல்லாம் நம்ம பொறுப்பு.....' தயாரிப்பாளர் கத்தைபணத்தையும், கம்பெனி ரசீதுப் புத்தகத் தையும் நாகராஜனின் கையிலே கொடுத்தார்.

தயாரிப்பாளர் அங்கிருந்து பேரீகும்போது அவரது இன்னொரு அம்பாஸடர் காரை நாகராஜனிடம் கொடுத்துச் சென்றார். அவர் போனதும் நாகராஜன் எங்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். வழியிலேதான் நாங்கள் ஜெகன்மோகினியின் வீட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறோம் என்று சொன்னான். உடனே என்னை குமாரபுரம் சந்தான கிருஷ்ணன் மகிழ்ச்சி மின்னப் பார்த்தான். எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை வார்த்தைகளால் சொல்ல முடியாது. ஜெகன் மோகினியின் மாம்பழக் கலரும், பேசும் கண்களும், வாகான உடலும் அடிக்கடி கண்களில் தோன்றிக்கொண்டிருந்தன. எல்லாம் பத்து ஆண்டுகளுக்கு முந்திய திரைப்படத் தோற்றங்கள் தான். இப்போது அவள் எப்படி இருப்பாள் என்பதை கற்பனை செய்ய முயன்றேன்.

''மோகினியை நீங்க நேர்ல பார்த்தீங்களா?'' என்று தொடக்கிவிட்டு ''அவள் சாதாரண பொண் கிடையாதப்பா. லட்டு, மைசூர் மகாராஜாவோட 'கீப்' போட பொண்ணு. அதுக்கு மேல என்ன சொல்றது? அவ உதடு இருக்கே, கிளி கண்டா கொத்தி எடுத்திடும். கொவ்வப்பழம். ரெண்டு நாள் என்னோட அவ இருந்திருக்கறா.....'' என்று கூறிவிட்டு நிறுத்தினான் நாகராஜன்.

எனக்கு நாகராஜனைப் பார்க்க எரிச்சலாக இருந்தது. ஆத்திரமும் உண்டாயிற்று. அவனது முகத்தில் பூத்திருந்த வசீகரத்தைப் பார்க்கையில் அவனது வார்த்தைகள் பொய்யாக இருக்குமென்று தோன்றவில்லை. ஆனாலும், அவன் மேலே இனம் புரியாத கோபம் உண்டாயிற்று.

நாகராஜன் காரை நிறுத்தச் சொன்னான். நான் பரபரப்பானேன். நானும் குமாரபுரம் சந்தான கிருஷ்ணனும்மிகவும்பவ்வியமாக காரிலிருந்து கீழே இறங்கினோம். (14 ஆம் பக்கம் பார்க்க...)

## விரட்டிட "செவ்வாய்" தன்னை வீரனே எழுந்து வாடா!



விடு தோறும் குமர்கள் கூடி
விம்மிடக் கண்டீரன்றோ?
கேடு கெட்ட ''செவ்வாய்''க் குற்றம்
கிட்டியது சாதகத்தில் என்று
பருவத்தில் திருமணத்தை விட்டு
பரிதவித்து நிற்கின்றாரே!
அட இந்த செவ்வாய் தோஷம்
அத்தனை கொடியதாமோ!?
இப்படிக் கலங்குகின்ற எங்கள்
எழிலுறுபாவையொன்றின் நிற்கதிதனையிங்கு
கவிதையாக்கி, நீட்டினேன் படித்துப்பாரும்

மயிலென அழகில் மிக்காள்
மான்விழி மாதரசி அன்னாள்
குயில்தன் குரலினோடு
கூந்தலும் மேகம் போன்றாள்
தமிழதை சுவைத்தே பேசும்
தகைமையில் ''எம்.ஏ'' ஆனாள்
அமிழ்தெனும் குரலினோடு
அரங்கினில் பாட வல்லாள்
கற்பனை மிகுதி மிக்காள்
கவி பல இயற்றி நிற்பாள்
அற்புத அழகுப் பாவை
அரங்கினில் ஆட வல்லாள்
பற்பல உவமை சொல்லும்
பண்டிதர் இவளைக் கண்டு
அற்புத தமிழ்ப் பாவையென்று
அகமிக மகிழ்ந்து கொள்வார்
நவயுக நாகரிக நடையுடை
நம் தமிழுக்கொவ்வாதென்பாள்
விரலதும் பவளம் போன்று
மீட்டிடும் வீணை தன்னை
கண்டவர் களிப்புற்று நிற்க
கற்பினில் உயர்ந்தாள் நங்கை
அண்டையில் பழகுவோர்கள்
அவள் அறிவினை மெச்சி நிற்பர்
சண்டைகள் இவளைக் கண்டால்
சரிவர ஓய்ந்து போகும்

பெண்டுகள் இவள் பெருமை தன்னை
பேசியே பெருமை கொள்வர்

கெட்ட இச் செவ்வாய் தோஷம்
கேட்டினை விளைத்து நிற்க
எட்டினில் செவ்வாய் இந்த
ஏந்திழைக்கென்றார் ஊரார்
தொட்டவன் தொலைந்து போவான்
தோகையும் விதவையாவாள்
அட்டமச் செவ்வாய் மெல்ல
அடித்திடும் ஆண் மகனை என்றார்
இப்படி ஏசிப்பேசி இளிவுற்ற இந் நங்கை
'அப்படி நாப்பதாண்டை'
அகம் நொந்தே கழித்து விட்டாள்

ஆங்கில நாட்டில் மற்றும்
அமெரிக்க நாடு தன்னில்
சீனத்தில் ருஷ்யாவில்
சீர்மேவு கனடா நாட்டில்
கடல் தனைக் கடந்து வாழும்
களங்கமில் தமிழர் வாழ்வில்
சென்னையில் மதுரை தன்னில்
சிறப்புற்ற எம் வரலாறு தன்னில்
செவ்வாயைக் காரணமும் காட்டி
சீரழிந்ததோ அன்றெம் வாழ்வு?

வென்றிடச் செவ்வாய் தன்னை
வீரனே! எழுந்து வாடா!!
கண்ணிறை கண்ணீர் மல்க
கலங்கிடும் வனிதையர் தம்
துன்பத்தைத் துடைத்தெறிய
துணிவுண்டோ! உனக்கு என்பேன்
மண்ணினில் செவ்வாய் தன்னை
மதியினால் விரட்டி ஓட்டு
பகுத்தறிவுப் பாசறையில்
நீயும் பகலவன் போல் [illegible]

விகடகவி [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோகினி......

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாகராஜன் குமாரபுரம் சந்தான கிருஷ்ணனைக் காரிலேயே உட்காரும்படி சொல்ல, அவன் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டே காரினுள் ஏறினான்.

காலிங்பெல் கிணுகிணுத்தது. எனக்கு லோசாக வேர்த்தது. பொமரேனியன் நாய்க் குட்டி ஒன்றைப்பின் தொடர்ந்து இரண்டு பெண்கள் வந்தனர். 16, 18 வயதுகள். ஜெகன் மோகினியின் 16, 18 வயதுத் தோற்றங் களை அச்சில் வடித்த தோற்றம்.

''அம்மா இருக்காங்களா?''

நாகராஜனின் குரலை வெட்டிற்று பதி னாறு வயது.

''அவங்க தூங்கறாங்க. நீங்க?''

நாகராஜன் இறுமாப்போடு புன்னகை செய்தான்.

''நாகு என்று போய்ச் சொல்லு. அம்மா உடனே ஓடியாந்திடுவா....''

பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

மூத்தவள் எங்களைப் பார்த்து, ''ஹாலில் உட்காருங்க ஸார், அவங்க வந்துடுவாங்க....'' என்றாள். பின்னர் இருவரும் உள்ளே போய் விட்டனர்.

''இவங்க......'' என்று இழுத்தேன். நாகராஜனுக்கும் நெற்றியில் சுருக்கங்கள். ''இவ்வளவு பெரிய பெண்கள்..... மோகினியின் தங்கைகளாய் இருக்குமோ?'' தன்னையறியாமலே கூறினான் நாகராஜன்.

மெட்டிகள் சிணுங்கின. முழுகி உலர்த்தி அலை அலையாய் பறக்கின்ற கூந்தலை ஒதுக்கியவாறு வந்து கொண்டிருந்தாள் ஜெகன்மோகினி தூக்கத்திலிருந்து எழுந்து வருகிறாளென்பதை நம்பமுடியவில்லை. குங்குமம் நெற்றியில் அரைகுறையாய். மூக்குத்தி பளீரென்று மின்ன, நாகராஜ னைப் பார்த்தாள்.

''அண்ணாச்சிக்கு இப்பத்தான் ஞாபகம் வந்ததாக்கும்.''

தலையை ஆட்டி கூந்தலைப் பின்னே ஏற்றியவாறே நெகிழ்ந்தாற் போன்ற குரலில் கேட்டாள் ஜெகன் மோகினி. நாகராஜ னுக்குப் பக்கத்திலே உள்ள ஸோபாவில் புஸ்ஸென்று உட்கார்ந்து கொண்டாள். நழுவிய மாராப்பைப் பற்றி அக்கறையின்றி, ''அண்ணாச்சி என்ன குடிப்பீங்க?'' என்று கேட்டுவிட்டு, ''டே கணபதி கூல்டிரிங்ஸ் எடுத்து வா....'' என்றாள்.

பிறகு என்னைப் பார்த்தாள். புன்னகை செய்தாள். நான் வணக்கம் சொல்ல, நாகராஜன் என்னை அவளுக்கு அறிமுகம் [illegible]தான். எனக்கு அவளைப் பார்க்க கூ[illegible]மாயிருந்தது. அன்று கண்ட அதே [illegible]. அதே தீட்சண்யமான கண்கள். ஆனால் முகத்திலும் உடலிலும் லேசான தளர்ச்சியிருந்தது. முந்தானையை சரி செய்து கொண்டவளை நாகராஜன் ஏற இறங்கப் பார்த்தான்.

''மலையாளத்தில் நாலு படம்.இருக்கு. ஒழுங்கா புடவை கட்டிட்டு நடிக்க வான்னு யாருமே கூப்பிடறதில்லை.''

கண்ணைச் சிமிட்டினாள்.

''ஆனா உடம்பு இன்னும் வில்லாட்டம் தான் இருக்கு. அளவுக்கு மீறி குடிக்கா தேம்மா..... சதை போட்டிடும்.''

''போங்கண்ணா....'' அவள் கழுத்தை வெட்டினாள். பின்னர் அவளது நளினமான குரலில் தணிவாகக் கேட்டாள்:

''அண்ணா, எனக்கு தமிள் பீல்டில நடிக்கணும்னுதான் ஆசை. ஆனா நீங்க மனம் வைக்கமாட்டேங்கிறீங்க......''

ஜெகன் மோகினியை நாகராஜன் நேரே பார்த்தான்.

''பத்துப் பதிமூணு வயசுப் பொண்ணுங் களுக்கெல்லாம் ஸாரி கட்டி, நடிக்கக் கூட் டிட்டு வந்துடராங்க மோகினி.....''

''அப்ப எனக்கு வயசாச்சுங்கிறீங்க?''

அவளின் குரல் கவலையில் இழைந்தது. நாகராஜன் பதைபதைத்தவன் போல பாவனை செய்தான்.

''இல்லை கண்ணு, உன் கால்தூசுக்குக் கூட இப்ப உள்ள பொம்பளைங்க வரமாட் டாங்க.....ஆனாலும்....''

''சொல்லுங்கண்ணா......''

''நடுத்தர வயது அம்மாவாக்கூட நடிச்சு ரசிகர்களை ஒரு ஆட்டு ஆட்டிடலாம். நம்ம ரசிகருங்க டேஸ்டே அப்படி....''

''அம்மாவா?'' அவள் சிணுங்கிக் கொண்டு கையை உதறினாள். முந்தானை நழுவிய தைக் கவனியாதவள் போல, ''வாணாம், நம்ம ரசிகர்ங்க திட்டுவாங்க.என்னைப் பாருங்கண்ணா. என்னைப் பார்த்தா அம்மா வேஷத்துக்கு பொருத் தமாவா தெரியுது....... நீங்க சொல்லுங் கண்ணா?'' என்றாள் என்னைப் பார்த்து.

எனக்குத் தர்ம சங்கடமாயிற்று. அண்ணா! நிச்சயமாக இவளைவிட எனக்கு வயது குறைவு. என[illegible]டைய தோற்றம் அப் படியா இவளுக்குத் தெரிகிறது? எனக்கு எரிச்சல் உண்டாயிற்று.

நாகராஜன் என்னை விஷமமாகப் பார்த் தான்.

''அண்ணா, நீங்க மனம் வெச்சீங்கன்னா முடியும். அம்மா காரெக்டரை அக்காவாக் கிடுங்க.....''

நாகராஜன் யோசித்தான்.

''கூல்டிரிங்ஸ் சாப்பிடுங்கண்ணா, அண்ணாச்சி நீங்களும் சாப்பிடுங்க......''

நான் எடுத்தேன்.

''சூட்டிங் எங்கேண்ணா?''

''குன்னூர்ல......''

''நல்ல இடந்தான். என்னண்ணா, அக்கா காரெக்டர்தானே குடுப்பீங்க.....''

''அதாம்மா யோசிக்கிறேன்.''

''நாளைக்கு சாப்ட வந்திடுங்க. காரம் ஜாஸ்தியா இருக்கணும்னு தாயம்மாவுக்கு சொல்லணும்.''

நாகராஜனின் முகம் மலர்ந்து கனிவு கொண்டது.

''கரெக்டா ஞாபகம் வெச்சிருக்கே......''

''எத்தனை சீன்ல வரணும்? அதை சொல்லுங்க....''

''ரெண்டு ஷெட்யூலிலயும் - படம் முழுசும்......''

''ரொம்ப தேங்ஸ் அண்ணே...... நீங்க வந்தது ரொம்ப சந்தோஷம்......''

திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவன் போல நாகராஜன் கேட்டான்: ''யாரம்மா உன் வீட்ல? ரெண்டு பொண்ணுகள் வந்தாங்களே! உன் பொண்ணுகளா? இல்ல தங்கச்சிங்களா? பீல்டுக்கு கொணாந்திடுவமா?''

ஜெகன்மோகினியின் முகம் இலேசாகச் சுருங்கியதை நான் கண்டு கொண்டேன். வெகு சாதாரணமாக அவள் பதில் கூறினாள்: ''அது என்னோட பெரியம்மா பொண் ணுங்க......''

பின்னர் நாகராஜன் 'அக்ரிமெண்ட் பார'த்தில் அவளிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டு, ஆயிரத்தி ஒரு ரூபா அடங்கிய கவரை அவளது கையில் கொடுத்தான். ஜெகன்மோகினி அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டு, கவரில் இருந்த இரண்டு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, நாகராஜனின் கையைப்பிடித்து, உள்ளங்கைக்குள் வைத்து விரல்களை மூடினாள்.

''வாணாம்மா.....''என்றவாறு அவள் கையைப் பற்றி நோட்டுகளை அவளின் கைக்குள் திணித்தான் நாகராஜன்.

''ஆசையோட தர்ரனில்லை......'' அவள் சிணுங்கினாள். எனக்கு அவர்களைப் பார்க்க சங்கடமாயிருந்தது. தலையைக் குனிந்து கொண்டேன்.

''சரி...... அப்போ நான் வரட்டுமா?''

''நாளைக்கு வந்திடுங்கண்ணா.''

நான் கூறியவணக்கத்தை ஜெகன் மோகினி புன்னகையோடு ஏற்றுக் கொண்டே, ''அண்ணா, உங்கபேர் என்ன சொன்னீங்க?'' என்றாள். நான் சொன்னதும்''சுவீட் நேம்'' என்றாள். எனக்கு எல்லாமே மறந்து போயிற்று அந்தக் கணத்திலே.

கார் பாதி வழி வந்ததும்தான் ரசீது புத் தகத்தை ஜெகன்மோகினியின் வீட்டிலே விட்டுவிட்டு வந்திருப்பதை நான் அறிந் தேன். நாகராஜனிடம் சொன்னேன். நாக ராஜன் எரிச்சலோடு என்னைப் பார்த்தான்.

''தெரியுமே..... எனக்குத் தெரியுமே. அவ மாராப்பு நழுவினப்பவே நீ எதையாவது வுட்டுட்டு வந்திடுவேன்னு நான் நெனைச் சேன்...... டிரைவர் காரைத் திருப்புப்பா.....''

கார் ஜெகன்மோகினி வீட்டு வாசலில் நின்றது.

இருவரும் உள்ளே சென்றோம்.

ஜெகன்மோகினி உரத்த குரலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தாள். இரண்டு பெண்கள் அழுது கொண்டிருந்தனர்.

''ஏண்டி வெளியில வந்தீங்க? நான் சொல்லியிருக்கேன் இல்ல, வெளியில வரக்கூடாதுன்னு.''

''அம்மா அடிக்காதீங்கம்மா, அடிக்காதீங் கம்மா. இனி வெளியில வர மாட்டம்மா.''

''சூடு வைக்கணும்டி உங்க காலுக்கு......''

''அம்மா வேணாம்மா....... வேணாம்மா..... வந்தவங்க கேட்டப்போ நான் உங்களை 'அவங்கன்னு' தான் சொன்னனம்மா........''


ஜெகன்மோகினி பெருமூச்சு விட்டாள்.

''ஒங்களைப் போல பொண்ணுக இருக்கிறாங்கண்ணு தெரிஞ்சா என்னை பாட்டி வேஷத்துக்குக் கூட கூப்பிடமாட் டாங்கடி. அப்புறம் சோத்துக்கு என்னாடி பண்ணுவீங்க? நீங்க வாசப்பக்கம் போனீங்க, கால்ல சூடுதான் வைப்பேண்டி......''

சொல்லியவளின் குரல் இப்போது தளதளத்தது. விம்மி விம்மி அழுகிறாள் என்பது தெளிவாகவே தெரிந்தது. நாக ராஜன் என்னைப் பார்த்தான். சம்பந்தா சம் பந்தமில்லாதது போல, ''பொய் சொன்ன வாய்க்குத்தான் சினிமாவில போஜனம் கிடைக்கும் சாமி'' என்று விட்டு அசிங்கமாகச் சிரித்தான்........

*(நன்றி:*
*''அவளுக்கு நிலவென்று பெயர்''*
*சிறுகதைத் தொகுப்பு)*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 29



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

[illegible]ப்பம்:..........................................

**இடமிருந்து வலம்**

1. அருச்சுனன் மகன்.
5. பாடல், பாடியவன், குரங்கு அனைத்துக்கும் இது பொருந்தும்.
7. போற்று.
8. பிரி.
10. போதை தருவது.
11. அச்சுக்குக் கொண்டு வருதல்.
13. அந்தக் காலத்தில் பதியும் தாள் இது தான்.
14. கட்டடத்தை இது தாங்கும்.
15. இரத்தல்
17. வாழ்.
19. துணிச்சல் காரன்.
21. பெருக்கல் குறி.
22. சிலை.
24. அறுப்பது இதனால்.
25. விடாய்.

**மேலிருந்து கீழ்**

1. மரியாதை கெடுத்தல்.
2. தாமதமாகு.
3. சந்திரன்.
4. இளம் பெண்.
6. காலிலும் இருக்கும்; கையிலும் இருக்கும்.
9. கிடுகுவேலி அடைக்க இது அவசியம்.
11. துயில் கொள்.
12. குளிர்மையைக் குறிக்கும்.
13. மற்றைய.
16. வாழ்க்கை வரலாறு.
17. விதியின் தன்மை.
18. நோன்பு.
20. முனிவர்கள் மற்றும் பெரியோர் கோபத்தில் வழங்குவது.
23. ஒரு வகை மாவு.

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*
*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*
*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*
*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*
*5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.*
*அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*
*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 29**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

*என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (08.10.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக் கலாம்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.29இல் வெற்றிபெற்றோர் விவரம் 12.10.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 27 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) ஆகமம் (4) தமது (7) பரல் (8) தண்ணளி (9) யுகம் (11) நார் (12) பாவித்த (13) தாள் (14) தம்பதி (17) தரம் (19) தயங்கு (20) வதி (21) பகர் (22) வெகுளி (23) பொன்

**மேலிருந்து கீழ்**

(1) ஆபத்பாந்தவன் (2) கர (3) மல்யுத்தம் (4) தண் (5) மணநாள் (6) தூணிர் (8) தம் (10) கதம் (13) தாதியர் (15) பதகளி (16) நகுலன் (18) ரதி (21) பகு

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோ சனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 27 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
**திருமதி கிருஷொனி றோமன்ட் ,**
*அத்துளு அம்மன் கோயிலடி*
*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

**2 ஆம் பரிசு**
**ச.சரோஜா,**
*இல: 100, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.*

**3 ஆம் பரிசு**
**வ.இரத்தினசிங்கம்,**
*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.*

**பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) சி.ஜெயமாலா,**
'தெய்வநிழல்'
மல்வம், உடுவில்,
சுன்னாகம்.

**(2) திருமதி. எம்.ஏ.ஜி. பத்மதாசன்,**
இல: 72, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**(3) திருமதி. எஸ். ரதி,**
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**(4) உ.அப்சரா,**
'திருப்புகலி'
கைதடி கிழக்கு,
கைதடி.

**(5) கெ.தேமதுரா,**
உடுவில் மகளிர் கல்லூரி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டில் இளம் விஞ்ஞானிகளின் திறனை வெளிச்சம் போட்டுக் காட்டிய புத்தாக்கக் கண்காட்சி

தீப்பெட்டி மழையில் நனைந்தாலோ தண்ணீரில் விழுந்தாலோ பின்னர் அதனை உபயோகப்படுத்த முடியாது. இனி அந்தக் கவலையை விடுங்கள். தன்னுடைய மூளை வளத்தைப் பிரயோகித்து நனைந்தும் எரியக்கூடிய தீப் பெட்டியைக் கண்டுபிடித்து புத்தாக்கப் போட்டியின் கனிஷ்ட பிரிவின் தங்கப்பதக்கத்தைத் தட்டிக் கொண்டிருக்கிறார். உடுப்பிட்டி அமரிக்கன் மிஷன் பாட சாலை மாணவன் வி.விபூசணன்.

எமது கல்வியும் பொருளாதார நிலையும் வீழ்ச்சியடைந்து வருவதான கவலை யாழ். மக்களிடம் உண்டு. இலங்கை தேசிய புத்தாக்குநர் ஆணையகமும் கல்வி அமைச்சும் இணைந்து நடாத்திய புத்தாக்கக் கண்காட்சியைப் பார்த்தவர்கள் முன் சொன்ன வீழ்ச்சி உண்மையல்ல என்கிறார்கள். இந்தக் கண்டுபிடிப்பாளர்களுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் குடா நாடு உச்சத்தில் இருக்கும்


வீட்டுக் கேற்றைத் திறக்கும் போது நீரிறைக்கும் அமைப்பு


இலகு தேங்காய் துருவி

என்பது அவர்களது வாதம்.

கண்காட்சி இருவகைப்படும். ஏற்கனவே பாவனையில் உள்ள பொருள்களின் வடிவங்களின் மாதிரி வடிவங்களைச் செய்து காட்சிப்படுத்துவது ஒருவகை. நமது கண்டுபிடிப்புக்களான பலதரப்பட்ட உபகரணங்களை அவை கூறிய முறையில் இயங்கிக் கொண்டிருக்கத்தக்கதாகப் பார்வையாளர்களுக்கு அதன் பயன்பாடுகளைப் புலப்படுத்துவதாக காட்சிப்படுத்துப்படுவது இன்னொரு வகை. இந்தவகைக் கண்காட்சிகளில் வைக்கப்படும் கண்டுபிடிப்புக்கள் சந்தைகளைப் பிடிக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

பலதரப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் காட்சியில் இடம்பெற்றிருந்தன. திறந்த போட்டியில், வெளியில் இருந்தவாறே கதவின் உட்புறம் தாழ்பாள் போடக்கூடிய பொறிமுறை தங்கத்தை வென்றது. மரப் பலகைகளையும் சிறிய இரும்புக் கைப்பிடியையும் கொண்டதான இந்தக் கருவியின் துணையுடன் வீட்டின் உட்புறத்திற்கும் கதவுத் தாழ்பாளை வெளியே இருந்து போடுவதன் மூலம் வீட்டின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படுகிறது மிகவும் தேவையான ஒன்று இது. கலாநிதி என்.சிவயோகன் இதன் கண்டுபிடிப்பாளராவார்.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மாணவி எஸ். சிவவேனுஜாவின் கண்டுபிடிப்பு, கருவி மின் தூண்டலும் ஒளிர்வும். கணனிக் கருவிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இதற்கான செலவு 100 ரூபாவுக்கும் குறைவானது. மிகவும் குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட இது, கூடுதல் பயன்களைப் பாவனையாளருக்கு வழங்கும் என்று நம்பிக்கையுடன் குறிப்பிட்டார். எனினும் தற்சமயம் தனது படிப்பைத் தொடர வேண்டிய நிலையில் இந்தக் கருவியை சந்தைப்படுத்தும் அளவுக்குப் பெரும் எடுப்பில் செய்யப் போவதில்லை என்பதும் அவரது கூற்று. காய்கறிகளைச் சிறிய துண்டுகளாக விரும்பிய வடிவில் நறுக்கக் கூடிய கருவி உள்ளே பில்டர் போன்ற அமைப்பு இருப்பதால் மிக விரைவாகப் பாத்திரங்களில் வெப்பமேறும் இலகுரக சூட்டடுப்பு.

- நம்பி -

தானியங்கி முறையில் தண்ணீர்ப் பம்பியைக் கட்டுப்படுத்தும் கருவி, சிலைப் புற ஜெக்டர், இரவில் பயன்படுத்தக்கூடிய மூக்குக் கண்ணாடியென ஐம்பதுக்கும் அதிகமான புதிய கண்டுபிடிப்புக்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. பெரும் அவலங்கள், இழப்புக்கள் மத்தியிலும் எங்களால் நிமிர்ந்து நிற்கமுடியும் என்ற செய்தியைக் கண்காட்சி கூறுகிறது.


## உரிமங்களைப் பாதுகாத்து, பொருளாதார உதவிகளை புத்தாக்குநர்களுக்கு வழங்கச் சம்மந்தப்பட்டோர் முன் வரவேண்டும்

கண்டுபிடிப்பாளர்கள் தமது கண்டுபிடிப்புக்களில் நுட்பங்கள் குறித்த விளக்கங்களை வழங்கவில்லை. அதற்கு தமது ஆக்கங்களின் பொறிமுறை ரகசியங்கள் வெளியாகக் கூடாது என்பதே காரணம். இதற்கு முன்னர் யாழ். நகரில் எமது இளம் தலைமுறையின் ஒரு சில கண்டுபிடிப்புக்கள் அவர்களை அறியாமலே தென்பகுதியில் சந்தைக்கு வந்ததாகவும் தகவல்கள் கசிந்திருந்தன.

எமது மாணவர்களதும் புத்தி ஜீவிகளதும் கண்டுபிடிப்புக்கள் சந்தைப்படுத்தக் கூடியதாக மேலும் புது மெருகூட்டப்பட்டு வர்த்தக மயப்படுத்தப்படல் வேண்டும். கண்டுபிடிப்பாளர்களின் உரிமங்களைப் பாதுகாக்கவும் அவர்களை ஊக்குவிக்க நிதி உதவிகளை வழங்கவும் புத்தாக்குநர் ஆணையம் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கும் என்பதால் இரகசியங்கள் பேணப்பட்டு ஆணையத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்த இளம் விஞ்ஞானிகள் தமது ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் எமது பிரதேசத்தின் தேவைகளை நிறைவு செய்யவும் வாய்ப்புக்கள் உண்டு என்பது அதிகாரிகளின் கருத்து. புத்தாக்கிகளின் ஆக்கங்கள் வர்த்தக ரீதியாக வளர்த்தெடுக்கக் கூடியதாக அவர்களுக்கான உதவிகளை வழங்குவதன் மூலம் பிரதேசத்தில் தொழிலதிபர்கள் உருவாகவும் கண்டுபிடிப்புக்களுக்கான உரிமங்களை வசதி படைத்த


விரைவாகச் சூடேறும் நவீன உமியடுப்பு

வர்கள் வாங்கி பெரிய அளவில் உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலமும் எமது பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். இந்த உதவிகளின் மூலம் தமது ஆக்கங்களை மேம்படுத்தக்கூடியதாகவும் உற்பத்திகளின் தரத்தை உயர்த்தக் கூடியதாகவும் இருக்கும் என்பது பொதுவான கருத்தாகும். யுத்தத்தின் போது மின்சாரமற்ற நிலையில் சைக்கில் டைனமோவைப் பயன்படுத்தி வானொலி கேட்டதும் துணிகளைத் துவைக்க பனங்காய்க் களியைப் பயன்படுத்தியதும் சிக்கன விளக்


மின் தூண்டலால் ஒளிரும் கருவி

கும் எமது அனுபவங்கள். அப்போதய தேவையை ஒட்டிய ஒரு கண்டுபிடிப்புகள் அவை.

தற்சமயம் நடைபெற்ற புத்தாக்குநர் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த கருவிகளும் இன்றைய தேவையை ஒட்டிய கண்டுபிடிப்புக்களாகவே காணப்பட்டன. போரினதும் திட்டமிட்ட புறக்கணிப்பினா


வீட்டின் வெளிப்புறத்திலிருந்தே உட்பக்கக் கதவுக்குத் தாழ்ப்பாள் போடும் பொறிமுறை

லும் சீரழிக்கப்பட்டுவரும் எமது பிரதேசத்தில் கிடைக்கக் கூடிய அனைத்து வளங்களையும் பயன்படுத்தி தமது கண்டுபிடிப்புக்களைத் மேலும் நவீனமயப்படுத்தவும் புதிய புதிய கண்டுபிடிப்புகளைத் தொடரவும் எமது இளந்தலை முறையினரும் புத்திஜீவிகளும் உஷார் நிலையில் இருப்பின் யாழ். குடாநாட்டின் பொருளாதாரம் உயரும் இந்த அறிவு அதற்காகப் பயன்பட வேண்டும். ****************

# ஒல்லாந்தர் ஆட்சியின்போது நியமனம் பெற்ற முதலாவது உள்ளூர் மருத்துவர்

**1756 செப்ரெம்பர் 29**

இலங்கை கண்டல முதலியார் காலமான் நாளே மேலே குறிக்கப்பட்டிக்கிறது.

யாழ்ப்பாணம் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்த போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்தத் தளபதியின் மருத்துவராக தெல்லிப்பழையைச் சேர்ந்த டொன் ஜோன் கந்தப்பன் இலங்கை கண்டல முதலியார் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஒல்லாந்தரால் நியமனம் செய்யப்பட்ட முதலாவது உள்ளூர் மருத்துவர் இவரே. 1756 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 29 ஆம் திகதி இவர் காலமானார்.

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

இலங்கை கண்டல முதலியார் காலமானதையடுத்து தெல்லிப்பழையைச் சேர்ந்த பூலோகசிங்க முதலியார் பிலிப்பு குமாரவேலன் ஒல்லாந்த அரசால் அரச மருத்துவராக நியமனம் செய்யப்பட்டார். அரச மருத்துவருக்கு மாதாந்தம் ஒரு வெள்ளி சம்பளமாக வழங்கப்பட்டது. அத்துடன் அரச மருத்துவரின் தேவைகளைக் கவனிப்பதற்கென நான்கு அடிமைகளும் ஒல்லாந்தரால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மருத்துவர்கள் இருவரும் அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் புகழ் பெற்றிருந்தமையாலேயே தாம் இவர்களை அரச மருத்துவர்களாக நியமனம் செய்ததாக ஒல்லாந்த அதிகாரிகள் தமது மேலதிகாரிகளுக்கு அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

"டொன்" என்பது ஒல்லாந்த காலத்தில் ஒல்லாந்தரால் வழங் கப்பட்ட ஒரு பட்டம். இப்போதும் சிலர் தமது பெயருக்கு முன்னால் "டொன்" என்று குறிப்பிடுவதை அவதானிக்கலாம். இவர்கள் டொன் பட்டம் பெற்றவர்களின் பரம்பரையில் வந்திருக்கலாம்.*****

# இரக்கமுடையவராக மாற அழைப்பு

இறைவனின் இரக்கத்தின் மீது நம்பிக்கை வைக்கும் எந்தப் பாவியையும் இறைவன் புறக்கணிப்பதில்லை. இறைவன் ஒரு போதும் ஒரு பாவி சாக வேண்டும் என விரும்புவதில்லை. இதனால்தான் புனித மத்தேயு 21:28-32 இல் இயேசு மனம் திரும்பவிரும்பாத தலைமைக்குருக்களையும், மக்களின் மூப்பர்களையும் பார்த்து "வரிதண்டுவோரும், விலைமகளீரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுவர் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.




பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி கடவுள் தன்னை இரக்கத்தின் கடவுளாக வெளிப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம். இந்த உண்மை நாம் மனம் திரும்ப பெரும் தூண்டுகோலாக அமைய வேண்டும். இன்று நம்முள் பாவம் செய்யாதவர் யார்? "என்னிடம் பாவம் உண்டு என்று உங்களுள் யாராவது என்னிடம் குற்றம் சுமத்த முடியுமா?" என்று கேட்கும் அளவுக்கு நம்முள் யாரும் இயேசு இல்லை. நம்மிடம் பாவம் இல்லை என்போமானால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளுகிறோம். உண்மை என்பது நம்மிடம் இல்லை. நாம் எல்லோருமே பாவிகள். ஆகவே நாம் அனைவருமே மனம் திரும்பக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் வாழ விரும்பும் கிறிஸ்தவர்கள் முக்கியமாக போட்டி மனப்பான்மையையும், வீண் பெருமையையும் விட்டு விட வேண்டும் என்கிறார் புனித பவுல் (பிலி 2:3); ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இன்றைய சமுதாயத்தில் நாடு நாட்டையும், வீடு வீட்டையும், கணவன் மனைவியையும், மனைவி கணவனையும், சகோதரன் சகோதரியையும், சகோதரி சகோதரனையும் விழுங்க நினைப்பதற்குத் தலயான காரணங்களில் ஒன்று மனிதனின் மனதை ஆட்டிப்படைக்கும் போட்டி மனப்பான்மையும், வீண்பெருமையும் என்பது நமக்கு விளங்கும்.

எனவே கடந்த காலத்தை மறந்து, வரும் காலத்தில் மனம் மாறியவர்களாக இறைவனின் கட்டளைப்படி நடப்போம், புதுவாழ்வை வாழ்வோம். ஏனெனில் இறைவன் இரக்கமுடையவர். ஆகவே இரக்கமுடையவராக மாற, வாழ இறைவன் எங்களையும் அழைக்கின்றார்.

- நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்புத் திட்டம்
## சிலிங்கோ ஆயுள் நிறுவனம் - நெல்லியடி

2007ஆம் ஆண்டு அகில இலங்கையில் சிலிங்கோ ஆயுட்கிளைகளில் 1ஆம் இடம் என்ற பெருமையினை தன்னகத்தே தக்கவைத்துக்கொள்ளும் நெல்லியடிக் கிளைக்கான பின்வரும் வேலைவாய்ப்புக்கள்.

- எமது கிளையில் பணிபுரியும் ஊழியர்கள் 20 பேருக்கு மேற்பட்டோர் வெளிநாட்டுப் பயணங்களை நிறைவு செய்துள்ளனர்.
- அதிக உயர்விருதுகளைப்பெற்று சாதனையாளர் பட்டியலில் தமக்கென இடம்பிடித்துள்ளனர்.
- பல ஊழியர்கள் அதிகளவு வருமானம் பெற்று வாழ்க்கைத் தரத்தில் மாற்றம் கண்டுள்ளனர்.
- இவர்களில் பலர் படிப்படியான பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளனர்.
- எமது ஊழியர்கள் பலர் வாகன வசதிகளைப் பெற்றுள்ளனர். (மோட்டார் வாகனம் & கார்)



★A/L படித்துவிட்டு இருக்கிறீர்களா?...
★அதிகளவான வருமானத் தேவைகளை கொண்டுள்ளீர்களா?...
★வெளிநாட்டுச் சுற்றுலாவை விரும்புகிறீர்களா?...
★துடிப்புள்ள இளைஞர் யுவதிகளாக இருக்கின்றீர்களா?...

எம்முடன் இணைந்து கொள்வதற்கான தொடர்புகளுக்கு: 0212264183

### பதவி வெற்றிடங்கள்

பதவி - 01 விற்பனை அதிகாரி- ஆயுள் (Sales Executive Life)
பதவி - 02 விற்பனை ஆலோசகர் (Sales Consultant)

### தகைமைகள்

★வயதெல்லை 18 - 50 வரை
★G.C.E. (O/L) 6 பாடங்களில் சித்தி
★G.C.E. (A/L) பரீட்சைக்குத் தோற்றியவர்கள்
★தனியார் மற்றும் அரச துறைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்

★இவை அனைத்தையும் பெற எம்முடன் இணையும் சந்தர்ப்பம் இதோ...

01.10.2008, 02.10.2008ஆம் திகதிகளில் நேரில் சமுகம் தரவும்
நேரம்:- காலை 9.30 தொடக்கம் 12.00 மணி வரை
இடம்:- சிலிங்கோ ஆயுட் பகுதி,
கார்த்தியேசு பில்டிங்,
நெல்லியடி.

(78810)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



73,சாஸ்திரியார் வீதி,
அரியாலையைச் சேர்ந்த
செல்வகுருநாதன் -சைலேஸ்வரி
தம்பதியரின் செல்வப் புதல்வி
**செவ்விதா 156** புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்துள்ளார்.



45, சாஸ்திரியார் வீதி,
அரியாலையைச் சேர்ந்த
தர்மலிங்கம் -ஜெயமாலா தம்பதியரின்
செல்வப் புதல்வன் **பாஷிகன் 130**
புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்துள்ளார்.

இவர்களை நன்னெறிப்படுத்தி உந்துசக்தியாக இருந்த சென்பெனடிற் பாடசாலை அதிபரான அருட்சகோதரி **மேரி மரியமலர் ஜோசப்** அவர்தம் ஆசிரியர் **ஜெயபாரதிக்கும்** ஆசிரியர் குழாமையும் பாராட்டுவதோடு, மேன்மேலும் எமது செல்வங்கள் பல்கலையும் கற்று மேன்மையுற வேலவன் துணைவேண்டி எமது நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

குணரட்ணம் இராசதுரை- தாத்தா,
சுதாகரன் -மாமா,
ஜனு -அக்கா.

சாஸ்திரியார் வீதி,
அரியாலை.

(சி/554870)


INTERNATIONAL SCHOOL MANIPAY
சர்வதேச பாடசாலை மானிப்பாய்





# மரண அறிவித்தல்



## அப்பையா சிறீகரன்

மண்கும்பானைப் பிறப்பிட்மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா சிறீகரன் 25.09.2008 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அமரர் அப்பையா மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர் செல்லத்துரை மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் இராசாத்தி அம்மாவின் அன்புக் கணவரும் பிரதீபா, பிரசாந்தன், பிரதாபன், பிரகீதா ஆகியோரின் அன்புத் தந்தையும் வர்ணகுலசீலனின் அன்பு மாமனாரும் நகுலேஸ்வரன் (நியூ நகுலா ஜுவெல்லறி, நியூ லலிதாஸ் ஜுவெல்லறி யாழ்ப்பாணம்), புலேந்திரன்(சுவிஸ்), செல்வராணி, பாஸ்கரன் (ஜேர்மனி), உதயராணி (ஜேர்மனி), தயாபரன் (உதயா ஜுவெல்லறி, யாழ்ப்பாணம்), இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரணியா, யனூஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் மைதிலி, சிறீமலர் (சுவிஸ்), தேவகுமார், ஜெயந்தி (ஜேர்மனி), அருட்சோதி (ஜேர்மனி), உமாதேவி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல. 65, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இல 65, புதுவீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழர் நாகரிகம்; இவற்றின் மேம்பாட்டை முதன்மைப்படுத்தி வாழ்ந்து காட்டியவர் அறிஞர் அண்ணா



**பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் செப்ரெம்பர் பதினைந்தாம் திகதியாகும். அண்ணாவுக்கு 99 வயது பூர்த்தியாகி நூற்றாண்டு தொடக்கத்தை இப்போது தமிழகத்தில் உள்ள பல அரசியல் கட்சிகளும் தடல்புடலாகக் கொண்டாட ஆரம்பித்துள்ளன.**

அறிஞர் அண்ணாவை தமிழ் நாட்டின் முதல்வராக இருந்தவர் என்ற வகையில் மட்டும் உலகத் தமிழர்கள் பார்ப்பதில்லை. தமிழர் தகைமையை, தமிழர் பெருமையை எடுத்துக்கூறி தமிழன் எங்கு வாழ்ந்தாலும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான ஆதாரங்களை முன்வைத்து முழக்கம் செய்தவர் அவர்.

காஞ்சிபுரத்தில் சிறிய கிராமமொன்றில் திரு.நடராசன் பங்காரு அம்மாள் தம்பதியினருக்கு 1909ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி அண்ணா பிறந்தார். ஆனால் அவரை வளர்த்தெடுத்த பெருமை எல்லாம் அவருடைய சிற்றன்னை இராசமணி அம்மையாரையே சாரும். சிற்றன்னையாரை 'தொத்தா' என்றே சிறு வயது முதல் அண்ணா அழைப்பது வழக்கம்.

அண்ணாவிடம் அமைதியும் பொறுமையும் சிறுவயது முதலே குடிகொண்டிருந்தமைக்கு சிற்றன்னையின் வளர்ப்பே காரணம் என்பார்கள்.

காஞ்சிபுரத்திலுள்ள பச்சையப்பா தொடக்கப் பள்ளியில்தான் அண்ணாவின் பள்ளி வாழ்க்கை தொடங்கியது. அங்கேயே உயர் நிலைப்பள்ளி இறுதிவரை கல்வி பயின்றார்.

அவருக்கு அபாரமான ஞாபகசக்தி இருந்தது. ஒருமுறை படித்தால் அதை ஒருபோதும் மறக்கமாட்டாராம். பார்ப்பவர்களுக்கு பள்ளி நூல்களையே தொடாது விளையாட்டுப் பிள்ளை போல் காணப்படுபவர். தேர்வுகளில் புள்ளிகளை ஏனைய மாணவர்களைவிட அதிகமாகப் பெற்று குவித்துவிடுவாராம். என்றாலும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் இரண்டுமுறை தவறிப்போய் பிறகுதான் அதனை நிறைவு செய்ததாக அவரே கூறியுள்ளார்.

மேல்படிப்பைத் தொடர்வதற்கு பொருளாதாரம் இடம்கொடுக்காமையால் காஞ்சிபுரத்திலேயே நகராட்சிமன்றத்தில் சிலகாலம் எழுத்தராகப் (Clerk) பணிபுரிந்துள்ளார். பின்னர் பிற்பட்ட சமூகத்தினருக்கு வழங்கப்படும் சலுகையின் பேரில் அரசினர் செலவில் மேல்படிப்பைத் தொடர்ந்தார்.

தனது பட்டப்படிப்பினை சென்னையில் மேற்கொண்டு வந்தார். பெரிய பெரிய நூல்களைக் கற்று பல்வேறு துறைகளில் அறிவுபெற்று வளரத் தொடங்கினார். உலக வரலாறு, அரசியல், பொருளாதாரம், இலக்கியம், நிலநூல், பொது உடைமைக் கோட்பாடுகள் பற்றிப் படித்து ஆராய்ந்து தெளிந்தார். தான் சார்ந்த சமுதாயத்தை செப்பனிடுவதுதான் இவரது கல்வியின் நோக்கமாக இருந்திருப்பதைக் காணமுடிகின்றது.

தமிழை முறைப்படி கற்று அது சார்ந்த இலக்கியங்களை கற்று தமிழ் மாணவனாகத் திகழ்ந்தவர். இலக்கியங்களில் கூறப்படும் பண்புக்கும் நிலைக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதை கண்டார். ஓர் இனம் பிறிதொரு இனத்தை அடக்கி ஆள்வதை அவரால் சகிக்க முடியாது. வீழ்ந்த இனத்தை எழுச்சியுறச் செய்திடவேண்டும் என்று உறுதிபூண்டார்.

இந்துமதத்தின் மீது அண்ணாவுக்கு அதீத பற்றில்லை. சன்யாட்சன் செய்கையை மேற்கோள் காட்டுவதனூடாக தமிழகத்திலே ஒரே கடவுள் வழிபாட்டை தமிழ்நெறி அடிப்படையில் வலியுறுத்தியவர். அதனடிப்படையில் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற பழந்தமிழ் கோட்பாட்டை மீள்ச்சியுறச் செய்ய உழைத்தார்.

1930ஆம் ஆண்டில் வைதீக முறைப்படி அண்ணா திருமணம் செய்தார். 1934ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் எம்.ஏ.பட்டத்தைப் பெற்று வெளியேறினார். இவரது உள்ளம் ஏழை எளியவர்கள், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் போன்றவர்களது வாழ்க்கையை செழிப்படையச் செய்யவேண்டும் என்பதையே நோக்காகக் கொண்டிருந்தது. அதனடிப்படையிலேதான் இவர் தமிழக அரசியலில் - பொதுவாழ்வில் - ஈடுபாடுகொள்ள முனைந்தார்.

### நீதிக்கட்சியில்

நீதிக்கட்சியில் அண்ணா சேர்ந்தார். இந்த வேளையிலே நீதிக்கட்சியில் பணக்காரர், பதவி வேட்டையாடுபவர்கள், படாடோபக்காரர்கள், இலட்சியப்பற்று இல்லாதவர்கள் என்றவாறு பல்வேறு வகையினர் நிறையவே காணப்பட்டனர். ஆனால் அவர் அத்தகையவர்களது கருத்துகளுக்கு உடன்போகாது தனது இலட்சியத்தையே குறிப்பாக உணர்த்த தன்வாழ்வை அர்ப்பணித்து உள உறுதியுடன் செயற்பட்டு வந்தார்.

### பெரியாரின் தொடர்பு

பெரியாரின் போராட்ட கேந்திரமாக காஞ்சிபுரம் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. அதாவது பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி வந்ததும் பிராமணர் அல்லாதவர் மாநாடு காஞ்சியிலே கூட்டப்பட்டது. இவைகளைக் கண்ணுற்ற அண்ணாவின் மனதை இவை வெகுவாகப் பாதித்து, இலட்சியக் கல்வியும், ஆழ்ந்த நூற்படிப்பும் அவரைத் தீர்க்கமான முடிவு ஒன்றினை எடுக்க வைத்தது எனலாம்.

தமிழகத்தின் இருண்ட சூழ்நிலை தோன்றியதால் அவர் தமிழர்களிடையே பதுங்கியிருந்த சிறப்பியல்புகளை கட்டியெழுப்பி அவர்களுக்கு சிந்திக்கவும், செயலாற்றவும் வழிகாட்டியாக விளங்கினார். அந்தவகையில்தான் தமிழகத்தின் தனித்தன்மைகளையும் சமூகசீர்திருத்தக் கொள்கைகளையும் வலியுறுத்தி வந்த நீதிக் கட்சியில் சேர்ந்தார். 1925ஆம் ஆண்டு தொடக்கம் சமூக மறுமலர்ச்சிக்கும், தமிழர் நலனுக்கும் பாடுபடும் பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு "என் பொதுவாழ்வில் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் பெரியார்" என்று கூறியவர்.

பெரியாரும் அண்ணாவும் வேறுவேறு வழிகளில் வந்து ஒன்றாக இணைந்தவர்கள். அதாவது காங்கிரசுக் கட்சியில் பணியாற்றிய பெரியார் அங்கு நிலவும் வருணாசிரம முறை பிடிக்காமையால் வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டவர். ஆனால் அண்ணா தமிழக வரலாற்றைத் தெளிவாக உணர்ந்து மறுமலர்ச்சியுற்ற புதிய தமிழகம் காண்பதற்காக அரசியலில் நுழைந்தவர்.

தனிச்சிறப்பு வாய்ந்த தமிழினத்தை எழுச்சி பெறச் செய்யவேண்டும். ஆரிய தேசத்தால் மறைக்கப்பட்ட தமிழ்நெறிமுறைகளை மீண்டும் தழைக்கச் செய்யவேண்டும் என்ற பெரும் ஆர்வம்கொண்டு செயற்பட்டவர். வருணாசிரமக் கோட்பாடுகளை முற்றிலும் எதிர்த்தார்.

### இனவழிச் சிந்தனையை உருவாக்கியவர்

தமது பேச்சாலும் ஆற்றலாலும் மக்களிடம் புதிய ஆர்வத்தையும் எழுச்சியையும் ஊட்டியவர். தனது கொள்கைமீதுகொண்ட உறுதியும் பற்றும் காரணமாகத் துணிச்சலுடன் செயற்படவும், இன்னல்களைத் தாங்கிக்கொள்ளவும் இவரால் முடிந்தது. அண்ணாவினது நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

தமிழர்கள் தனி இனம் என்பதையும், அவர்கள் மிகப்பழைய சிறப்புமிக்க நாகரிகத்தின் உரிமையாளர்கள் என்பதையும் ஊடுருவலால்தான் தமிழ் நாகரிகம் மாசுபடிந்துவிட்டது என்பதை விளக்கியவர்.

சமதர்மப் பூங்காவாக புதிய தமிழகத்தை உருவாக்கும் நோக்கில் முதலில் தமிழர்களிடம் இனவழிச் சிந்தனையை ஊட்டினார். அதனூடாக அவர்களின் எண்ணங்களை சிறந்த முன்னேற்றகரமான சிந்தனைப் போக்கிற்கு மாற்றினார்.

சமூகப் புரட்சியினூடாக இந்திய குடியாட்சியில் அதன் நிலையை உறுதிப்படுத்த முற்பட்டார். எனவே, புதுமைமிக்க புரட்சிவாதியாக உலகில் முதன்மையானவராகத் தென்பட்டவர் ஆவார்.

### தமிழ்மொழியின் அந்தஸ்து

தமிழ்மொழி ஆட்சிமொழியாக வரவேண்டும் என்பதே அண்ணாவின் கொள்கையாக அமைந்தது. ஆட்சிமொழி என்பதற்கே சரியான விளக்கம் தரப்படவில்லை என்பதை சுட்டிக் காட்டினார். ஆட்சியில் இருந்த இந்திமொழியைக் கடுமையாக எதிர்த்து பல்வேறு வகையான கருத்துக்களை முன்வைத்தார்.

மனித வாழ்வில் உழைப்பு முக்கியம் என்பதை சுட்டிக்காட்டியதனூடாக சோம்பல் என்ற சொல்லை தள்ளிவைத்தவர். "உழைக்காமல் வாழ்வதே புண்ணியவானுக்கு இலட்சணம்" என்ற பழம்பெரும் கோட்பாட்டை மறுத்து "உழைத்து வாழவேண்டும்" என வலியுறுத்தினார். அதாவது வாழ்வது உரிமை என்றால் உழைப்பது கடமை என்பதைச் சுட்டிக்காட்டினார். எனவே உழைப்பின் மூலம்தான் எந்தச் சமூகமும் முன்னேறமுடியும் என்று வாழ்ந்துகாட்டினார்.

### இந்தித் திணிப்பை எதிர்த்து நின்றார்

நீதிக்கட்சியிலிருந்துதான் இவரது அரசியல் பிரவேசம் துளிர்விடத் தொடங்கியது எனலாம். காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றவேளை இந்திமொழியை ஆட்சி மொழியாக திணிக்க முற்பட்டனர். இதனடிப்படையில் அண்ணாவை அரசியல் களத்தில் முழுமையாக இறக்கிவிட்டனர் என்றுதான் சொல்லவேண்டும். அவர் தன் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் ஏற்ப தமிழ் காக்கும் போராட்டத்தில் துணிவுடன் இறங்கிச் செயற்படத் தொடங்கினார். இதனூடுதான் முழுநேர அரசியல்வாதியானார்.

சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் மதித்துப் போற்றுபவர் அண்ணா. எனவே மக்களிடம் விழிப்புணர்ச்சி வேண்டும். இவ்வுணர்ச்சிதான் ஜனநாயகத்தின் தூண்டுகோல். ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி அவசியமென்று கூறியவர்.

எந்த விடயமானாலும் ஜனநாயக வழியிலே தீர்வுகாண முற்பட்டவர் என்றுதான் கூறவேண்டும். அந்தளவிற்கு இவர் ஜனநாயகத்தை மதிக்கும் ஜனநாயகவாதியாக செயற்பட்டவர். பாராளுமன்ற உரிமைகள், ஜனநாயக உரிமைகள் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழ்ந்தார். தன்னை வெறுத்துப் பிரிந்தவர்களை கொள்கைப் பிடிப்புடன் நெறிபிறழாமல் வாழ விரும்பி "எங்கிருந்தாலும் வாழ்க" என் வாழ்த்தினார். ஏனெனில் தனிமனிதனை அரசும் அல்லது எந்த ஓர் அமைப்பும் அடக்கி ஒடுக்குவதை அவர் விரும்பாதவர். தனிமனிதனுக்காகத்தான் அரசும் அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளதேயொழிய அவைகளுக்காக மனிதன் உருவாக்கப்படவில்லை என்பதுதான் அவரது கோட்பாடு எனலாம்.

"ஜனநாயகம் ஓர் அரசியல் அமைப்பு அல்ல ஆட்சிமுறை என்றளவில் முடிவதல்ல; அது ஒரு வாழ்க்கை முறை" என்பதை நடைமுறை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டிய பெருமை இவரையே சாருகின்றது.

### மனிதாபிமானப் பண்பு

மனிதகுலத்தின்மீது ஆழ்ந்த பற்றும் பாசமும் கொண்டவர். தவறு செய்பவர்களிடமும், எதிரிகளிடமும் அனுதாபம் காட்டிச் செயற்படுபவர். "மன்னிப்போம்; மறப்போம்" என்னும் கருத்தே அவரது மனவெளிப்பாடாக அமைந்திருந்தது. மனிதர்கள் மனிதர்களாக, மனிதப் பண்புடன் வாழவேண்டும் என்று கூறுபவர். அவதிப்படும் மக்களின் கண்ணீர் துடைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்த "ஏழையின் கண்ணீரில் இறைவனைக் காண்கிறேன்" என்பார்.

வருணாசிரம கோட்பாட்டில் அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்களின் உள்ளக்கிடக்கையை வெளியில் கொண்டுவர முனைந்தவர். குழந்தைகளின் நல்வாழ்வுக்கு பாடுபட்ட மகானாக விளங்கியவர்.

### தமிழக முதல்வரானார் அறிஞர் அண்ணா

1967ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது பொதுத்தேர்தலில் அண்ணா தமிழக முதல்வராகப் பதவியேற்றார். "தமிழாய்ந்த தலைமகனே தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்" என்ற புரட்சிக் கவியின் கனவு நினைவாயிற்று. எண்ணற்ற தியாகச் செம்மல்களின் எண்ணங்கள் வெற்றிபெற்றனவாக அண்ணாவின் முதலமைச்சர் பதவி முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமைந்தது எனலாம்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற கோட்பாட்டின் வழியில்தான் அண்ணாவின் பொதுத்தொண்டுகள் அமைந்தன. பாராட்டு தலை விரும்பாதவர். அணிவகுப்பின் பெருமையை உலகிற்கு உணர்த்தியவர். தனிநபர் வழிபாட்டுக் கோட்பாட்டை முற்றுமுழுதாக உடைத்தெறிந்தமை அண்ணாவினது பெருமையினை எடுத்துக்காட்டுகிறது. மிகவும் எளிமையான முறையிலே அரசாங்க நிர்வாகத்தை நடத்திச்சென்ற பெருமைக்குரியவராக விளங்கியவர்.

### வெளிநாடுகளில் தமிழர் புகழ்

வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு நடைபெற்ற நிகழ்வுகளில் பங்குகொண்டு தனது கொள்கைகளை சரியான முறையில் முன்வைத்து பாராட்டுதல்களைப் பெற்ற பெருமைக்குரியவரானார்.

**தொகுத்தவர்: ந.யமுனா**

ஒவ்வொரு மொழியினமும் தங்கள் தங்கள் நாகரிகம் பண்பாட்டுக்கு ஏற்ப முன்னேறவும், கூட்டாட்சியில் இடம்பெற்று உலக அரங்கில் புகழ்ஈட்டவும் அண்ணா விரும்பினார். அவரது செயற்திறன்கள் அனைத்தும் இந்திய தேசத்தைக் கவர்ந்தது. புதிய சூழ்நிலைகள் மலர்ந்ததுடன் தமிழ்மக்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் நிலை வெகுவிரைவில் வரப்போகிறது என நம்பியிருந்தனர்.

இந்த காலகட்டத்தில்தான் எல்லோர் மனத்திலும் இடம்பிடித்த அண்ணா இவ்வுலகை விட்டே மறைந்து சென்றார். இவரது எதிர்பாராத மறைவு மக்கள் மனதில் பேரிடியாக விழுந்ததுடன் அமைதியடைந்தனர்.

அண்ணா இன்று நம்முடன் இல்லை; அவர் விட்டுச் சென்ற பணிகள் அப்படியே நின்றன எனலாம். அண்ணாவின் தமிழ் நெறியும், சமதர்ம இலட்சியங்களும் அறக்கொள்கைகளும் தமிழ் மண்ணில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே உறைந்து பதிந்து கிடப்பனவாகும். வள்ளுவன் கூட தனது ஒப்பற்ற குறள்பாக்களால் அக்கருத்துகளை உரமாக எடுத்தியம்பியுள்ளார். அண்ணா என்பது தமிழ் வரலாற்றில் கீர்த்திமிக்க பெயர். அவர் தமிழ் பண்பாட்டின் முழுமையான வடிவமாகத் திகழ்ந்தவர். ★

# தமிழகத்தில் கோயில்களுக்கும் பாதுகாப்பு

தமிழகத்தில் உள்ள கோயில்களுக்கும் இப்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தீவிரவாதிகளின் பார்வை இப்போது கோயில்களின் பக்கம் திரும்பியுள்ளமையே இந்த ஏற்பாட்டுக்குக் காரணம் என உயர் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருப்பதாக மத்திய உளவுத்துறைப் பொலிஸார் அனுப்பிய எச்சரிக்கைச் செய்தியின் எதிரொலியாக தமிழகம் முழுவதும் உள்ள முக்கிய கோயில்களுக்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

வடமாநிலங்களில் அகமதாபாத், டில்லி போன்ற நகரங்களில் தீவிரவாதிகள் வெடிகுண்டு வைத்துத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் ஏராளமானோர் பலியானார்கள். தீவிரவாதிகளின் அடுத்த தாக்குதல் கோவாவில் நடைபெறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. இதேபோல, தீவிரவாதிகளின் தாக்குதல் பட்டியலில் கொல்கத்தா, சென்னை போன்ற நகரங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், மத்திய உளவுப்பிரிவுப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதையொட்டி, சென்னையில் ஏற்கனவே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த படியாக ஆயுத பூஜை, தீபாவளி போன்ற பண்டிகை வரவிருப்பதால், தமிழகத்தில் உள்ள கோயில்களையும் தீவிரவாதிகள் தாக்கலாம் என்றும், மத்திய உளவுப் பிரிவுப் பொலிஸார் மீண்டும் எச்சரித்துள்ளனர்.

இதனால் தமிழகம் முழுவதும் உள்ள பிரபலமான 18 முக்கிய கோயில்களுக்கு 24 மணிநேரமும் துப்பாக்கி ஏந்[illegible] நிறுத்தப்பட்டுள்ளனர். சென்னையில் கபாலீஸ்வரர் கோயில், பார்த்தசாரதி கோயில், வடபழனி



முருகன் கோயில் ஆகிய கோயில்களில் பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். கண்காணிப்பு கமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், தஞ்சை பெரிய கோயில் போன்ற கோயில்களிலும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். கோயில்களுக்கு வரும் பக்தர்கள், பொலிஸாரால் சோதனை செய்யப்படுகின்றனர்.

ஆயுத பூஜை, தீபாவளி போன்ற பண்டிகைகள் முடிந்த பிறகும், அடுத்த டிசெம்பர் 6ஆம் திகதி பாபர் மசூதி இடிப்பு தினம், பொங்கல் பண்டிகை என்பன வருவதாலும், 2009 ஜனவரி 26 குடியரசு தினம் வரை இந்தப் பொலிஸ் பாதுகாப்புத் தொடரும் என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், உளவுப் பிரிவுப் பொலிஸாரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து, தமிழக சட்டம் - ஒழுங்கு பொலிஸ் டி.ஜி.பி. ஜயின் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் அதிகாரிகளுடன் முக்கிய ஆலோசனை நடத்தினார். தமிழகம் முழுவதும் பாதுகாப்பைப் பலப்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கடந்த புதன்று கருணாநிதி தலைமையில் சென்னை கோட்டையில் தமிழகத்தின் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை குறித்து ஆலோசனை நடந்தது. அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து கடந்த வியாழக்கிழமை டி.ஜி.பி. தலைமையில் நடந்த கூட்டத்திலும் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது.

கூட்டம் முடிந்ததும், டி.ஜி.பி. ஜெயின் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

அகமதாபாத் டில்லி போன்ற நகரங்களில் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்ததையொட்டி, மத்திய உளவுப்பிரிவு பொலிஸார் பொதுவான எச்சரிக்கைச் செய்தியொன்றை அனுப்பியுள்ளனர். தீவிரவாதிகள் எந்த இடத்தைத் தாக்குவார்கள் என்று குறிப்பிட்டு எந்த எச்சரிக்கைச் செய்தியும் வரவில்லை. நமது மாநில உளவுப்பிரிவுப் பொலிஸாரும் உஷார்படுத்தப்பட்டு தகவல்களைச் சேகரித்து வருகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள இயக்கங்களால் எவ்வித அச்சுறுத்தலும் இருப்பதாக இதுவரை தகவல் இல்லை. வெளியில் உள்ள தடை செய்யப்பட்ட சிமி போன்ற இயக்கங்களோடு தொடர்புள்ள சில இயக்கங்களால் ஆபத்து வரலாம் என்று எச்சரிக்கைச் செய்தி வந்துள்ளது. இதையொட்டி, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை. தமிழகம் பாதுகாப்பாக உள்ளது. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி (28.09.2008)



எங்கள் அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய குடும்பத் தலைவன்

**அமரர் ஞானப்பிரகாசம் ஜேசுதாசன்**

(முன்னாள் நடத்துனர், இ.போ.ச.பருத்தித்துறைச் சாலை)

**மண்ணில்: 18.10.1948 விண்ணில்: 29.08.2008**

29.08.2008 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருவருள்,
நாவலடி, உடுப்பிட்டி.

(78800)

**குடும்பத்தினர்.**

---

# உள்ளத்தை உறைய வைத்தேம் உறவுகள் பறந்தோடிய எட்டாம் ஆண்டு நினைவலைகள்....





**அமரர் கணபதிப்பிள்ளை யோகலிங்கம்**
ஜனனம்: 05.11.1948

அஸ்தமனம்
26.09.2000
திதி: சதுர்த்தசி

**செல்வி யோகலிங்கம் தமிழரசி**
ஜனனம்: 23.05.1975

பாரபுகழ நாம்வாழ
பக்குவமாய் வழிகாட்டி
பாதிவழி எமைவிட்டு
பரிதவித்துச் சென்றீரே!

தந்தையொடு சோதரியும்
தனியராய் நாம் தவிக்க
தனிமையாய் இறையடி சேரவைத்த
கொடிய ஷெல்லின் தாண்டவம்.

ஆண்டுகள் எட்டைக் கண்டதுவோ?
எட்டல்ல எண்பது சென்றாலும்
ஆறாது எம் துயரம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சந்தை வீதி,
கொடிகாமம்.

(78775)

**குடும்பத்தினர்.**

---

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்.28

மீள்பரிசீலணைக்கு அழைக்கப்பட்ட பட்டதாரிகள் சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சரைச் சந்திப்பதற்கு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்குப் பெருமாள் கோயிலுக்கு அருகில் ஒன்று கூடுமாறு பட்டதாரிகள் செயற்குழு கோரியுள்ளது.

(60)

## சிறுவர் தின விழாக்கள்

வடமராட்சி, செப்.28

பருத்தித்துறைப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளால் ஐந்து இடங்களில் சிறுவர் தின விழாக்கள் எதிர்வரும் புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளன.

கெருடாவில், திக்கம், காந்தியூர், கற்கோவளம், குடத்தனை ஆகிய இடங்களில் அந்தந்த முன்பள்ளிகளால் சிறுவர் தின விழாக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(202-236)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலைக்கு

**திருமதி ஜெகதீஸ்வரி அருள்மயம்**

அவர்களை 29.07.2008ஆம் திகதி தொடக்கம் அதிபராக நியமித்ததையிட்டு எமது சங்கம் பாராட்டி ஏகமனதாக கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியது.

**திருமதி ஜெகதீஸ்வரி அருள்மயம்**

அவர்கள் எமது பாடசாலையின் ஸ்தாபகராகிய அம்பலவாண நாவலரின் வழித்தோன்றல் என்பதையிட்டும் எமது பாடசாலையின் முதற்பெண் அதிபராக நியமிக்கப்பட்டதையிட்டும் எமது பாடசாலையில் ஆசிரியராக 13 வருட காலமாக சேவையாற்றிய அவரது தகைமையைக் கருத்திற்கொண்டும் இவ் ஆசிரியையை அதிபராக நியமித்தமை பாராட்டுக்குரியதாகும். இவரது அதிபர் நியமனம் கல்விச் சமூகத்தினை மேம்படுத்துவதாகக் கருதுகின்றோம். அத்துடன் பாடசாலைச் சூழலில் உள்ளவரை அதிபராக நியமித்தமை பாராட்டுக்குரியதாகும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
**யா/வட்டு இந்துக் கல்லூரி,**
சித்தன்கேணி.

(78744)

**செயலாளர்.**

---


# யாழ். மக்களுக்கு மலேஷியாவில் ஓர் அரிய வாய்ப்பு

★குடியுரிமை வசதி செய்து கொடுக்கப்படும்.
★எந்த ஒரு வியாபாரமும் செய்யக்கூடிய இடவசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
★வீடுகள் / கடைகள் / அறைகள் விற்பனைக்கும், வாடகைக்கும் உண்டு.
★ஆண், பெண் இருபாலாருக்கும் கல்வித் தகைமைக்கு ஏற்ப வேலைவாய்ப்புப் பெற்றுத் தரப்படும்.
★இங்கு சிறுவர், முதியோர் பராமரிப்பு நிலைய வசதிகளும் செய்துகொடுக்கப்படும்.
★மலேஷியாவில் கல்வி கற்பதற்கு மாணவ, மாணவிகளுக்கு ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
**EURO FLIGHT & CARGO (PVT) LTD**
No. 296 - A/1 Galle Road, Colombo - 6.
T.P: 0772966901, 0060143275700


---

# மரண அறிவித்தல்

## இரத்தினசிங்கம் கிரிதரன்



யாழ். கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வை பிறப்பிடமாகவும் லண்டன் ஹரோவில் வசித்தவருமாகிய இரத்தினசிங்கம் கிரிதரன் (04.09.2008) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- இரத்தினம் தம்பதியரின் பாசமுள்ள பேரனும் இரத்தினசிங்கம் -மல்லிகா தம்பதியரின் கனிஷ்ட அருந்தவப் புத்திரனும் சுபாஜினியின் அன்புக் கணவரும் தயாபரன், சத்தியவாணி (வாணி), சுதர்ஷனி, சாயினி, சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சற்குணராசா, ஜீவகன், நீலகரன், சங்கீதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சக்திகிரீவன் (சகி), ஸ்வேதா, கவிநயா (கவி) ஆகியோரின் அன்பு மாமனும் சக்தி விதுரஷனின் (விதுரஷ்) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் லண்டன் கென்ரன் ஏசியன் பியூனரல் சேர்விஸ் (KENTON FUNERAL SERVICE) இல் இன்று (28.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 - 12.00 (லண்டன் நேரம்) வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர், மருமக்கள், பெறாமகள்.**

கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(78811)

---


# விஜயதசமி அன்று வித்தியாரம்பம்

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க BBS இன்
## மற்றுமொரு புதிய நல்லூர் வளாகம்

சர்வதேச தரத்திலான ஆங்கிலத்துடன் தமிழிலும்
## பாலர் பாடசாலை

PLAY GROUP 2-3 Years
MONTESSORI 3-4 Years
PRE-SCHOOL 4-5 Years

**விசேட நிகழ்ச்சிகள்**
English Concert, முத்தமிழ் விழா, ஒளி விழா, பட்டமளிப்பு விழா, Sports Meet
மாணவர் சித்திரம்/கைவேலைக் கண்காட்சி

சிறார்களுக்கு...
**Pre-Foundation**
**Foundation**
**Level 1,2,3,4**
படிப்படியாக ஆங்கில அறிவை விருத்தி செய்யும் 6 மாத கால பாடநெறிகள்.

G.C.E.(O/L), G.C.E.(A/L) கற்றோருக்கு..
**IELTS**
**Diploma in English**
**Certificate in English**



வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு வெளிநாட்டு / உள்நாட்டுத் தொழில் வாய்ப்புகளுக்கு சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு

**BRITISH BUSINESS SCHOOL**
**HOT LINE: 021-222 5796, 0773 627055**
e-mail: british.businessschool@gmail.com

நல்லூர் (வளாகம் 1) : இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
நல்லூர் (வளாகம் 2) : இல:34, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
மானிப்பாய் வளாகம் : இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய்.
சுன்னாக வளாகம் : லக்சுமி கோட்டேச் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
புலோலி வளாகம் : Dr.ஸ்ரீ பத்மநாதன் இல்லம், மந்திகை, புலோலி.

British BUSINESS SCHOOL
Where Students Come First



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழில் பேச முயல்வதை விட தமிழரோடு பேச முயன்றிருக்கலாம்

கடந்த புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் 63 ஆவது பொது அமர்வில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை முக்கிய பல செய்திகளை - அவரது அரசின் தீவிர நிலைப்பாட்டுப் போக்கு உட்பட்ட பல விடயங்களை - வெளிப்படையாகவே எடுத்தியம்பி நிற்கின்றது.

உலக நாடுகளின் பொதுமன்றமான ஐ.நாவில் போய் நின்றுகொண்டு "புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துத் தங்களின் போர் வலிமையைக் கைவிட்டு, ஜனநாயக வழிக்குத் திரும்பினால் மட்டுமே புலிகளுடன் பேச்சு, இல்லையேல் யுத்தம்தான் ஒரே மார்க்கம்" - என்று அவர் அங்கு முழங்கியிருக்கின்றார்.

இது, அமைதி வழித் தீர்வு இனிச் சாத்தியமே இல்லையென்ற போர்ப்பிரகடனமாகக் கருதப்படவேண்டிய அறிவிப்பாகும்.

இந்தத் திட்டவட்டமான அறிவிப்பின் மூலம், அமைதி முயற்சிக்கான கதவை இறுகச் சாத்தி, வலிமையான போர்ப்பூட்டை அதற்குப் போட்டுப் பூட்டி, தீர்வு என்ற அதன் திறப்பை மீண்டும் கைக்கு எட்டவேமுடியாத பாதாளத்திற்குத் தூக்கி வீசிவிட்டார் இலங்கைத் தீவின் ஜனாதிபதி என்றே கருத நேர்ந்திருக்கின்றது.

கடந்தஇரண்டரைதசாப்தகாலஇலங்கைஅரசின்போக்கை - குறிப்பாக விடுதலைப் புலிகளின் செயற் பாட்டை - உற்றுநோக்குபவர்கள் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

அது - ஈழத்தமிழர்களின் அபிலாசைகளை நிறைவு செய்யும் நியாயமான ஒரு தீர்வு எட்டப்பட்டு அது முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும்வரை தங்களுடைய உரிமைப் போருக்கான ஆயுத பலத்தை எந்த அழுத்தம் கருதியும் விடுதலைப் புலிகள் கைவிடவே மாட்டார்கள் என்ற யதார்த்தம்தான். அந்தக் கொள்கைப் பிடிப்பில் புலிகள் எவ்வளவு பற்றுறுதியும் திடசங்கற்பமும் கொண்டவர்கள் என்பது யாவருக்கும் புரிந்த விடயமே.

ஆகவே, புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு தமது போர்த்திறன்களைத் துறந்தால் மட்டுமே இனி அமைதிப் பேச்சு என்று அறிவிப்பதும் -

இனிப் பேச்சே இல்லை, இனிப் போர்தான் என்று பிரகடனப்படுத்துவதும் ஒன்றுதான்.

ஐ.நா. சபையின் கடந்த வருடப் பொது அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி அங்கு நடந்துகொண்ட தமது செயற்பாடுகள் மூலம் தென்னிலங்கைச் சிங்களத்தை 'மெய்சிலிர்க்க' வைத்தார்.

இலங்கையின் இதற்கு முந்தைய தலைவர்கள் ஐ.நா. பொதுச்சபை அமர்வு போன்ற சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில், உலக சமூகத் தலைவர்களுக்குப் புரியும் வகையில் ஆங்கிலமொழியிலேயே உரை நிகழ்த்துவது வழமையாக இருந்து வந்தது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ கடந்த வருட ஐ.நா. பொதுச்சபை அமர்வில் முற்றுமுழுதாக - சிங்களத்தில் - தமக்கு நன்கு பரிச்சயமான மொழியில் முழங்கி, சிங்கள மக்களைப் பேருவகையில் ஆழ்த்தினார்.

ஐ.நா. மன்றத்திலேயே தனிச்சிங்களத்தில் முழங்கி நம் மொழிக்குப் பெருமையை உலக மன்றத்தில் சேர்த்தார் நாட்டின் தலைவர் என்று தென்னிலங்கையின் பௌத்த - சிங்கள மேலாதிக்கம் அவரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது. சிங்களத்தில் பேசிய தமது அந்தப் பாவனை நடிப்பில் தென்னிலங்கையை அதிகம் மயக்கி வெற்றிகண்ட ஜனாதிபதி மஹிந்தர், அதே தந்திரோபாயத்தைத் தமிழர் மீதும் பிரயோகிக்கத் தீர்மானித்தார் போலும்!

இந்தத் தடவை ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் தமிழிலும் சில வார்த்தைகள் பேசினால் கடந்த வருடம் தென்னிலங்கைப் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தை மயக்கியமை போல வடக்குக் கிழக்குத் தமிழர்களையும் மயக்கிவிடமுடியும் என்று ஆட்சித் தலைவர் பகற்கனவு கண்டிருக்கின்றார் போலும்.

அதனாலேயே சில கருத்துகளை தமிழில் எழுதி, வாசித்துப் பாடமாக்கிச் சென்று அவற்றைத் தமது நீண்ட சிங்கள உரையின் மத்தியில் தமிழில் ஒப்புவித்திருக்கின்றார் அவர்.

ஆனால் படித்த - புத்திசாலிகளை அதிகம் கொண்ட - ஈழத்தமிழர் சமூகம், இந்த நடிப்புக் காய்ச்சல் தந்திரோபாயத்திற்கு நசிந்து கொடுக்கவில்லை. அந்த முயற்சிக்கு எடுபடவுமில்லை.

தமிழே தெரியாத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சில தமிழ் வாசகங்களைச் சிங்களத்தில் எழுதிப் பாடமாக்கித் தமது நியூயோர்க் உரையில் அவற்றைப் பிரயோகித்ததும், அதற்கு அப்படியே அடிமைப்பட்டு, பரவசப்பட்டு நிற்பதற்குத் தமிழர்கள் தரப்பு ஒன்றும் முட்டாள்கள் அல்லர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது ஐ.நா. உரையில் தமிழில் பேச முயற்சித்திருப்பதை விட, தமிழர் தரப்போடு தாம் பேசுவது குறித்து ஆக்கபூர்வமான - பயனுள்ள - வகையில் ஒரு கருத்தைக் கூறியிருப்பாராகில் அது இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காண்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கும்.

ஆனால், அமைதி வழியில் அல்ல, இராணுவ வழியிலேயே தீர்வு என்று விடாப்பிடியாக - பிடிவாதமாக - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருப்பதால், இத்தகைய 'தமிழ்ப் பேச்சு' தந்திரோபாய எத்தனம்தான் அவரிடமிருந்து வெளிப்படமுடியும்.

• சட்டியில் இருப்பதுதானே அகப்பையில் வரும்?

# புலமைப்பரிசில் முடிவுகளால் பாதிப்புற்ற பிள்ளைகளுக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு பெற்றோர் கோரிக்கை

## ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு தீர்வு தருவதாக அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், செப்.28

அண்மையில் வெளியான ஐந் தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் மூலம் எமது பிள்ளைகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை வெளிச்சமாகியுள்ளது. புள்ளியிடலில் நடந்த தவறுகள் காரணமாகவே எமது பிள்ளைகள் பாதிக்கப்பட் டுள்ளார்கள் என நாம் நம்புகின்றோம். எனவே எமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைக் கருத்திற்கொண்டு எமக்கு உரிய நிவாரணம் கிடைக்க சமூகசேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் ஒன்றுகூடி வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பான மகஜர் ஒன்றையும் நேற்று அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்தனர். இது தொடர்பாகத் தான் ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசி தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

பரீட்சை முடிவுகளினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்களில் 400 இற்கும் மேற்பட்டோர் நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் ஒன்று கூடினார்கள்.

கடைசி நேரத்தில் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியினாலும், தகுதியற்றவர்கள் விடைத்தாள்களை மதிப்பீடு செய்தமையாலும், புள்ளியிடலில் நடந்த சில குளறுபடிகள், தவறுகள் காரணமாகவும் தமது பிள்ளைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதாகக் கருத்துத்தெரி வித்தனர். சில பெற்றோர்கள் கண்ணீர் மல்கியவாறு தமது சோகத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

பரீட்சையில் சித்தியெய்திய, சித்தியெய்தாத மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டு தமது கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

இதன்பின்னர் அவர்கள் ஸ்ரான்லி வீதியில் ஸ்ரீதர் தியேட்டரில் அமைந்துள்ள சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்துக்குச் சென்றனர்.

இந்தப் பரீட்சை முடிவுகள் தமக்குப் பெரும் ஏமாற்றத்தையே தந்துள்ளதாகவும், இந்த விடயத்தில் தாங்கள் அதிக அக்கறை செலுத்தி எமது மாணவர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுத் தர வேண்டும் என பெற்றோர்கள் அமைச்சருடன் நடந்த வீடியோ உரையாடலில் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து தான் ஜனாதிபதியுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார். (50)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.28

தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீனத்தின் ஏற்பாட்டில் உலக சிறுவர், உலக முதியோர், உலக ஆசிரியர் தின நிகழ்வுகள் எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு தென்னிந்திய திருச்சபையின் நெடுந்தீவு பகற்பராமரிப்பு நிலையத்தில் நடைபெறவுள்ளன.

அருட்திரு ஆர்.யோண் செல்வம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் தென்னிந்திய திருச்சபை யாழ்.பேராயர் கலாநிதி டி.எஸ்.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (60)

# வத்திக்கான் பிரதிநிதியின் கருத்துக்களை தவறாகப் பிரசுரித்தமைக்கு அரசு மன்னிப்புக் கோர வேண்டும்

## ஜயலத் ஜயவர்த்தன கூறுகின்றார்

கொழும்பு, செப்.28

வத்திக்கானின் பிரதிநிதியாக இலங்கை வந்திருந்த கர்தினால் பிரான்ஸிஸ் அரின்சே தெரிவித்த கருத்துக் குறித்து அரச ஊடகம் தவறான தகவலை - உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டுள்ளது. எனவே தவறான செய்தியை வெளியிட்டமைக்கு வத்திக்கான் அரசிடம் மன்னிப்புக் கோரவேண்டும்.

இவ்வாறு பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாப்பரசரின் மக்கள் யாத்திரை அமையத்தின் தலைவர் அதி.வண. கர்தினால் பிரான்ஸிஸ் அரின்சே இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை கடந்த 16ஆம் திகதி மேற்கொண்டிருந்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கர்தினால் சந்தித்து உரையாடியபோது மடுமாதா தேவாலயம் தொடர்பான அவர் தெரிவித்த கருத்துகள் அரச இணையத்தளத்தில் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி கீழ்வருமாறு பிரசுரிக்கப்பட்டிருந்தது.

"வரலாற்றுச் சிறப்புமிக்க மடுமாதா தேவஸ்தானத்தை பயங்கரவாதிகளிடமிருந்து மீட்டெடுத்த செயற்பாடு தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமைதாங்கும் அரசிற்கு அனைத்து கத்தோலிக்க மக்களதும் நன்றி உரித்தாக வேண்டும் என வத்திக் கான் கர்தினால் பிரான்ஸிஸ் அரின்சே செப்ரெம்பர் 16ஆம் திகதி ஜனாதி பதியைச் சந்தித்த சந்தர்ப்பத்தில் கூறி யிருந்தார்".


ஆயினும் செப்ரெம்பர் 20ஆம் திகதி இலங்கை வத்திக்கான் தூதுவராலயத்தின் உத்தியோகபூர்வ ஊடக அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

"கௌரவ ஜனாதிபதியுடனான நட்புறவுடனான சந்திப்பின்போது மடுமாதா தேவஸ்தானம் தொடர்பாகவோ, வேறு எந்தவித அரசியல் தொடர்பான கருத்துக்களோ அதி.வண.கர்தினால் அவர்களால் வெளியிடப்படவில்லை."

இதற்கிணங்க அரச ஊடகத்தின் வாயிலாக இவ்வாறு உரோம் வத்திக்கானின் பிரதிநிதியாக இலங்கைக்கு வருகை தந்த கௌரவத்திற்குரிய சமயத் தலைவர் பெரும் தர்மசங்கடத்திற்குள் உட்படுத்தப்பட்டுள்ளார். உண்மையில் இது பெரும்கவலைக்குரிய விடயமாகும்.

தற்போதாவது அரச ஊடகம் உண்மையை எடுத்துக்கூறி தம்மால் வெளியிடப்பட்ட செய்தியை சரிப்படுத்தல் அவசியம். அவ்வாறே தவறான செய்தியை வெளியிட்டதற்காக வத்திக்கான் அரசிடம் மன்னிப்புக் கோருதலும் அவசியம் - என்றுள்ளது. (202)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழா நாளை ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப்.28

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 8ஆம் திகதி துகில் திருவிழாவும், 9ஆம் திகதி பாம்புத் திருவிழாவும், 10ஆம் திகதி கம்சன் போர்த் திருவிழாவும், 11ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 12ஆம் திகதி மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 13ஆம் திகதி காலை 9.15 மணிக்கு தேர்த்திருவிழாவும், 14ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 15ஆம் திகதி கேணித் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் நன்மை கருதி விசேட பஸ் சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் இருந்து மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயிலுக்கும், பருத்தித்துறையில் இருந்து தும்பளை ஊடாக வல்லிபுரக் கோயிலுக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து வல்லிபுரக்கோயில் ஊடாக பருத்தித்துறைக்கும் இந்தப் பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆலயத்துக்கு வரும் அடியார்களின் நன்மைகருதி ஆலய வீதிகளில் உள்ள அன்னதான மடங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

திருட்டுகளை தவிர்க்கும்பொருட்டு ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தங்க நகைகளை அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (202-78)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 13 | 29.09.2008 |
| | திங்கட்கிழமை |
| திதி: | அமாவாசை |
| | மு.ப. 01.50வரை |
| நட்சத்திரம் : | உத்தரம் |
| | மு.ப. 09.49வரை |
| அமாவாசை விரதம் | |
| சுபநேரம் : | 12.02 -01.32 |
| ராகுகாலம் : | 07.32 -09.02 |

# திருமறைக் கலாமன்றத்தின் கலைநிலா அரங்கு

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மாதாந்த நிகழ்வான கலைநிலா அரங்கு இன்று பிற்பகல் 4 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

அதன்போது ஆரம்ப நிகழ்வாக வன்னியில் துன்புறும் மக்களுக்காகப் பிரார்த்திக்கும் பஜனை வழிபாடு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும். கலை நிகழ்வுகளில் கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன, சங்கீத, மிருதங்க மாணவர்களின் அளிக்கைகளுடன் யோகா அளிக்கையும் இடம்பெறவுள்ளது.

சிறப்பு நிகழ்வாக பாஷையூர் வளர்பிறை நாடகமன்றம் வழங்கும் 'முத்தா மாணிக்கமா' என்னும் தென் மோடி நாட்டுக்கூத்தும் மேடையேற்றப்படவுள்ளது. (04)

# சர்வதேச வெள்ளைப்பிரம்புதினம்; யாழ்.மாவட்டத்திலும் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.28

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எதிர்வரும் 18 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள பார்வையற்றவர்களுக்கான அனைத்து நிறுவனங்களும் இணைத்து அன்றைய தினம் நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் இந்த நிகழ்வுகளைத் தலைமையேற்று நடத்தவுள்ளது.

மேலதிக விவரங்களை பெறவிரும்புவோரை யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் வெளியான தரம்-5 புலமைப் பரிசில் முடிவுகளால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் நேற்று யாழ். ப.நோ.கூ.ச. மண்டபத்தில் ஒன்று கூடியிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்திலும் பெற்றோர்களின் பிரதிநிதிகளை அடுத்துள்ள படத்திலும் காணலாம். பெற்றோரில் ஒருவர் உரையாற்றுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (செய்தி 19 ஆம் பக்கத்தில்)

## மனிதாபிமான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் கூட்டறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையிலேமேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வன்னியில் சிக்கியுள்ள மக்களின் நடமாட்டத்துக்கு அனுமதிக்குமாறு அவர்கள் விடுதலைப் புலிகளை கோரியுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுனும், சர்வதேச அபிவிருத்திக்கான உதவி அமைச்சர் டக்ளஸ் அலெக்ஸாண்டரும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியூயோர்க்கில் சந்தித்து இலங்கையின்வடக்கின் நிலைமை மோசமடைந்து வருவது குறித்துப் பேசினர். (அ-1)

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச் சம்பவத்தில் சதீஸ் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

காயமடைந்தவரின் விவரம் வருமாறு:

இரத்தினபுரத்தைச் சேர்ந்த சதீஸ் அருட்செல்வி (வயது 27), அவரின் மகன் சதீஸ் தனுசிகன், மகள் சதீஸ் தனுசிகா ஆகிய சிறுவர்களும், மாதக் குழந்தையான காந்தராசா துவாரகன், அவரின் தாயான காந்தராசா பவானி (வயது 36), மாணிக்கப்பிள்ளை மங்களேஸ்வரி (வயது 62), நாச்சிக்குடாவிலிருந்து இடம்பெயர்ந்து வட்டக்கச்சி நோக்கிச்சென்று கொண்டிருந்த கே.ஜெயந்தி ஆகியோர் படுகாயமடைந்தனர்.

அப்பகுதியில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் வதிவிடம் இருக்கின்றது. அதிலிருந்து சற்றுத் தொலைவிலிருக்கும் மக்கள் குடியிருப்பு மீதே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இரத்தினபுரம் பிள்ளையார் கோயிலும் மற்றும் 13 வீடுகளும் அழிந்துள்ளன. (அ-1)

## வன்னிமக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைதிவழிப் போராட்டத்திற்கே மகுடம் சேர்த்த இன்றைய பொழுதிலே கனேடியத் தமிழ் இளையோர் சமூகம் ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் 35 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் முழுமையான 30 மணித்தியால உண்ணாவிரத நிகழ்வுடன் இந் நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது. கவனயீர்ப்பிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்விலே சேகரிக்கப்படும் நிதியானது தாயகப்பகுதியிலே தற்போதைய இடம்பெயர்வால் அல்லலுறும் மக்களிற்கு அவர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

• மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் துணைவியார் ஈகைச்சுடரேற்றி உண்ணாவிரத கவனயீர்ப்புப் போராட்டத்தினை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து உண்ணாநோன்பில் கலந்துகொண்ட இளையவர்களால் அவர்கள் ஏன் இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்ற தமது விளக்கத்தை தெரியப்படுத்தினர். (அ-1)

## வன்னிக்கு 40.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேங்காய் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் லொறிகளில் ஏற்றப்படும். அவை எதிர்வரும் புதன்கிழமை ஓமந்தை சென்று சோதனைகளின் பின்னர் மறுநாள் வன்னிக்குள் செல்லும்.

இந்த உணவுப் பொருள் வாகன அணி ஓமந்தையில் இருந்து மாங்குளம் வரை ஏ-9 வீதியில் சென்று பின்னர் ஒட்டுசுட்டான் ஊடாகச் செல்லும். தருமபுரம், விசுவமடு, கண்டாவளை போன்ற பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கு நேரடியாக பொருள்களை வழங்கும் - என்று கோர்டன் வைஸ் மேலும் தெரிவித்தார்.

உணவு வாகனத் தொடர் அணி செல்லும் பாதை, செல்பவர்களின் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை - இந்த வாகன அணியுடன் அரசின் சார்பிலும் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## அரச உணவுக் களஞ்சியங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட சர்வதேச தொண்டு நிறுவனங்கள் அவற்றின் பாதுகாப்புக் கருதி, வன்னியை விட்டு வெளியேறவேண்டும் என்று அரசாங்கம் இம்மாதம் எட்டாம் திகதி அறிவித்திருந்தது. மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் 15 ஆம் திகதி வரை அவகாசம் விதித்தார்.

இத்தகைய சூழ்நிலையில், வன்னி மக்கள் தொண்டு நிறுவனங்களை வெளியேற வேண்டாம் என்று முற்றுகைப் போராட்டம் நடத்திய போதிலும் ஐ.நா.தொண்டர் அமைப்புகள் ஆகக் கடைசியாக இம்மாதம் 16 ஆம் திகதி வெளியேறின. அதன் உடனடித் தாக்கமாக நிவாரணப் பொருள்கள் கூடக் கிடைக்காத மிகவும் ஆபத்தான பட்டினிச்சாவு நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர்.

மிகவும் ஆபத்தான மனிதாபிமானப் பிரச்சினை உருவெடுத்துள்ள இன்றைய நிலை குறித்து கிளிநொச்சி அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கொழும்பு வந்திருந்த சமயம் நேற்று அவருடன் தொடர்பு கொண்டு கேட்டோம்.

அவர் நிலைமையைப் பின்வருமாறு விளக்கினார்:

கிளிநொச்சி மாவட்டத்தில் அறுபது சதவீதமான பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து விட்டனர். மொத்தம் 1,42,000 பேர் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று தங்கி உள் ளனர்.

அரச களஞ்சியங்களில் கையிருப்பில் இருந்த அத்தியாவசிய உணவுப் பொருள்கள் முற்றாகத் தீர்ந்துவிட்டன. அதனால் நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் - செப்ரெம்பரின் - முதல் வாரத்தில் நிவாரணம் வழங்கப்பட்டது.

ஆனால் அதன் பின்னர் நிவாரணம் வழங்க முடியாத நிலையில் உள்ளோம்.

இது குறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம். உணவுப் பொருள்களை அனுப்ப அவர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரச நிவாரணம் வந்து சேர்ந்ததும் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க உடன் ஏற்பாடு செய்யப்படும்.

இதற்குப் புறம்பாக உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்கள் - வவுனியா களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களை - கிளிநொச்சிக்கு எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தப் பொருள்கள் வந்து சேரும் பட்சத்தில் மக்களின் உணவுப் பிரச்சினைகள் ஓரளவு நீங்கும்.

கிளிநொச்சிச் செயலகம், கிளிநொச்சி ஆஸ்பத்திரி உட்பட முக்கிய அரசாங்கத் திணைக்களங்கள் தொடர்ந்தும் கிளிநொச்சியிலேயே இயங்குகின்றன. பாடசாலைகளும் இயங்க ஆரம்பித்துள்ளன. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பல பாடசாலைகளில் இருந்து அவர்கள் வெளியேறியதால் அவை இயங்க ஆரம்பித்துள்ளன - என்றார் அரச அதிபர். (அ-1)

## தற்கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுதாரி பயன்படுத்தும் அங்கி, இரவு தூர நோக்குக் கண்ணாடி , பற்றறிகள் உட்பட பல பொருள்கள் மீட்கப்பட்டன எனப் பொலிஸார் மேலும் தகவல் வெளியிட்டனர்.

வெடிபொருள்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இருவரைக் கைது செய்து விசாரணை செய்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-1)

## கிளிநொச்சியிலிருந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி இத் தகவலைத் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற விமானத்தாக்குதலில் காயமடைந்தவர்களில் இருவரை மேலதிக சிகிச்சைக்காக உடனடியாக வவுனியாவுக்கு அனுப்ப முடியாமல் போனமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே டாக்டர் இத் தகவலைத் தெரிவித்தார்.

அவசர நோயாளர்களை வவுனியாவுக்கு கூட்டிச்செல்வதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் வழித்துணையை வைத்தியசாலை நிர்வாகம் கோரியதாகவும் ஆனால் அவர்கள் தம்மால் வழித் துணை வழங்க முடியாது எனத் தெரிவித்துவிட்டனர் - என்றும் டாக்டர் சத்திய மூர்த்தி மேலும் கூறினார். (அ-2)


அதிரடி சலுகையுடன் அட்சயா தவணை முறை கட்டணவசதி

★ பேசியல் (10 விதமானவை)
★ சிகையலங்காரம் (நவீன கொண்டைகள்)
★ Perming (தலைமுடி சுருட்டுதல், தலைமுடி அயன் பண்ணுதல்)
★ ஐசிங் கேக், ஐசிங் பூக்கள்
★ பெயின்ரிங் (வெற் சீட் பெயின்ரிங், சாறி வேக் 5 விதமானவை)
★ கை வேலை (6 விதமான பொம்மைகள், டெலிபியர் நாய்க்குட்டி அமைப்பு)
★ பூ வேலை (அழகிய பூச்செண்டு அமைத்தல், பூக்கூடை அமைத்தல்)

மேற்படி பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. மேலதிக விவரம் நேரில்.

(றிச் கேக் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒன்று ரூபா 25 மட்டுமே)

அட்சயா
461, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

ANCHOR
Complete Electrical Solutions

இந்தியாவின் விற்பனையில் முதல்தரத்திலுள்ள ANCHOR TAPE தற்போது யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.




IMPORTED BY
ABBE (Pvt) Ltd
67 A WOLFENDHAL STREET,
Colombo - 13,
Tel: 2439993

DISTRIBUTED BY
JAFFNA ELECTRICALS
No.94(6)Stanley Road,, JAFFNA,
Tel: 021 2222353.

(நாடு பூராவும் உள்ள பிரபல்யமான மின்சாரப்பொருட்கள் விற்பனை நிலையங்களில் [illegible])

ஆசிரியர் வே.அன்பழகன் அவர்களின் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2009 வகுப்புகள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்,
யாழ்.இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்வி நிலையம்,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

அனுமதிகளை 30.09.2008 செவ்வாய்க்கிழமையிலிருந்து 04.10.2008 சனிக்கிழமை வரை பி.ப. 3.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணிக்குள் முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
குறிப்பு: மேலதிக விவரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

(78822) இயக்குநர்கள்.

காணி விற்பனைக்கு

திருநெல்வேலி - நாவலடி ஒழுங்கையில் சற்சதுரமான காணி விற்பனைக்குண்டு. பாதுகாப்பான, கௌரவமான சுற்றத்தைக் கொண்டது.

தொடர்பு: கஜன் குறூப், [illegible] திருநெல்வேலி.

இது தான் மாமூ!

| MS 01 | MS 02 |
|---|---|
| 1.6 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>15" Monitor<br>42,300/- | 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>15" Monitor<br>49,500/- |

| MS 03 | MS 04 |
|---|---|
| 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>17" Monitor<br>53,500/- | 2.0 GHz Dual core (Pentium)<br>Gigabyte Main Board<br>1GB DDR II<br>160GB HDD SATA<br>ATX Cabinet<br>DVD Writer (LG)<br>Key board<br>Optical Mouse<br>UPS<br>17" LCD Monitor<br>60,000/- |

MARSHA SYSTEMS (Pvt) LTD
NO-74, Kannathiddy Road, Jaffna
T.P- 021 222 9418


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org